March 2019

# தமிழ்

10-ம் ஆண்டில்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

ஐ தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

March 2019 சுவடி — 9
ஓலை — 1

## உள்ளே...



தேவை ஒரு மாற்றம்
பசுத்தோல் போர்த்திய சிங்கங்கள்
தகைமை இல்லா தலைமை
தீவிர வாதம் தேவை அல்ல
அருட் செல்வம்
காவிரி முதல் கங்கை வரை
சிவகாமியின் சபதம்
வேண்டும் ஈரம்
மருத்துவத் தமிழ்
தேனாறு பாயட்டும்

### வணக்கம் பல

**தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.'**

'பொய்க்காமல் விளையும் நிலங்களும் தகுதியுடையாரும் தாழ்விலாத செல்வரும் சேர்வது நாடு' என்னும் பொருள்பட ஒரு நாடானது எவ்விதத்தில் இருக்கவேண்டும் என இலக்கணம் வகுக்கிறார் அய்யன் வள்ளுவப் பெருமான்!

நாடு என்பதற்கான இலக்கணங்கள் அங்கே இயற்கை வளமும் மனித குலமும் சிறந்துவிளங்கும் படியாக பிற நாடுகளுக்கு முன்னுதாரணமாக திகழும் ஒரு நாடு புகழ்மிக்கதாக விளங்க அதனை ஆளும் தலைவர்கள் தகைமை சார்ந்தவர்களாக விளங்க வேண்டுமே தவிர பகைமை பாராட்டுபவர்களாக இருந்திடக் கூடாது!

தற்போது வெனிசுலாவில் இருக்கும் சூழல், பசியும் பஞ்சமும், பகைமை பாராட்டும் குணமும், அந்நாட்டின் பெயருக்குக் களங்கம் விளைவிப்பதோடு மட்டுமல்லாமல், அங்கே மக்கள் வாழத் தகுதியற்ற சூழலும் நிலவுகிறது. நிலைமை சீர்பெற உழைக்க வேண்டியவர்கள், அதைவிடுத்து உரிமைப்போர் சண்டையை தொடங்கினால், மேலும் நிலைமை மோசமாகக் கூடும்! இந்நிலையில் உலக நாடுகள் கூட்டாக இணைந்து வெனிசுலாவுக்கு உதவிட வேண்டும்!

தமிழ்த் திரையுலகில் தன் காவியப் படைப்புகளால் அமரத்துவம் பெற்ற ஆளுமை ஒருவர் அலங்கரிக்கும் அட்டைப்படத்துடன் இம்மாத 'அய் தமிழ்' பழமைக்குப் பாலமாய் புதுமைக்கு உரமாகும்படி பத்தாம் ஆண்டு துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் இத்தருணத்தில் 'அய் தமிழ்' இதழோடு கரம் கோர்த்திருக்கும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் எங்களது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறோம்!

ஒரு இணைய இதழ் பத்தாண்டுகள் தொய்விலாது குறித்த நேரத்தில் வாசகர்களின் பார்வைக்கு வருவது என்பது சாதனைக்குரிய ஒன்று! அத்தகைய சாதனையை எட்டிப்பிடித்திருக்கும் 'அய் தமிழ்' கடந்த ஒன்பதாண்டுகளாக எத்தனையோ பதிவுகளை ஆவணங்களாக்கி தந்திருக்கிறது. கடந்தகால தொகுப்புகளே வரலாற்றின் பக்கங்களாகும்! அத்தகைய வரலாற்றில் இடம்பிடிக்க நடைபோடும் நமது 'அய் தமிழ்' இதழைப் பத்தாம் ஆண்டுச் சிறப்பிதழாக உங்கள் முன்பு படைக்கின்றோம்! வரவேற்று மகிழுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# தேவை



## வெனிசுவேலாவில் என்ன சிக்கல்?

கடந்த சில ஆண்டுகளாகவே வெனிசுவேலாவில் அடிப்படைப் பொருட்களான உணவு மற்றும் மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

சிக்கல் தீவிரமான 2014 முதல், மக்கள்தொகையில் சுமார் 10% உள்ள 30 லட்சம் மக்கள் வெனிசுவேலாவை விட்டு வெளியேறியுள்ளனர் என்கிறது ஐ.நா. சுமார் மூன்று லட்சம் வெனிசுவேலா மக்கள் இறக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர்.




வெனிசுவேலாவின் முக்கிய வருவாய் ஆதாரமாக உள்ள அந்நாட்டின் அரசு எண்ணெய் நிறுவனமான பி.டி.வி.எஸ்.ஏ—க்கு எதிரான நடவடிக்கைகள் உள்பட, வெனிசுவேலாவுக்கு எதிரான பொருளாதார நடவடிக்கைகளை அமெரிக்கா எடுத்து வருகிறது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள வெனிசுவேலாவுக்குள் உதவிப்பொருட்களை கொண்டு வரும் நோக்கில், வெனிசுவேலா — கொலம்பியா எல்லையில் இருந்த ராணுவ வீரர்கள் சிலர் காவல் சோதனைச் சாவடிகளில் இருந்து வெளியேறியுள்ளனர் என கொலம்பியாவின் குடிவரவுத் துறை தெரிவித்துள்ளது.

கொலம்பியாவுக்கு வேலை தேடிச் செல்ல முயன்ற வெனிசுவேலா மக்கள் சிலரை எல்லையைக் கடக்க விடாமல் தடுக்க, அவர்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை எல்லையில் இருந்த காவல் படையினர் வீசிய சம்பவமும் இன்னொரு இடத்தில் நடந்துள்ளது.

மனிதாபிமான உதவிகளைச் சுமந்து வரும் சரக்கு வாகனங்களை வெனிசுவேலாவுக் குள் நுழைய அதிபர் நிகோலஸ் மதுரோ தலைமையிலான அரசு

# ஒரு மாற்றம்

தொடர்ந்து மறுத்து வருவதால் எல்லையில் பதற்றம் நீடிக்கிறது. கொலம்பியா உடனான எல்லையையும் வெனிசுவேலா அரசு பெரும்பாலும் மூடியுள்ளது.

வெனிசுவேலாவின் எதிர்க் கட்சித் தலைவர் குவான் குவைடோ மருந்து மற்றும் உணவுப்பொருட்களை உள்ளடக்கிய மனிதாபிமான உதவிகளை ஆயிரக்கணக்கான நோக்கில், தடுப்புகளை வெனிசுவேலா குடிமக்கள் சிலர் தாண்டி வருவதாக உள்ளூர் ஊடகங்கள் கூறுகின்றன.

வெனிசுவேலாவை விட்டு கொலம்பியாவுக்குள் செல்ல தங்களை அனுமதிக்குமாறு, எல்லையில் கூடியுள்ள மக்கள் காவல் படையினரிடம் மன்றாடுகிறார்கள்.



தன்னார்வலர்கள் மூலம் வெனிசுவேலாவுக்குள் விநியோகம் செய்ய உதவுவார்கள் என்று தெரிவித்தார்.

உதவிகளைச் சுமந்துவரும் சரக்கு வாகனங்களுக்கு வழிவிடுமாறு காவல் படையினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ள குவான் குவைடோ, "காவல் சாவடிகளில் இருந்து வெளியேறியவர்கள் தங்கள் கடமையைச் செய்யாமல் விட்டுச் சென்றவர்கள் அல்ல, மக்களுடன் இருக்கத் தேர்வு செய்தவர்கள்," என்று கூறியுள்ளார்.

கொலம்பியா செல்ல எல்லையைக் கடக்கும் எல்லையில் உள்ள காவல் சாவடிகள் மற்றும் கலவரத் தடுப்பு காவல் மையங்கள் மீது போராட்டக்காரர்கள் தீ மூட்டும் காட்சிகளும் வெளியாகியுள்ளன.

வெனிசுவேலாவின் எதிர்க்கட்சி தலைவர் ஹவான் குவைடோவை வெனிசுவேலாவின் இடைக்கால அதிபராக சில ஐரோப்பிய நாடுகள் அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளன. பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன் மற்றும் ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகள் இதில் அடங்கும்.

தங்களது நிலைப்பாட்டை

மாற்றியமைத்துக்கொண்டு இந்த நாடுகள் குவைடோவை அங்கீகரித்துள்ளன.

புதிதாக தேர்தலை நடத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த கோரிக்கையை அதிபர் நிக்கோலஸ் மதுரோ நிராகரித்ததையடுத்து சில நாடுகள் கூட்டு முடிவு எடுத்துள்ளன.




வெனிசுவேலாவில் என்ன சிக்கல்?

கடந்த சில ஆண்டுகளாகவே அடிப்படைப் பொருட்களான உணவு மற்றும் மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

சிக்கல் தீவிரமான 2014 முதல், மக்கள்தொகையில் சுமார் 10% உள்ள 30 லட்சம் மக்கள் வெனிசுவேலாவை விட்டு வெளியேறியுள்ளனர் என்கிறது ஐ.நா.

சுமார் மூன்று லட்சம் வெனிசுவேலா மக்கள் இறக்கும் அபாயத்தை எதிர் கொண்டுள்ளதாக குவைடோ கூறுகிறார்.




2013 முதல் பதவியில் இருக்கும் மதுரா, கடந்த ஆண்டு மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். எனினும், தேர்தல் முறைகேடு நடந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

வெனிசுவேலாவின் முக்கிய வருவாய் ஆதாரமாக உள்ள அந்நாட்டின் அரசு எண்ணெய் நிறுவனமான பி.டி.வி.எஸ்.ஏ—க்கு எதிரான நடவடிக்கைகள் உள்பட, வெனிசுவேலாவுக்கு எதிரான பொருளாதார நடவடிக்கைகளை அமெரிக்கா எடுத்து வருகிறது.


எதிர்க்கட்சியைச் சேர்ந்த தேசிய அவையின் தலைவர் குவைடோ தம்மை இடைக்கால அதிபராக ஜனவரி 23 அன்று அறிவித்துக்கொண்டார்.

வெனிசுவேலாவின் முக்கிய வருவாய் ஆதாரமாக உள்ள அந்நாட்டின் அரசு எண்ணெய் நிறுவனமான பி.டி.வி.எஸ்.ஏ—க்கு எதிரான நடவடிக்கைகள் உள்பட, வெனிசுவேலாவுக்கு எதிரான பொருளாதார நடவடிக்கைகளை அமெரிக்கா எடுத்து வருகிறது.

அமெரிக்கா மற்றும் சில லத்தீன் அமெரிக்க நாடுகள் ஏற்கனவே குவைடோவை ஆதரித்துள்ளன. மதுரோவின் முக்கிய ஆதரவாளர்களில் ஒருவரான ரஷ்யா, ஐரோப்பிய நாடுகளின் முடிவை, வெனிசுவேலாவின் உள் விவகாரங்களில் அயல்நாடுகளின் தலையீடு என விமர்சித்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வெனிசுவேலாவில் அதிகாரத்தை பிடுங்கப் பார்ப்பதாக கூறி ரஷ்யா கண்டித்துள்ளது.

குவைடோ இடைக்கால அதிபராக அறிவித்துக் கொண்டதை ஆதரிப்பது சர்வதேச சட்டங்களை




மீறுவதாகவும், ரத்தம் சிந்துவதற்கான நேரடிப்பாதை என்றும் கூறி ரஷ்யா கண்டித்துள்ளது.

இது குறித்துப் பேசிய ரஷ்ய வெளியுறவுத் துறை துணை அமைச்சர் செர்கெய் ரியாப்கோஃப், அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் ஏதோ சாக்குப் போக்கு கூறி ஆர்கனைசேஷன் ஆஃப் அமெரிக்கன் ஸ்டேட்ஸ் உள்ளிட்ட பல அமைப்புகளையும், வெனிசுவேலா மீது அழுத்தம் தருவதற்குப் பயன்படுத்துவதாக கூறினார்.

தென் அமெரிக்க நாடுகளான பிரேசில், கொலம்பியா, சிலி, பெரு, ஈக்வடார், அர்ஜன்டினா, பராகுவே மற்றும் கனடா ஆகியவை குவைடோ—வை அங்கீகரித்துள்ளன.

இந்நிலையில், வெனிசுவேலா எதிர்க்கட்சித் தலைவர் குவான் குவைடோ வெளிநாடு செல்ல தடை விதித்துள்ளது அந்நாட்டு உச்சநீதிமன்றம்.

வெனிசுவேலாவின் புகழ்பெற்ற அதிபரான ஹ்யூகோ சாவேஸ் 2013ல் இறந்தவுடன், அடுத்த அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார் நிக்கோலஸ் மதுரோ. கடந்த ஆண்டு மே மாதம் நடந்த தேர்தலில் அவர் மீண்டும் வெற்றி பெற்று அதிபராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

ஆனால், மே மாதத் தேர்தலை எதிர்க்கட்சி ஒன்று புறக்கணித்தது. தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாகவும் புகார்கள் எழுந்தன. இந்நிலையில், மதுரோவின் தேர்தல் வெற்றியை ஏற்க மறுத்த எதிர்க்கட்சித் தலைவரும், தேசிய சட்டமன்றத்தின் தலைவருமான குவான் குவைடோ, தம்மை தற்காலிகத் தலைவராக அறிவித்துக் கொண்டார்.




போராட்டத்துக்கும் அவர் அழைப்பு விடுத்தார். அவரை தற்காலிக அதிபராக அமெரிக்காவும் வேறு சுமார் 20 நாடுகளும் அங்கீகரித்தன. பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள், அவரை அங்கீகரிக்காவிட்டாலும், புதிதாக தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று தங்கள் நிலையைத் தெரிவித்தன.

அதே நேரம், அதிபர் நிக்கோலஸ் மதுரோவை ரஷ்யா, சீனா, துருக்கி மற்றும் சில தென்னமெரிக்க நாடுகள் உள்பட பல நாடுகள் ஆதரிக்கின்றன. வெனிசுவேலாவின் உள்நாட்டு விவகாரத்தில் வெளிநாட்டு சக்திகள் தலையிடக்கூடாது என்று அவை கூறுகின்றன.

இதற்கிடையில், குவான் குவைடோவை தற்காலிக அதிபராக அங்கீகரித்த அமெரிக்காவுடன் தூதரக உறவுகளைத் துண்டித்துக்கொள்வதாக அதிபர் நிக்கோலஸ் மதுரோ அறிவித்தார். அவரை ராணுவம் ஆதரிக்கிறது.

ஆனால், தங்கள் தூதர்களை வெளியேறச் சொல்லும் உரிமை மதுரோவுக்கு இல்லை என்று கூறிய அமெரிக்கா, தங்கள் தூதர்களுக்கோ,

குவான் குவைடோவுக்கோ அச்சுறுத்தல் ஏற்பட்டால் குறிப்பிடத்தக்க வகையில் அமெரிக்கா பதிலடி தரும் என்று அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டன் தெரிவித்தார். இந்நிலையில்தான் வெனிசுவேலாவின் உச்சநீதிமன்றம் குவைடோ வெளிநாடு செல்லத் தடை விதித்துள்ளது. அத்துடன் அவரது வங்கிக் கணக்கை முடக்கவும் உத்தரவிட்டுள்ளது.

ஏற்கெனவே ராணுவம், மதுரோ நிர்வாகத்துக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், நீதித்துறையும் குவைடோவுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்திருப்பது உள்நாட்டில் மதுரோவின் பிடி உறுதியாக இருப்பதையே காட்டுகிறது.








இதனிடையே, அமெரிக்கத் தூதர்கள் வெளியேறுவதற்கு விதிக்கப்பட்ட 72 மணி நேர காலக்கெடுவை விலக்கிக்கொண்ட வெனிசுவேலா வெளியுறவு அமைச்சகம், ஒரு மாதத்தில் இரு நாடுகளும் பரஸ்பரம் ஒரு நாடு மற்றதில் நல அலுவலகங்களை அமைத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்தது.

தூதரக உறவு இல்லாத இரு நாடுகள், அடிப்படையான தொடர்புகளுக்காகவும், தங்கள் நாட்டின் நலனைப் பாதுகாக்கவும், ஒன்று மற்றொன்றில் அமைத்துக் கொள்வதே நல அலுவலகங்கள் எனப்படும்.

இதனிடையே, வெனிசுவேலாவின் நன்மைக்காக தாம் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக அதிபர் நிக்கலோஸ் மதுரோ ரஷ்ய செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார்.

“வெனிசுவேலா சிக்கலைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட கனடா உள்ளிட்ட 14 நாடுகளைக் கொண்ட லிமா குழு என்ற அமைப்பு வெளி நாடு ஒன்று ராணுவ ரீதியில் வெனிசுவேலாவில் தலையிடுவதை எதிர்ப்பதாக” பெரு வெளியுறவுத் துறை அமைச்சர் நெஸ்டர் போபோலிஜியோ தெரிவித்துள்ளார்.

சிக்கலைத் தீர்ப்பதற்கான எல்லா வாய்ப்புகளும் பேச்சுவார்த்தை மேசையில் இருப்பதாக அமெரிக்க அதிகாரிகளும் கூறியுள்ளனர்.

# கருத்துப் ப(ா)டம்








# சொல்றாங்க... சொல்றாங்க...



*"ஜெயலலிதாவைவிட பெரிய தலைவர் எடப்பாடி பழனிச்சாமி!"*

**அன்புமணி ராமதாஸ்**

கோமாவில் இருந்த கோமாளி... கூத்தாடி வந்த கோமாளி!)



*"தமிழகத்தின் தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க வல்ல கட்சி எந்தக் கட்சியோ, அந்தக் கட்சிக்கே ஆதரவு!"*

**ரஜினிகாந்த்**


*(அட்ரா சக்கை! இப்படி சொல்லிட்டா... தேர்தல்ல யார் ஜெயிச்சு வந்தாலும் வாழ்த்து சொல்லிடலாம்! பரட்டை பிளான்! பக்கா பிளான்தான்!)*



*"தீவிரவாதத் தாக்குதலில் இந்தியா நீதிபதி போல, நடுவர் போல விளையாடுகிறது. ஆதாரமில்லாமல் பாகிஸ்தான் மீது குற்றம்சாட்டுகிறது. பாகிஸ்தான் பதிலடி கொடுக்காது என எண்ண வேண்டாம்!"*

**இம்ரான் கான்**

*(பௌலிங் போட்டா வாங்கிக் கட்டிப்போம்னு நல்லா தெரிஞ்சும் இப்படி புல்டாஸ் போடற பிரதம பௌலர் இவராத்தான் இருப்பார்!)*



*"உலகக்கோப்பையில் பாகிஸ்தான் அணியுடன் விளையாடவில்லை என்றால் இந்தியாவுக்கு இழப்பு ஏற்படும்!"*


**சுனில் கவாஸ்கர்**

*(விளையாட்டை விளையாட்டாதான் பார்க்கணும்! இந்த டீல் நல்லாருக்கு!)*

# பசுத்தோல் போர்த்திய

### காஷ்மீர்: புல்வாமா உயிரிழப்புகள் நமக்கு உணர்த்துவது என்ன?

இந்தியாவின் நிர்வாகத்தில் உள்ள காஷ்மீர் பகுதிக்கு 2018ஆம் ஆண்டு மிக மோசமானதாகவே இருந்தது. ஒரு பக்கம் இந்த தசாப்தத்தில் அதிகபட்ச அளவில் உயிர்ப்பலிகள் நடந்திருப்பது — அங்கு நிலவும் மோதல்களின் புதிய பரிமாணத்தைக் காட்டுவதாக இருந்தது. அடுத்தது அங்கே நிலவும் அரசியல் ஸ்திரமற்ற நிலை.



கடந்த ஆண்டில் காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் தீவிரவாதிகள், ராணுவத்தினர் மற்றும் பொது மக்கள் என மொத்தம் 361 பேர் கொல்லப்பட்டிருப்பதாக இந்திய உள்துறை அமைச்சகத்தின் ஓர் அறிக்கை தெரிவிக்கிறது. ஆனால் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஜம்மு காஷ்மீர் மக்கள் சமூகங்களின் கூட்டணி என்ற மனித உரிமைகள் அமைப்பு இந்த எண்ணிக்கை 586 என்று கூறியுள்ளது. 2008க்குப் பிறகு இதுதான் அதிகபட்ச எண்ணிக்கை என்றும், அந்த ஆண்டில் 671 பேர் கொல்லப் பட்டனர் என்றும் இந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.





எந்த எண்ணிக்கை சரியானது என்பதைப் பற்றி கணக்கில் கொள்ளாமல் பார்த்தால், கடந்த சில ஆண்டுகளில் படித்த உள்ளூர் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் போக்கு அதிகரித்து வருவதைக் காண முடிகிறது.

மோதல் நடைபெறும் சூழ்நிலைகளில் உள்ளூர் மக்கள் தீவிரவாதிகளுக்குப் பாதுகாப்பாக மேற்கொள்ளும் புதிய உத்திகள், ஆயுதம் ஏந்திய ராணுவத்தினர் ஏறத்தாழ தினமும் தேடுதல் வேட்டைகள் நடத்துவது ஆகியவை — தீவிரமான அரசியல் நெருக்கடியின் அறிகுறிகளாகக் கருதப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டில் தீவிரவாதிகளின் கமாண்டராகக் கருதப்பட்ட பர்ஹன் வானி கொல்லப்பட்ட பிறகு இந்தப் போக்குகள் அதிகரித்துள்ளன.

# சிங்கங்கள்

இந்தியாவின் நிர்வாகத்தில் உள்ள காஷ்மீர் பகுதியில் நீண்ட காலமாகவே நிலவும் அரசியல் ஸ்திரமற்ற நிலை, 2018ல் உச்சநிலையை அடைந்தது. அந்தப் பகுதி குறித்து மத்திய அரசின் கடினமான கொள்கைகளே இதற்குக் காரணம். இதனால் வன்முறை அதிகரித்துள்ளது.

''ஜம்மு —காஷ்மீரில், குறிப்பாக காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் இப்போதுள்ள சூழ்நிலையானது, அரசியல் அணுகுமுறையில்




உள்ள குழப்பத்தால் என்ன விளைவு ஏற்படும் என்பதற்கு தெளிவான உதாரணமாக உள்ளது,'' என்று டெல்லியைச் சேர்ந்த 'த பிரிண்ட்' இணையதளத்தின் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் மக்கள் ஜனநாயகக் கட்சியும் (பி.டி.பி.), மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சியும் (பா.ஜ.க.) சேர்ந்து அந்த மாநிலத்தில் கூட்டணி ஆட்சி அமைத்ததில் இருந்தே வன்முறைகள் அதிகரித்து வருகின்றன.

இரு கட்சிகளும் கொள்கை ரீதியில் எதிர் துருவங்களாக இருப்பவை — இந்திய அரசியல் சாசன வரம்புக்கு உள்பட்டு காஷ்மீர் மக்கள் விரும்பும் தன்னாட்சி நிலை என்பதை ஆதரிக்கிறது பி.டி.பி. ஆனால் அதுபோன்ற எந்த தனிப்பட்ட அந்தஸ்தும் தரக் கூடாது என்ற கொள்கையைக் கொண்டிருப்பது பா.ஜ.க.

காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்க வகை செய்யும், இந்திய அரசியல் சாசனத்தின்




370வது பிரிவை ரத்து செய்வதற்கு பாஜக மேற்கொண்ட முயற்சி காரணமாக, இந்திய ஆட்சிக்கு எதிராக போராட்டங்கள் அதிகரித்தன. இதனால் 2018 ஜுன் மாதம் பி.டி.பி. உடனான கூட்டணி முறிந்து, கூட்டணி ஆட்சி கவிழ்ந்தது.

அதன் பிறகு காஷ்மீர் மாநிலம் மத்திய ஆட்சியின் கீழ் வந்தது. ஆனால் வன்முறை மேலும் மோசமாகிவிட்டது — ``ஆபரேசன் ஆல் அவுட்'' என்ற பெயரில் தீவிரவாதிகளை ஒழிப்பதற்கு புதிய ஆட்சி நிர்வாகம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டதே இதற்குக் காரணம் என சில அரசியல்வாதிகள் கூறுகின்றனர். இந்தத் தீவிரவாதிகளில் பலரும் உள்ளூர் இளைஞர்களாக இருக்கின்றனர். ஆனால், அது போன்ற எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று,




காஷ்மீரில் உள்ள மத்திய ஆட்சி நிர்வாகத்தின் மூத்த பொறுப்பில் இருக்கும் ஆளுநர் சத்யபால் மாலிக் மறுப்பு தெரிவித்துள்ளார்.

''இந்தக் குழந்தைகள் (தீவிரவாதிகள்) திரும்ப வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அவர்களுக்காக என்ன செய்ய முடியுமோ அவற்றைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்,'' என்று 2019 ஜனவரி 15 ஆம் தேதி பி.டி.ஐ. செய்தி நிறுவனத்திற்கு மாலிக் கூறியதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இருந்தபோதிலும், ''இளைஞர்கள் இந்த தேசத்தை மிக கவனமாக நோக்குகிறார்கள். அவர்கள் படித்திருப்பதால், தீவிரவாதியாக மாறுவது என்பதுதான் முதலில் அவர்களுடைய மனதுக்குத் தோன்றுகிறது,'' என்று காஷ்மீர் மாநில முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா டெல்லியைச் சேர்ந்த ஹிந்துஸ்தான் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

இளைஞர்களிடம் நம்பிக்கையை உருவாக்கும் வகையில் மத்திய அரசிடம் கொள்கைகள் இல்லாதது அல்லது மாநிலத் தலைவர்கள் இல்லாதது ஆகிய காரணங்களால் இளைஞர்களின் கோபம் அதிகரித்துள்ளது. காஷ்மீர் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் இளைஞர்களாக இருக்கின்றனர்.

''இன்றைக்கு காஷ்மீர் இளைஞர்களுக்கு, தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது,'' என்று ஸ்ரீநகரைச் சேர்ந்த கிரேட் காஷ்மீர் என்ற பத்திரிகை கூறியுள்ளது.




''உதட்டளவில் கூறப்படும் உறுதிமொழிகளைக் கேட்டு இளைஞர்கள் வெறுப்படைந்துவிட்டனர். வாழ்வதற்கு நல்ல இடமாக காஷ்மீரை மாற்றுவதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்,'' என்று வேறொரு கட்டுரையில் அந்தப் பத்திரிகை கூறியுள்ளது. காஷ்மீர் மக்கள் பலரின் நம்பிக்கையைப் பெற்றிருந்த பிரிவினைவாத இயக்கமான ஹுரியத் மாநாட்டு கூட்டணி தலைவர்கள் மீது கடந்த சில ஆண்டுகளாக வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

'ஹுரியத் தலைவர்கள் திரும்பத் திரும்பத் தோல்வி அடைந்துவிட்டார்கள். பெரும்பாலான காஷ்மீர் மக்கள் அதை அறிந்திருக்கிறார்கள்'' என்று தேசிய அளவிலான 'டெய்லி ஓ' என்ற இணையதளத்தில் வெளியான ஜுனைத் கத்ஜுவின் கட்டுரையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. பிரிவினைவாதிகள் சிலர் இதை ஒப்புக்கொள்கின்றனர். ''இந்தச் சூழ்நிலையின் முன்னணியில் இருக்கும் இளைஞர்களை எங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை'' என்று பிரிவினைவாதத் தலைவர் மிர்வாஸ் உமர் பாரூக் கூறியுள்ளார்.

பல இளைஞர்கள் இப்போது வெளிப்படையாகவே தீவிரவாதிகளை ஆதரிக்கிறார்கள் — சமூக வலைத்தளங்களில் மட்டும் அவர்கள் நிற்கவில்லை. ராணுவத்தினருடன் மோதல் ஏற்படும்போதும் ஆதரவு அளிக்கிறார்கள். தாக்குதலில் சிக்கிக் கொள்ளும் தீவிரவாதிகளை மீட்பதற்கு முயற்சிக்கிறார்கள், அப்போது நடைபெறும் சண்டையில் உயிரிழக்கவும் செய்கிறார்கள். உண்மையில் தீவிரவாத குழுக்களில் சேரும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ``2017 ஆம் ஆண்டில் காஷ்மீர் இளைஞர்கள் 128 பேர் தீவிரவாத குழுக்களில் இணைந்தனர். 2016ல் இது 84 ஆகவும், 2015ல் இது 83 ஆகவும்,

2014ல் இது 63 ஆகவும் இருந்தது" என்று தேசிய அளவில் வெளியாகும் பைனான்சியல் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

மேலும் 2018 ஆம் ஆண்டில் மட்டும் உயர் கல்வித் தகுதி பெற்ற சிலர் தீவிரவாத குழுக்களில் சேர்ந்து, மோதல்களின்போது கொல்லப் பட்டிருக்கிறார்கள் என்று, தேசிய அளவில் வெளியான செய்திகளை மேற்கோள் காட்டுகிறார்கள். இந்தச் சூழ்நிலையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, மாநில இளைஞர்களை தீவிரவாத குழுக்களுக்கு தேர்வு செய்வதற்கு, உலக அளவில் இயங்கும் ஐ.எஸ். மற்றும் அல்—கொய்தா போன்ற தீவிரவாத அமைப்புகள் முயற்சி செய்கின்றன.

கடந்த சில ஆண்டுகளில் சில இளைஞர்கள் இந்த இரு ஜிகாதி அமைப்புகளிலும் சேர்ந்துள்ளனர். காஷ்மீர் பிரச்சினையை தேசிய இயக்கம் என்ற நிலையில் இருந்து ஷரியத் சட்டத்தை நிர்மாணிக்கும் பிரச்சினையாக மாற்றுவதற்கு தீவிரவாத அமைப்புகள் ரொம்பவும் சிரமப்பட வேண்டியிருக்கும் என்று நிபுணர்கள் பலர் கூறினாலும், இளைஞர்கள் இந்த அமைப்புகளில் சேர்ந்துள்ளனர்.

பூகோள ரீதியிலான அமைப்பு காரணமாகவும் சூழ்நிலை சிக்கலாக இருக்கிறது — காஷ்மீர் எல்லை பிரச்சினை குறித்து இந்தியா, பாகிஸ்தான் இடையே பலன்தரக் கூடிய தீர்வு ஏற்படாததால், எந்த முன்னேற்றமும் ஏற்படாததும் இதற்குக் காரணமாகக் கருதப்படுகிறது. இந்த ஆண்டின் பிற்பகுதியில் தேர்தலை எதிர்நோக்கியுள்ள காஷ்மீரில், — தேர்தல் தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றாலும் — தேர்தலுக்கு முன்னதாக வன்முறைகள் தொடரும் அல்லது மோசமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நெருக்கடி, ``கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு புதிய, மோசமான நிலையை ஏற்படுத்தும், அச்சுறுத்தலாக உருவாகும்" என்று த வெயர் இணையதளம் கூறியுள்ளது. அதிருப்தியில் இருக்கும் காஷ்மீர் இளைஞர்களுக்கான, மத்திய அரசின் கொள்கைகள் எதுவும் இல்லை.

ஜனவரி 9ஆம் தேதி காஷ்மீரைச் சேர்ந்த ஷா பசல் என்ற இளைஞர், செல்வாக்கு மிகுந்த இந்திய ஆட்சிப் பணி பொறுப்பில் இருந்து ராஜிநாமா செய்து, புதிய விவாதத்தை தொடங்கி வைத்துள்ளார். இந்தியாவுடன் இருக்கும் வரை காஷ்மீர் மக்களுக்கு நல்ல எதிர்காலம் கிடைக்காது என்று அவர் கூறியுள்ளார். ஆட்சிப் பணியில் சேர விரும்பும் காஷ்மீர் இளைஞர்கள் பலருக்கு பசல் முன்மாதிரியான நபராக முன்பு கருதப்பட்டார்.

ஆனால் காஷ்மீரில் "தொடர்ந்து நடைபெறும் கொலைகள்" சம்பவங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகக் கூறி அவர் ராஜிநாமா செய்துள்ளார். ஆனால் இது "பொய்களின் மூட்டை" என்று கூறி பாஜக மறுப்பு தெரிவித்துள்ளது.

ஆனால், ``அவருடைய அறிக்கையில் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையானவை. பாஜக அரசின் மீது குற்றஞ்சாட்டுபவை. அவருடைய கவலை மிகுந்த, உறுதியான குரலை உலகம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும்" என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ப. சிதம்பரம் கூறியுள்ளார்.

காஷ்மீர் தேர்தலுக்குப் பிறகு எப்படி இருக்கும் என்று இந்தியாவில் தேசிய அளவிலான தொலைக்காட்சி இணையதளத்தில் வெளியிட்டுள்ள கட்டுரையில், ``முந்தைய அனுபவங்களை வைத்துப் பார்த்தால், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு வந்தால் பெரிதாக எதுவும் நடந்துவிடாது" என்று கூறியுள்ளது. அரசியல் வாதிகளும், பிரிவினைவாதிகளும், ஒருவர் மீது இன்னொருவர் மீண்டும் ஒரு முறை குற்றச்சாட்டுகளைக் கூறுவார்கள். உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று இரு தரப்பினரும் குற்றஞ்சாட்டுவார்கள். காஷ்மீரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் மந்திரக் கோல் தங்களிடம் இருப்பதாக இரு தரப்பினரும் கூறுவார்கள்" என்று அந்தக் கட்டுரை முடிகிறது.




ஜம்மு — காஷ்மீர் மாநிலத்தில், வியாழனன்று, தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இந்தியாவின் மத்திய ரிசர்வ் காவல் படையினர் குறைந்தபட்சம் 46 பேர் கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவம் உலகம் முழுவதும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு முன்னர் கடந்த 2016ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜம்மு — காஷ்மீர் மாநிலத்தின் உரி என்னும் பகுதியிலுள்ள இந்திய ராணுவ முகாமின் மீதும், 2001ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஜம்மு காஷ்மீர் மாநில சட்டப்பேரவை வளாகத்தில் நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலையும் நினைவுக்கூறும் வகையில் இந்த தாக்குதல் உள்ளது. இருப்பினும், அவ்விரு தாக்குதல்களையும்விட இந்த தாக்குதல் அதிக திட்டமிடலுடனும், வீரியத்துடனும் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) நடந்த இந்த தாக்குதலை தொடர்ந்து, பிரதமர் நரேந்திர மோதி, மத்திய அமைச்சர்கள் அருண் ஜேட்லி, வி.கே. சிங் உள்ளிட்டோர், இந்த தாக்குதலை நடத்திய




“தீவிரவாதிகளுக்கு மறக்கமுடியாத பாடம் கற்பிக்கப்படும்,” என்பது போன்ற கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். இதுபோன்ற உயர் பொறுப்புகளில் இருப்பவர்கள் காஷ்மீரில் காலங்காலமாக இருந்து வரும் பிரச்சனையை புரிந்துகொள்ளவில்லை என்பதையே இது காட்டுகிறது

எல்லையில் தீவிரவாதிகளுக்கு எதிராகவும், கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ள ராணுவத்தினரின் பாதுகாப்பை உறுதிசெய்வது நாட்டின் முக்கிய அரசு பதவிகளில் இருப்பவர்களின் தலையாய கடமையாகும். எவ்வித தாமதமுமின்றி இந்த தாக்குதல் குறித்து தெளிவான விசாரணை நடத்தப்பட வேண்டும். அதாவது, இந்த தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர்களை கண்டுபிடிப்பதோடு, அந்த பகுதியில் இருந்த வலுவான பாதுகாப்பை மீறி இந்த தாக்குதல் எப்படி நடைபெற்றது என்பதை கண்டறிய வேண்டும்.

இந்த குறிப்பிட்ட தாக்குதலுக்கு பழிவாங்குவதற்கு எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் நீண்டகால அடிப்படையில் காஷ்மீரில் அமைதியை நிலைநாட்டுவதற்கு பயன்படாது. எனவே, இந்திய அரசாங்கம் இதுபோன்ற சம்பவங்களுக்கு அடிப்படையாக இருக்கும் விடயங்கள் சார்ந்த பதிலை கண்டறிய முனைய வேண்டியது அவசியம்.

காஷ்மீரில் செயல்படுத் தப்பட்டு வரும் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளின் தோல்வியையே இது காட்டுகிறது. காஷ்மீரில் தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிப்பதை விடுத்து, அதிகளவிலான தீவிரவாதிகளை




கொன்று குவிப்பதை வெற்றியாக கருதி செயல்படும் இந்திய பாதுகாப்பு அமைப்புகளின் செயல்பாடு அம்மாநில இளைஞர்களை திசை திருப்பியுள்ளது


போர்க்குணம் என்பது ஒருவித ஆழ்ந்த மனரீதியிலான பிரச்சனையின் வடிவம். மேலும், அது ஒரு தீர்க்கப்படாத, கண்டுகொள்ளப்படாத அரசியல் பிரச்சனை, ஜனநாயக உரிமை மீறல் மற்றும் மனித உரிமை மீறல்களின் புறக்கணிப்பு. எனவே, இந்தியா அரசாங்கம் இந்த பிரச்சனையை ராணுவத்தை மட்டுமே கொண்டு ஒடுக்குவதை தவிர்த்து, அரசியல்ரீதி யிலான முன்னெடுப் புகளையும் எடுக்க வேண்டும்.

தற்போது மத்தியில் ஆளும் பாஜக தலைமையிலான அரசாங்கம் காஷ்மீர் நிலவும் மோதல் நிறைந்த சூழ்நிலையை ராணுவத்தை மட்டுமே கொண்டு கையாள நினைத்ததால் அது பிரச்சனையின் வீரியத்தை மேலும் அதிகரித்துள்ளது. காஷ்மீரில் நிலவும் பிரச்சினைகளின் அடிப்படையை புரிந்துகொண்டு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் வரை, அங்கு இரத்தம் சிந்துவது நிறுத்தப்படுவதற்கு வழியேதுமில்லை.

ஆப்கானிஸ்தானில் தாலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சர்வதேச அளவில் முன்னெடுக்கப்பட்டுள்ள முயற்சியில் பங்கு வகிக்கும் இந்திய அரசாங்கம், தனது சொந்த நாட்டில் நிலவும் முக்கிய, நீண்டகால பிரச்சனை தொடர்பாக கிளர்ச்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயங்குவது ஏன்? என்ற கேள்வி எழுகிறது. தயக்கத்தை களைத்து இந்தியா பாகிஸ்தானுடனும், காஷ்மீரின் பல்வேறு தரப்பினருடனும், பேச்சுவார்த்தை நடத்துவதோடு மட்டுமின்றி, அம்மாநிலக்குள்ளேயே பல்வேறு விவகாரங்களில் ஒருமித்த கருத்து எட்டப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கு அயர்லாந்தில் வன்முறை வெடித்தபோது அதை பிரிட்டிஷ் அரசாங்கம் இணக்கமான செயல்பாடுகளின் மூலம் கட்டுக்குள் கொண்டுவந்ததை முன்னுதாரணமாக கொண்டு இந்திய அரசாங்கம் செயல்பட வேண்டும்.

புல்வாமா தாக்குதல் ஆயுத போராட்டத்தின் புதிய தொடக்கம் குறித்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. முன்னெப்போதும் இல்லாத வகையில், பல விதத்திலும் மோசமான தாக்கத்தை இந்த சம்பவம் ஏற்படுத்தியுள்ளது. காஷ்மீர் பற்றிய தவறான கொள்கைகள் நம்மை ஒரு ஆபத்தான சுழற்சியை நோக்கி தள்ளுவதுடன், இரண்டு தரப்பையும் சேர்ந்தவர்களின் உயிர்களையும் காவு வாங்குகிறது.


10
ANNIVERSARY
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
10th
Happy
Anniversary
10
Years

# தகைமை இல்லா

## டிரம்பால் ஏன் எதையும் உருவாக்க முடியவில்லை?

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆட்சிக்காலத்தில் சாதனை என்று சொல்லிக்கொள்ளும் வகையில் மிகப் பெரிய கட்டுமானம் எதையும் அவர் மேற்கொள்ளவில்லை; இப்படி மேற்கொள்ளாத முதல் அதிபர் அதிலும் குடியரசுக் கட்சியின் அதிபர் அவர் மட்டுமல்ல. பல







அதிபர்கள் உண்டு. ஆனால், ஆபிரகாம் லிங்கன் அதிபராக இருந்தபோது நில மானியங்களை




வழங்கி, கண்டங்களுக்கு இடையிலான ரயில் பாதையை உருவாக்கினார். தியடோர் ரூஸ்வெல்ட், பனாமா கால்வாய் வெட்டினார். ஐஸன்ஹோவரோ அமெரிக்க மாநிலங்களுக்கு இடையில் நெடுஞ் சாலைகளை அமைத்தார்.

அதிபர் டிரம்ப் இப்போது கட்ட விரும்பும் 'சுவர்' வித்தியாசமானது; அவரால் கட்ட முடியாது என்பதற்காக மட்டுமல்ல இதற்கு முந்தைய அதிபர்கள் மேற்கொண்ட கட்டுமானங்கள் அனைத்துமே மக்களை ஒன்று சேர்க்கவும் அவர்களுக்கும் நாட்டுக்கும் பயன்தரவும் உதவின. அமெரிக்காவையும் மெக்ஸிகோவையும் பிரிக்க டிரம்ப் கட்ட விரும்பும் பிரம்மாண்டமான மதில் சுவர் அமெரிக்கர்களையும் மெக்ஸிகர்களையும் மட்டுமல்ல, அமெரிக்கர்களுக்குள்ளேயேகூட பிளவை ஏற்படுத்திவிடும். இது அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய கட்டுமானம், இதில் மக்களுக்கு எதிர்காலமில்லை.

### வெற்றுப் பேச்சுகள்

அதிபராகப் பதவி வகித்த இத்தனை ஆண்டுகளில் டிரம்ப் ஏன் எதையும் கட்டவில்லை? அரசியல் பிரச்சாரத்துக்காகவும் தேர்தல் ஆதாயத்துக்காகவும் பொதுமக்கள் வரிப் பணத்தில் எதையாவது

# தலைமை

உருவாக்கி, அதில் தன்னுடைய பெயரைப் பொறித்துவிட வேண்டும் என்ற விருப்பம் உள்ளவர்தான் டிரம்ப். 2016 அதிபர் தேர்தல் பிரச்சாரத்தின்போது சுவர் கட்டுவதைப் பற்றி மட்டும் அவர் பேசவில்லை, அமெரிக்காவின் அடித்தளக் கட்டுமானத்தையே பேரளவில் உருவாக்கப் போவதாகக் கூறியிருந்தார்.




மாதங்கள் பல உருண்டோடியும் செயலற்ற நிலையிலேயே அவர் தொடர்கிறார். ஓராண்டுக்கு முன்னால்கூட அமெரிக்க வரலாற்றிலேயே இதுவரை இருந்திராத வகையில் மிகப் பெரிய, மிகத் துணிச்சலான அடித்தளக் கட்டுமானத்தில் முதலீடு செய்யப்போவதாக அறிவித்தார். ஆனால், எதுவும் நடக்கவில்லை.

செயலற்ற தன்மை

நொறுங்கிக்கொண்டிருக்கும் நெடுஞ்சாலைகள், பாலங்கள், தண்ணீர்க் குழாய்கள் போன்றவற்றை நீக்கிவிட்டு, புதிதாக உருவாக்க ஏன் டிரம்பால் முடியவில்லை அல்லது விரும்பவில்லை என்ற கேள்வி எழுகிறது. அடித்தளக் கட்டமைப்பில் அதிகம் முதலீடு செய்யப்படுவதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். பொது நன்மைக்கான முதலீடுகளை மேற்கொண்டால் ஜனநாயகக் கட்சியிடமிருந்துகூட கணிசமான ஆதரவைப் பெற்றுவிட முடியும்; அது பொருளாதாரத்தைக் கைதூக்கிவிடும். அரசு நிர்வாகம் திறனிழந்துவிட்டது; குழப்பத்தில் இருக்கிறது என்ற கண்ணோட்டமும்




மாறிவிடும்.

மேலும், இரண்டு ஆண்டுகளுக்கு அடித்தளக் கட்டமைப்பு தொடர்பாக வெறும் பேச்சுதான் தொடரும், செயல் எதுவும் இருக்காது என்றே தோன்றுகிறது, ஏன் இந்த செயலற்ற தன்மை?

இதற்கு முக்கியக் காரணம் நிதிதான் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்; அடித்தளக் கட்டுமானங்களுக்கு எப்படிச் செலவிடுவது என்பதில் குடியரசு, ஜனநாயகக் கட்சிகளுக்கு இடையில் கருத்தொற்றுமை ஏற்பட்டால்தான் நிதியை ஒதுக்க முடியும். ஆனால், இது நம்பும்படியாக இல்லை. 2017 நிதிநிலை அறிக்கையில் 2 லட்சம் கோடி டாலர்கள் மதிப்புக்கு வரிச் சலுகை அளித்தது டிரம்பின் குடியரசுக் கட்சி. மக்கள் அந்தப் பணத்தை அப்படியே தொழில் துறையில் முதலீடு செய்வார்கள், அது

உற்பத்தியையும் வேலைவாய்ப்பையும் உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அப்படி எதுவும் நிகழ்ந்ததாகச் சுவடே இல்லை. இப்படியொரு சலுகையை ஏன் வழங்கினோம் என்று அரசும் வருத்தப்படவில்லை!

மேம்போக்கான பார்வை

தாங்கள் விரும்பும் பொருட்களை வாங்க, கடன் வாங்குவது குறித்து குடியரசுக் கட்சியினர் கவலைப்படுவதே கிடையாது. நிதிப் பற்றாக்குறை குறித்த அச்சம் அதீதமானது என்பது ஜனநாயகக் கட்சியின் மூத்த தலைவர்களின் கருத்து. எனவே, அடித்தளக் கட்டமைப்புக்காகக் கடன் வாங்கிச் செலவு செய்வதற்குக்கூட அவர்கள் ஆதரவு தருவார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், பணம் இல்லை என்பதால் அடித்தளக் கட்டமைப்புகளில் செலவுசெய்ய முடியாமல் போய்விடவில்லை. உண்மையான தடை டிரம்ப், அவருடைய அதிகாரிகள், அவருடைய கட்சி ஆகியவைதாம். அமெரிக்காவுக்குத் தேவைப்படும் பொது முதலீட்டுக்காகச் செலவிட அவர்கள் தயாராக இல்லை. அவர்கள் எதையும் உருவாக்க மாட்டார்கள்.

டிரம்ப் அரசில் உள்ள அதிகாரிகள், வெவ்வேறு அடித்தளக் கட்டமைப்புத் திட்டங்களை முன்வைக் கிறார்கள், ஆனால், எல்லாமே 'மேம் போக்கான யோசனைகள்'தான். அவற்றில் பொது முதலீட்டுக்கு அதிக வாய்ப்புகளும் கிடையாது. அதேசமயம், பொதுப் பணத்தை எடுத்து தனியார் முதலீட்டுக்கு உதவும் திட்டங்களில் செலவிடுவதிலேயே அதிகாரிகள் ஆர்வமாக இருக்கின்றனர். ஏன் கட்டுமானங்களில் செலவிட விரும்புவதில்லை? செலவு அதிகரித்துவிடாமல் கட்டுப்படுத்த விரும்புகின்றனர். அதுமட்டுமல்ல, பொதுச் சொத்துகளைத் தனியார் மயப்படுத்தவும் அவர்களுடைய திட்டங்கள் உதவுகின்றன. எனவேதான், புது முதலீட்டில் ஆர்வம் காட்டுவதில்லை.

உண்மையான அடித்தளக் கட்டுமானப் பணிகளுக்கான முதலீடு என்றால், மாற்றுக் கட்சியாக இருந்தாலும் ஜனநாயகக் கட்சியினர் ஆதரவு தெரிவிப்பார்கள். 'சலுகைசார் முதலாளித்துவத்தை' ஆதரிக்கும் எண்ணம் குடியரசுக் கட்சியினருக்கு




இருப்பதால், பொது முதலீடு முக்கியத்துவம் பெறவில்லை என்பதே உண்மை.

டிரம்ப் மட்டுமல்ல, குடியரசுக் கட்சியைச் சேர்ந்த இதர நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொது முதலீட்டுத் திட்டம் என்றால் ஆர்வம் காட்டுவதில்லை. டிரம்பின் பதவிக் காலத்து முதலிரண்டு ஆண்டுகள் இப்படியே அவரை மிரட்டி, பொது முதலீட்டுக்கு நிதி ஒதுக்காமல் பார்த்துக்கொண்டனர். பிறகு, அதற்கு போலியான காரணங்களையும் கண்டுபிடித்துக் கூறலாயினர்.

தண்டிக்கப்படும் மக்கள்

நவீன காலமாக இருந்தாலும், பழமைவாத அரசியல் சிந்தனையாளர்கள் பொது நன்மைக்காக அரசு செலவுசெய்வதை வெறுக்கிறார்கள். அதனால், அமெரிக்கர்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்றாலும் வேண்டாம் என்கிறார்கள். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் விதத்தில் அரசின் செலவுகள் அமைந்தால் நிர்வாகத்தில் அரசுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு அதிகரித்துவிடும். தான் சார்ந்துள்ள குடியரசுக் கட்சி, அரசின் தலையீடு மிகக் குறைவாகவே இருக்க வேண்டும் என்று விரும்புவதை டிரம்ப் முழுதாக ஏற்கவில்லை; ஆயினும் அவரிடமுள்ள 'குறைந்த செயலாற்றலானது' மக்களுக்கு உதவுவதைவிட — அவர்களைத் தண்டிப்பதிலேயே செலவாகிக் கொண்டிருக்கிறது.

அப்படியானால், அமெரிக்காவை யார்தான் புதுப்பித்து உருவாக்குவார்கள்? டிரம்புக்கும் அவருடைய கட்சிக்கும் வாய்ப்பு தரப்பட்டது. அவர்கள் அதன்படி செயல்பட மறுத்துவிட்டதால் அடுத்த வாய்ப்பு ஜனநாயகக் கட்சிக்குத்தான் தரப்பட வேண்டும். அவர்கள் புதிதாக அறிவித்துள்ள 'பசுமை செயல்திட்டம்' போதிய விவரங்களுடன் இல்லை என்றாலும், பொது நலனில் அக்கறை கொண்ட பொது முதலீட்டை அதுதான் புதுப்பிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

என்னுடைய கணிப்பும் விருப்பமும் அதுவே 2021—ல் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர் அதிபராகப் பதவியேற்றால், அடித்தளக் கட்டமைப்புகளுக்குச் செலவிட நிதியை ஒரு தடையாகவே கருதமாட்டார்கள்; சுகாதாரச் சீர்திருத்தத்துக்கும் அதிக நிதி தேவைப்படும். வட்டி வீதம் குறைவாக இருக்கும் நேரத்தில் கடன் வாங்கி பொதுத் திட்டங்களில் முதலீடு செய்வது நல்ல கொள்கையாகவே இருக்கும். அடித்தளக் கட்டுமானங்களை உருவாக்கியாக வேண்டும், உருவாக்குவோம், நிச்சயம் உருவாக்குவோம் என்று நம்புவோம்.




தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37

# தீவிர (ம்) வாதம்

## அரசியல் கட்சிக்கு மாற்று தீவிரவாதமல்ல!

சமூக வலைத்தளத்தில் சமீபத்தில் வலம் வந்த ஒரு விடியோ பார்ப்போரின் மனத்தை கனமாக்கியது. ஒரு ராணுவ வீரர் தனது வருடாந்திர விடுமுறையில் வீட்டுக்கு வருகிறார். அது ஒரு கிராமம். மண் சுவற்றுக்கு வெளியில் நின்று கூப்பிடுகிறார். உள்ளிருந்து மனைவி வருகிறார். கணவனின் மேல் சாய்கிறார். ஒரு வருடத்திற்குப் பிறகான சந்திப்பு. இருவரின் கண்களிலும் கண்ணீர். இது பிரிவு தந்த வேதனைக் கண்ணீரா அல்லது அடுத்த முப்பது நாட்கள் இணைந்திருக்கப் போகிறோம்




என்ற ஆனந்தக் கண்ணீரா? அதன் பின் குடும்ப உறுப்பினர்கள் ஒருவர் பின் ஒருவராக வெளி வருகிறார்கள். எல்லோரும் அவருடன் கைகோர்த்து நடக்கிறார்கள். இப்படியாக முடிகிறது அந்த வீடியோ.

காலை பத்து மணிக்கு அலுவலகம் சென்று விட்டு மாலை ஆறு மணிக்கு வீடு திரும்பி மனைவி, குழந்தைகளுடன் நாட்களை கழிக்கும் நம்மைப் போன்ற பலருக்கு இந்தக் கண்ணீரின் சுகத்தையும், அழுத்தத்தையும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. குடும்பத்தாரின் மீது காட்டவேண்டிய அன்பு, பாசம், பரிவு, வேதனை ஆகிய எல்லாவற்றையும் அவ்வப்போது வெளிப்படுத்த முடியாமல் மூட்டையாகக் கட்டி எடுத்துவந்து இந்த முப்பது நாட்கள் விடுமுறையில் கொட்டிவிட்டு செல்ல வேண்டும். இதுதான் ராணுவ வீரனின் வாழ்க்கை. முப்பது நாட்கள் விடுமுறை முடிந்து கிளம்பும்போது, அனைவரின் கண்களும் குளமாகும். இனி இதுபோன்ற தருணத்திற்காக ஒரு வருடம் காத்திருக்க வேண்டும். அப்படி காத்திருக்கும் நாட்களில் இந்த முப்பது நாட்களில் கிடைத்த நினைவுகளே அவர்களை மகிழ்விக்கும், அழவைக்கும். ஒரு வருட காத்திருப்புக் காலமே இவ்வளவு துக்கத்தை கொடுக்கிறது என்றால், இனி சந்திக்க மாட்டோம், அவர் உடல் பெட்டியில் வருகிறது என்ற செய்தி அந்தக் குடும்பத்தை என்ன பாடுபடுத்தியிருக்கும்?





கடந்த 14ம் தேதி ஜம்முவில் உள்ள புல்வாமா தற்கொலை படை தாக்குதலில் தமிழக வீரர்கள் சுப்பிரமணியன் மற்றும் சிவச்சந்திரன் மரணமடைந்தார்கள். இந்த தாக்குதலை பாகிஸ்தானிலிருந்து செயல்படும் ஜெய்ஷ்—இ—முகமது என்ற பயங்கரவாத அமைப்பு செயல்படுத்தியுள்ளது.

ஒரு தாய். மரணப்படுக்கையில் கிடந்தார்.

# தேவை
## அல்ல

### சாது ஸ்ரீராம்

"என் மகன் வந்துவிட்டானா?" என்று அடிக்கடி கேட்டுக்கொண்டேயிருந்தார். மகன் போருக்கு சென்றிருக்கிறான். அவனை வெற்றி வீரனாக பார்க்க வேண்டும் என்பதே அந்தத் தாயின் இறுதி ஆசை. தன்னை பார்க்க வருவோரிடமெல்லாம், 'என் மகனை பார்க்காமல் சாகமாட்டேன்', என்று அழுத்தமாக சொல்லிக்கொண்டிருந்தார் அவர். ஒரு நாள் திடீரென்று வீட்டு வாசலில் ஒரு கூட்டம். வந்து நிற்பது அந்த நாட்டு அரசன். படுக்கையில் கிடந்த தாயின் அருகில் சென்று




அமர்ந்தான். 'பாட்டி! அரசர் உங்களை பார்க்க வந்திருக்கார்!' என்று மற்றவர்கள் சொன்னார்கள். கைகளை குவித்து வணக்கம் சொன்னார் அந்தத் தாய். முகத்தில் ஒரு பிரகாசம், புன்னகை.

'அம்மா! நலமாக இருக்கிறீர்களா! உங்களை பார்த்துவிட்டு போகலாம் என்று வந்திருக்கிறேன்' என்றான் அரசன். 'அரசே! மிகவும் மகிழ்ச்சி. இனி நான் நிம்மதியாகச் சாவேன்', என்று சொன்னார் தாய். 'என்னம்மா இது! சற்று முன்வரை உங்கள் மகனை பார்த்துவிட்டுத்தான் சாவேன் என்று சொன்னீர்கள். ஆனால், இப்போது நிம்மதியாக சாவேன்', என்று சொல்கிறீர்களே! நான் உங்கள் மகனல்ல!' என்றான் அரசன்.

சிரித்தார் தாய். அரசனைப் பார்த்து மீண்டும் வணங்கினார். அடுத்த நிமிடம் அவர் உயிர் பிரிந்தது. அரசனால்




அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஓ'வென அழுதான். அங்கு கூடியிருந்தவர்களுக்கு ஆச்சர்யம். அரசனிடம் பேசினார்கள். 'அரசே! இவரின் மரணம் உங்களை இந்த அளவிற்கு பாதித்துவிட்டதா?' என்று கேட்டார்கள். அரசன் பேசினான்.

'மக்களே! இரண்டு நாட்களுக்கு முன் நடந்த போரில் இவருடைய மகன் இறந்துவிட்டான். இறப்பதற்கு முன் என்னைச் சந்திக்க ஆசைப்பட்டான். நானும் அவனைச் சந்தித்தேன். அப்போது அவன், "அரசே! என் தாய் வீட்டில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார். நான் இறந்ததும் நீங்கள் சென்று என் தாயை சந்தியுங்கள்" என்று சொன்னான். 'நான் சந்திப்பது இருக்கட்டும்! தாயைச் சந்திக்க நீ ஆசைப்படவில்லையா?' என்று

கேட்டேன். அதற்கு அவன், ‘அரசே! போருக்கு புறப்படும் முன் தாயிடம் ஆசி பெற்றேன். அப்போது அவர், “போரிடுவது வீரனுக்கு பெருமை. அதைவிட பெருமையான விஷயம் ஒன்றையும் நீ செய்ய வேண்டும். நீ உயிரோடு இருக்கும் வரை இந்த நாட்டுக்கும், அரசனுக்கும் எந்த சிறு தீங்கும் வந்துவிடக்கூடாது. அப்படி தீங்கு வந்துவிட்டால், நீ உயிரோடு இருக்கக்கூடாது”, என்று சொல்லி அனுப்பினார். நான் உயிரோடு இருக்கும்வரை உங்களையும், இந்த நாட்டையும் காப்பாற்றிவிட்டேன். இதை என் தாயிடம் தெரிவிக்க வேண்டும். நீங்கள் அவரைச் சந்தித்தால் போதும். நிலைமையை அவர் உணர்ந்துகொள்வார்’, என்று சொல்லிவிட்டு இறந்துபோனான்.

கூடியிருந்தவர்கள் அமைதியானார்கள். மீண்டும் பேசினான் அரசன்.

‘இந்தத் தாய், மகனைப் பார்க்க வேண்டும் என்று விரும்பியதற்கு காரணம் மகனின் நலத்தை அறிந்து கொள்வதற்காக அல்ல. அவன் நலமாக இருந்தால் நானும், நாடும் நலமாக இருக்கிறோம் என்று அர்த்தம். அதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காதத்தான் மகனைச் சந்திக்க ஆசைப்பட்டார். அதுமட்டுமல்ல, இறப்பதற்கு முன்கூட தன் மகனைப் பற்றி ஒரு வார்த்தைகூட கேட்கவில்லை. இறந்துபோன இந்தத் தாய்க்கும், நாட்டிற்காக உயிர்விட்ட மகனுக்கும் நான் என்ன கைம்மாறு செய்வது என்று தெரியவில்லை. அழுகை என்னை அறியாமலே வந்துவிட்டது’, என்றார் அரசர். அப்போது கூட்டத்தில் இருந்த சாது பேசினார்.

அரசே! உங்கள் கண்ணீர் வெளிப்படுத்தியது சோகத்தை மட்டுமே! கோபத்தையல்ல. கோபத்தை செயல்களே வெளிப்படுத்தும். இது கண்ணீரோடு முடிவடைவதில்லை. நிலம் நம்முடையது. அதில் விளையும் விளைச்சலும் நம்முடையது. அதில் முட்செடிகளும் முளைக்கும். அதன் முட்களை மட்டும் வெட்ட வேண்டும், செடியை வெட்டக்கூடாது என்று யாராவது சொன்னால், அப்படிச் சொல்பவர்கள் சுகமான இடத்தில் இருக்கிறார்கள் என்று அர்த்தம். அவர்களின் வார்த்தைகளைப் பின்பற்றினால், முட்புதற்களுக்கு மத்தியில் மட்டுமே நாம் வாழும் நிலை ஏற்படும். முட்களை அதன் ஆணிவேரோடு அகற்ற வேண்டும். நியாயம் பார்க்க வேண்டியதில்லை. அடுத்த முறை கண்ணீர் சிந்துவது நாமாக இருக்கக்கூடாது’,




என்று சொல்லிவிட்டு நகர்ந்தார். சாது கூறிய விஷயத்தின் அர்த்தம் மற்றவர்களுக்கு புரிகிறதோ இல்லையோ, ஆள்பவர்களுக்கு நிச்சயமாக புரியும்.

பிரதமர் அவர்களே உங்களிடம் ஒரு வேண்டுகோள்! கதையில் படித்த மகனின் நிலையில் வீரமரணத்தை அடைந்த நாற்பத்து இரண்டு வீரர்கள் இருக்கிறார்கள். தாயின் நிலையில் அவர்களின் குடும்பம் இருக்கிறது. அந்த வீரர்கள் தங்களது இறுதி மூச்சு வரை நாட்டையும், நம்மையும் பாதுகாத்துள்ளார்கள். அரசனின் நிலையில் இருக்கும் நாம், கண்ணீர் சிந்திவிட்டு அடுத்த வேலைக்கு நகர்ந்துவிடக்கூடாது. ஆக்கபூர்வமான எதையாவது செய்ய வேண்டும். இதில் சட்டம், நியாயம், தர்மம் ஆகியவை பார்க்க வேண்டிய அவசியமில்லை.

அன்பும், மனித நேயம், மனித உரிமை ஆகியவற்றை நமக்கு மற்றவர்கள் சொல்லித்தர வேண்டிய அவசியமில்லை. வெறும் கண்டனத்தை தெரிவித்துவிட்டு அடுத்த சுரண்டலுக்கு தன்னைத் தயார்படுத்திக்கொள்ளும் ஆட்சி இது அல்ல என்பதை மக்களுக்கு உணர்த்துங்கள்.

இந்த நேரத்தில் இந்தியர்கள் அனைவரும் ஒரே அணியில் திரண்டு தேசத்தை வலுப்படுத்த வேண்டும். ஆனால், தீவிரவாதிகளின் சிந்தனைக்கு சற்றும் குறையாத சில உள்ளூர் தலைவர்களின் கருத்துக்களை படிக்கும் போது நமது ஜனநாயகம் இத்தகையவர்களுக்கு அளவுக்கு மீறிய சுதந்திரம் கொடுத்துள்ளது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. சில நெட்டீசன்கள் தாக்குதலைப் பற்றி நக்கலாகவும், நைய்யாண்டியாகவும் கருத்தை பதிவு செய்வது வேதனையளிக்கிறது. பாதுகாப்பு குறைபாடுகளுக்கு யார் காரணம்? முன்னூறு கிலோ வெடி மருந்து எப்படி கிடைத்தது? என்றெல்லாம் கேள்வி எழுப்புகிறார்கள்.

முன்னூறு கிலோ வெடிமருந்து உபயோகப்படுத்தப்பட்டது என்று யார் சொன்னது? எந்த அடிப்படையில் இந்தக் கருத்தை சொல்கிறார்கள்? இவர்களின் பொறுப்பற்ற கருத்துக்கள் எல்லை தாண்டிய பயங்கரவாதிகளுக்கு ஊக்கமளிக்காதா? உங்களுக்கு குறிப்பிட்ட அரசியல் தலைவர்களை பிடிக்காமல் இருக்கலாம், அதற்காக தீவிரவாதத்தை மறைமுகமாக ஆதரிக்கலாமா? நாளை நீங்கள் நினைக்கும் கட்சி பதவிக்கு வரலாம், அப்போது நீங்கள் தேசியவாதியாக மாறிவிடுவீர்கள். மற்றவர்கள் தீவிரவாதிகளை ஆதரிப்பார்களா? இது என்ன அரசியல் கலாச்சாரம்? அரசை சார்ந்து வாழுங்கள். தீவிரவாதிகளை சார்ந்து வாழாதீர்கள்.

வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் என்று ஒருவர்


இருக்கிறார். அவருக்கு தான் ஒரு மேதாவி என்ற சிந்தனை எப்போதுமே உண்டு. தன்னைத் தவிர அனைவரும் திருடர்கள். தனக்கு தோன்றியதே மிகச்சரி என்று நினைப்பவர். புல்வாமா தாக்குதல் தொடர்பாக ஒரு கருத்தை அவர் வெளியிட்டிருக்கிறார்.

“புல்வாமாவில் தாக்குதல் நடத்திய அடில் அகமது தார், ராணுவத்தினரால் தாக்கப்பட்ட பின்புதான் பயங்கரவாதியாக மாறினார். காஷ்மீரில் பல இளைஞர்கள் பயங்கரவாதியாக மாறி சாக விரும்புவது ஏன் என்பதை புரிந்து கொள்வது முக்கியம். ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் பல தற்கொலைப் படை தாக்குதல்களுக்குப் பின்பும் அமெரிக்க படைகளால்கூட அவற்றைத் தடுக்க முடியவில்லை”, என்று டிவிட்டரில் கருத்து தெரிவித்திருக்கிறார் வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன்.

இவர் மட்டுமல்ல. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பஞ்சாப் அமைச்சர் சித்து பொறுப்பில்லாமல் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். அவரைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திவ்யா ஸ்பாந்தனா மற்றும் நூர் பனோ ஆகியோரும் ராணுவத்தை சிறுமைபடுத்தும் விதமாக கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள்.

திவ்யா ஸ்பாந்தனா காங்கிரஸ் கட்சியின் சமூக வலைத்தளங்கள் பிரிவின் தலைவர், இவர் வழக்கறிஞர் பிரசாந்த் பூஷனின் கருத்தை ஆமோதித்துள்ளார், வரவேற்றுள்ளார். நூர் பனோ காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.பி. இவர் இந்திய ராணுவத்தை குறைகூறியிருக்கிறார். “நடந்த சம்பவம் மிக மோசமானது. இது நம்மை பாதித்துள்ளது. இந்தத் தாக்குதலை பாஜக எப்படி பயன்படுத்திக்கொள்ளும் என்று நமக்குத் தெரியவில்லை. இந்த தாக்குதல் தொடர்பாக சில அறிகுறிகள் ராணுவத்திற்கு தென்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்கவில்லை’, என்று அவர் தெரிவித்திருக்கிறார். இந்த கருத்தை என்னவென்று சொல்வது. தன்னுடைய சக வீரர்களை பற்றி ராணுவம் கவலைப்படவில்லை என்று சொல்கிறாரா? இந்த சம்பவம் நடந்த உடனேயே தேர்தல், வாக்கு வங்கி ஆகியவற்றைப் பற்றி கவலைப்படும் இவரையெல்லாம் யார் திருத்துவது?

இந்த தலைவர்களின் கருத்தே தீவிரவாதம் குறித்த காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு என்று கருதலாமா? இறந்தவர்களின் உடல்கள்கூட அவர்களின் வீடுகளை சென்றடையாத நிலையில் அவசரம் அவசரமாக இப்படி கருத்துக்களை ஏன் பதிவிடவேண்டும்? யாரை திருப்திபடுத்த இப்படி செய்கிறார்கள்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் காங்கிரஸ் கட்சி அவர்களின் மீது எடுக்கும்




நடவடிக்கையை பொறுத்தே தெரியவரும்.

தமிழகத்தில் யாரும் கருத்து சொல்லவில்லை என்று யாரும் நினைக்க வேண்டாம். அப்படிப்பட்ட ஒரு கருத்தை திமுகவைச் சேர்ந்த மனுஷ்யபுத்திரன் தொலைக்காட்சியில் தெரிவித்துள்ளார். இந்திய ராணுவத்தை குறை சொல்லும் மனுஷ்யபுத்திரனை அவர் சார்ந்த கட்சி என்ன




செய்யப்போகிறது? மனுஷ்யபுத்திரன் அவர்களே! இறந்துபோனவர்களில் இருவர் தமிழர்கள்தானே! எங்கே போனது உங்களது தமிழ்ப் பற்று? மனுஷ்ய புத்திரனின் கருத்து அவரது கட்சி சார்ந்த கருத்தாக இருக்காது என்று நம்புவோம். இதை அவர் சார்ந்த கட்சி தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த உலகம் தீவிரவாத அச்சுறுத்தல் இல்லாமல் சகோதரத்துவத்துடன் இருந்தால் அமைதிக்கு பஞ்சமிருக்காது. அப்படிப்பட்ட அமைதியின் அருமையை உணரவைத்துள்ளது புல்வாமா குண்டு வெடிப்பு. உலகின் கடைசி தீவிரவாத சிந்தனை இருக்கும்வரை இந்த அமைதியை எட்டமுடியாது. இதை ஆள்பவர்களால் மட்டுமே செய்து முடிக்க முடியாது. நம்மைப் போன்றவர்களும் இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். ஒரு அரசியல் கட்சியின் ஆட்சிக்கு மாற்றாக மற்றொரு கட்சி இருக்கலாம், எந்தக் காலத்திலும் தீவிரவாதம் மாற்றாக இருக்க முடியாது.

# தமிழே


## மூடத்தனத்தின் உச்சக்கட்டம்

மகாபாரதத்தில் வரும் கௌரவர்கள் நூறு பேரும் சோதனைக் குழாய் குழந்தைகள். நூறு மண்பானைகளில் நூறு கரு முட்டைகள் வைக்கப்பட்டு அவை வளர்ந்து நூறு குழந்தைகள் பிறந்தன என மகாபாரதம் கூறுகிறது.

இவையெல்லாம் சோதனைக் குழாய் குழந்தைகள்தான். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே சோதனைக் குழாய்கள் மூலம் குழந்தைகளைப் பிறப்பிக்கும் முறையை நமது முன்னோர்கள் கண்டறிந்துள்ளனர்.

பகைவர்களைத் தாக்கிவிட்டுத் திரும்பவும் அவர் கரத்திற்கே வந்து சேர்ந்துவிடும். இத்தகைய சக்தி வாய்ந்த ஏவுகணைகள் பல இருந்துள்ளன.

இராமனிடம் அஸ்திரங்கள் என்ற பெயரில் பலவகையான பயங்கர ஆயுதங்கள் இருந்துள்ளன. இராம—இராவணப் போரில் அவற்றைப் பயன்படுத்திதான் இராமன் வெற்றி பெற்றான். சார்லசு டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கொள்கை புதிதல்ல. விட்டுணுவின் பத்து அவதாரங்களும் இதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன. தண்ணீரில் முதல் உயிரினம் தோன்றியதைக் குறிக்கும் வகையில் (மச்ச) மீன்




இலங்கை அரசனான இராவணன் விமானப் படையே வைத்திருந்தான். அவனிடம் புஷ்பக விமானம் மட்டுமல்ல, 24 வகையான போர் விமானங்கள் இருந்தன. விமானத் தளங்களையும் அவன் அமைத்திருந்தான். விமானம் மூலம்தான் சீதையைத் தூக்கி வந்தான்.




பழங்காலத்திலேயே ஏவுகணை, தொழில்நுட்பம் நமது முன்னோர்களுக்குத் தெரிந்துள்ளது. மகாவிட்டுணு கையிலிருந்த சுதர்சன சக்கரம்

அவதாரத்தில் மகாவிட்டுணு தோன்றினார். அடுத்து கூர்மாவதாரம். நீரிலும், நிலத்திலும் வாழும் ஆமை வடிவத்தில் மகாவிட்டுணு தோன்றினார். அதன் பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து மிருகமும், மனிதனும் இணைந்த நரசிம்மவதாரம் தோன்றியது. கடைசியாக வாமனர் என்னும் அவதாரமாக சிறிய மனித வடிவில் தோன்றியது.


இந்த பிரபஞ்சத்தைப் படைத்த பிரம்மாவுக்குத் தெரியாமல் உலகில் எதுவும் தோன்றவில்லை. எவரும் அறிவதற்கு முன்பே டயனோசர்கள் உலகில் இருப்பதை பிரம்மா அறிந்திருந்தார். இந்தியாதான் டயனோசர்கள் நிறைந்திருந்த இடமாகும். இந்தியாவைச் சேர்ந்த ஒரு வகையான டயனோசரை இராச அசுரா என்ற பெயரில் அழைத்தார்கள். வேதங் களிலிருந்துதான்



## பழ. நெடுமாறன்

அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும் டயனோசர் என்ற சொல்லை உருவாக்கினார்கள். வேதங்களை எழுதிக் கொண்டிருந்தபோது பிரம்மா ஒருமுறை தன்னுடைய கண்களை மூடினார். அந்த நொடி இமைப்பொழுதில் டயனோசர்கள் அழிந்துவிட்டன.

மேற்கண்டவாறு உளறியிருப்பவர்கள் கீழ்ப்பாக்கம் மனநிலை மருத்துவமனையைச் சேர்ந்த நோயாளிகள் அல்லர். அவர்கள் கூட இத்தகைய பகுத்தறிவிற்குப் பொருந்தாத கருத்துக்களைச் சொல்லியிருக்க முடியாது.




பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் கடந்த ஜனவரி 3ஆம் நாள் நடைபெற்ற இந்திய அறிவியல் காங்கிரசு மாநாட்டில்தான் இத்தகைய அறிவியலுக்கு எதிரான கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பேசியவர்களும் சாதாரணமானவர்கள் அல்லர். கல்வித்துறையில் பெரும் பதவிகளை வகிப்பவர்கள். ஆந்திரப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜி. நாகேசுவரராவ் அவர்கள் உதிர்த்த முத்தான கருத்துக்கள்தான் மேலே கண்டவையாகும். உலகமே எள்ளி நகையாடத் தக்க வகையில் இத்தகைய கருத்துக்களை வெளியிட்ட இவரின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் நினைக்கும்போதே பெரும் கலக்கம் ஏற்படுகிறது. அவர்களின் எதிர்காலம் என்னவாகுமோ என நமது உள்ளம் பதைக்கிறது. பழைய கற்காலத்திற்கும் முந்திய காட்டுமிராண்டித்தனமான காலத்திற்கு மாணவர்கள் உந்தித் தள்ளப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை.

இவரை மிஞ்சும் விதத்தில் கண்ணன் சகதளா கிருட்டிணன் என்பவர் பேசியுள்ளார். “நியூட்டன், ஐன்சுடீன் போன்றவர்களின் கோட்பாடுகள் தவறானவை. இவர்களின் அனைத்து இயற்பியல் கோட்பாடுகளையும் முற்றிலுமாக மாற்றியமைக்கப் போகிறேன். இதற்காக நான் எழுதியுள்ள ஆய்வறிக்கைகளை 40 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு




அனுப்பியுள்ளேன். எனது ஆய்வறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுமானால் புவிஈர்ப்பு விசைக்கு நரேந்திர மோடி அலைகள் என்றும், ஈர்ப்பு விசை ஒலி விளைவுக்கு மத்திய அமைச்சர் அர்சவர்தன் விளைவு என்ற பெயர்களைச் சூட்டுவேன். எதிர்காலத்தில் அப்துல்கலாமைவிட மிகப்பெரிய அறிவியல் அறிஞராக அமைச்சர் அர்சவர்தன் உருவெடுப்பார்” என்று கூறியுள்ளார்.

இந்திய அறிவியல் காங்கிரசு மாநாடுகளில் உலக அறிவியல் அறிஞர்கள் பலரும் கலந்துகொள்கிறார்கள். அவர்களுக்கு நடுவே முற்றிலும் அறிவியலுக்கெதிரான கருத்துக்களை அதிலும் எவ்வித ஆதாரமும் இல்லாத மூட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பேசுவது என்பது வெட்கக்கரமானது மட்டுமல்ல, உலகத்திற்கு முன் நம்மை தலைகுனிய வைப்பதாகும். சிந்துசமவெளி நாகரிகத்தைக் கண்டறிந்த சர் சான் மார்சல் பின்வரும் கருத்தைத் தெரிவித்தார்.

"ரிக்வேத காலம் கி.மு. 1500க்குப் பிற்பட்டது. அதாவது சிந்து நாகரிகத்தின் அழிவுச் சின்னங்கள் மறைந்து 1000 ஆண்டுகளுக்குப் பின்னரே வேத நாகரிகம் தோன்றியது என்பதால் ஆரியர்களுக்கும், சிந்து நாகரிக மக்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை".

எனவே கி.மு. 1500க்குப் பிற்பட்ட ஆண்டுகளில் இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்களிடம் வாய்மொழி இலக்கியங்கள்தான் இருந்தன. அவை சுருதி அதாவது காதால் கேட்கப்படுவது என அழைக்கப்பட்டன. அத்தகைய சுருதிகள்தான் ரிக், சாம, யசுர், அதர்வண வேதங்களாகும். வேதம் என்ற சொல் வித் (அறிதல்) என்ற சமஸ்கிருத வேர்ச்சொல்லிலிருந்து கிளைத்த ஒரு சொல்லாகும். இந்த வேதங்கள் சம்கிதைகள் (திரட்டு) என்றும் அழைக்கப்பட்டன. ஒவ்வொரு வேதத்திற்கும் தனித்தனியாக பிரம்மாணங்களும், ஆரண்யகங்களும், உபநிடதங்களும் தோன்றின. இவையெல் லாவற்றுக்கும் சேர்த்து மந்திரங்கள் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இவற்றிற்குப் பின்னர் பல்வேறு காலகட்டங்களில் இராமாயணமும், அதற்குப் பின்னர் மகாபாரதமும் எழுதப்பட்டன. தொடர்ந்து பல ஆண்டுகளில் பல கதைகள் இணைக்கப்பட்டு அவை விரிவு படுத்தப்பட்டன என்பதுதான் வரலாற்றாய்வாளர்கள் கண்டறிந்த உண்மைகள் ஆகும்.

உண்மை என்ன?

புகழ்பெற்ற வரலாற்று ஆய்வாளர்கள் கூறும் உண்மைகளின் அடிப்படையில் மேற்கண்ட கூற்றுகளை அணுகி நாம் பார்போம்.

கி.மு. 1500க்கும் கி.மு. 1200க்கும் இடைப்பட்ட காலத்தில் ரிக் வேதம் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று செர்மானிய அறிஞர் மாக்சுமுல்லர் கருதுகிறார். ஏனைய வேதங்கள் கி.மு. 1200க்கும் 1800க்கும் இடையில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. கி.மு. 800க்கும் கி.மு. 600க்கும் இடையில் பிராமணங்கள் எழுதப்பட்டன. அதற்குப் பின்னரே உபநிடதங்கள் உருவாகின. இவற்றில் எதிலுமே மகாபாரதப் போர் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை.




இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சியில் புகழ்பெற்ற அறிஞரான முனைவர் சி.சி. சர்க்கார் "மகாபாரதப் போர் உண்மையான வரலாற்று நிகழ்ச்சி அல்ல" என்று கூறியுள்ளார். இதற்கு அவர் கீழ்க்கண்ட காரணங்களை முன் வைக்கிறார்.

1. வேத சாகித்யத்தில் எங்குமே மகாபாரதப் போர் பற்றிக் கூறப்படவில்லை.

2. பவுராணிகர்களுக்குக் கூட மகாபாரதப் போர் எப்போது நடந்தது என்பது தெரியவில்லை.


3. கி.மு. 4ஆம் நூற்றாண்டிற்கு முன்னருள்ள எந்தவோர் இலக்கியத்திலும் மகாபாரதப் போர் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

4. மகாபாரதப் போர் நடந்ததாகக் கூறப்படும் குருசேத்திரம் ஒரு போர்க்களமாக வேதங்களில் எங்கும் கூறப்படவில்லை.

மற்றொரு புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரான எச்.டி. சங்காலியா என்பவரும் டாக்டர் சர்க்கார் கூறிய கருத்துக்களை ஆதரிக்கிறார். அவர் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

"மகாபாரதப் போர் நடந்த காலமாக கி.மு. 3100, கி.மு. 1400, கி.மு. 900 எனப் பல காலகட்டங்களை அறிஞர்கள் தருகின்றனர். இவ்வாறு கூறுபவர்கள் பெரும்பாலும் சமசுகிருத அறிஞர்களே. இந்த வருடங்களில் ஏதேனும் ஒன்றை நாம் அங்கீகரிப்பதற்கு முன்னர் அதனால் விளங்கும் பொருள் என்னவென்பதை அறிய வேண்டியிருக்கிறது. இப்போதைய அரியானா, பஞ்சாப், சிந்து, குசராத், சவுராஷ்டிரம், கட்ச், உத்தரப்பிரதேசம், பீகார், அசாம், காசுமீர் ஆகிய இடங்களில் அக்காலத்தில் பெரிய நாடுகள் இருந்தனவென்று நாம் கருதவேண்டிவரும். அதுமட்டுமல்ல, இந்த இடங்களிலெல்லாம் நாகரிகமும் கலாச்சாரமும் சிறந்தோங்கி இருந்திருக்க வேண்டும். அங்கிருந்த அரசர்களுக்கு நிரந்தரமான பெரிய படைகளும் இருந்திருக்கவேண்டும். அவற்றின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை. ஆனால், அவை அக்காலத்தில் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை".

மொகஞ்சதாரோவிலும், அரப்பாவிலும் வாழ்ந்த மக்கள் இரும்பை அறிந்திருக்கவில்லை. கி.மு. 3000த்திலோ, கி.மு. 4000த்திலோ மகாபாரதப்போர் நடந்தது என்று வைத்துக்கொண்டால், அவர்கள் இரும்பாலான ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லையென ஒப்புக் கொள்ள வேண்டிவருமென்றும் டாக்டர் சங்காலியா சுட்டிக் காட்டுகின்றார். ஆனால், மகாபாரதப் போரில் இரும்பாலான ஆயுதங்கள் பயன்படுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது. கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இரும்பாலான ஆயுதங்கள் இந்தியாவில் பயன்படுத்தப்படவில்லையென்றும் அவர் சுட்டிக் காட்டுகின்றார். குருசேத்திரத்தில் நடந்த




அகழ்வாராய்ச்சிகளில் இந்த மகா யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட எந்தவொன்றும் கிடைக்கவில்லை யென்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட வரலாற்றுச் சான்றுகள், அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றை முற்றிலுமாக மறைத்துவிட்டு கற்பனை மிக்கக் கட்டு கதைகளையும், உண்மைகளுக்கு மாறான திரிபுகளையும் அறிவியலாளர்கள் கூடியுள்ள மாநாட்டில் எவ்விதக் கூச்சமின்றிக் கூறுவது மூடத்தனத்தின் உச்சக் கட்டமாகும்.

பா.ச.க. ஆட்சி இந்தியாவில் ஏற்பட்டப் பிறகு நடைபெற்ற அறிவியல் மாநாடுகளில் அறிவியலுக்குச் சற்றும் பொருந்தாத இத்தகைய உரைகள் நிகழ்த்தப்படுகின்றன. இவற்றைக் கண்டு மனம் வெறுத்துப்போன நோபல் பரிசுப் பெற்ற அமெரிக்க வாழ் இந்திய அறிவியலாளர் வெங்கட்ராமன் இராமகிருட்டிணன் இனிமேல் அறிவியல் காங்கிரசு மாநாடுகளில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவினை 2016 ஆம் ஆண்டிலேயே எடுத்துவிட்டார். “அறிவியலை அடியோடுப் புறக்கணித்துவிட்டு மத மூடநம்பிக்கைகளுக்கும், இந்துத்துவா சார்ந்த அரசியலுக்கும் மட்டும்தான் அறிவியல் மாநாட்டில் முதன்மை அளிக்கப்படுகிறது. எனவே இம்மாநாடுகளில் கலந்துகொள்வது வீணாகும்” எனக் கூறியுள்ளார்.

இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகரான கே. விசயராகவன் “புகழ்பெற்ற ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகத் தற்போது இருக்கும் ஒருவர் அறிவியலுக்குச் சற்றும் பொருந்தாத வகையில் பேசியிருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கதாகும். அந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்களிடமிருந்து புகார் பெற்று அந்த துணைவேந்தர் மீது நடவடிக்கை எடுக்க வேந்தர் முன்வரவேண்டும். மேலும் மற்ற அறிவியல் அறிஞர்களும் இணைந்து இதுபோன்ற உளறுபவர்களைக் கண்டிக்க முன்வரவேண்டும்”எனக் கூறியுள்ளார்.

ஆந்திரா மற்றும் தெலுங்கானாவுக்கான மனித உரிமை அமைப்பு அறிவியலுக்குச் சற்றும் பொருந்தாத இத்தகைய பேச்சுக்களுக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. “அறிவியலின் தரத்தைக் குறைக்கும் போக்கு மட்டுமல்ல, இது அறிவியல் முன்னேற்றத்தை அடியோடு தகர்த்துவிடும். இத்தகைய நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்“ என வலியுறுத்தி உள்ளது.

இந்திய அறிவியல் காங்கிரஸ் கூட்டமைப்பு இது தொடர்பாகக் கூடி கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

“சிறுவர்களின் அறிவியல் மாநாடு உள்பட எத்தகைய அறிவியல் மாநாடுகளிலும் பங்கேற்பவர்கள் முன்னதாகவே தங்களது உரையின் பிரதியை அறிவியல் காங்கிரஸ் கூட்டமைப்புக்கு அனுப்பவேண்டும். போலித்தனமான அறிவியல் கருத்துக்கள் ஏதேனும் ஒரு உரையில் காணப்படுமானால் அதை அகற்றுவதோடு அத்தகையவரை பேசவும் அனுமதிக்கக் கூடாது. மேலும், அறிவியல் கருத்தரங்குகளில் யாரேனும் போலி அறிவியல் கருத்துக்களை பேசத் தொடங்கினால் அவர்களை மேடையிலிருந்து அகற்றவேண்டும்”.




மானிட இனம் படிப்படியாகப் பட்டறிவின் மூலம் கண்டறிந்த உண்மைகளின் விளைவாக வளர்ச்சிப் பெற்றிருக்கிறது. அந்த வளர்ச்சி நாளுக்குநாள் பெருகி வளர்வதுதான் அறிவியலாகும். அது மேலும் வளர்ந்து மானிட சமுதாயத்திற்கு நலன் பயக்கவேண்டும். இத்தகைய அறிவியல் சிந்தனையை வளர்ப்பதற்குப் பதில் மூடத்தனத்தையும், மூட நம்பிக்கைகளையும் புகுத்தி வளர்ப்பது சமுதாயத்தைப் பின்னோக்கிச் செலுத்திவிடும். ஆனால், இந்துத்துவா அரசுக்கு அதைப் பற்றிய கவலை கிடையாது. பகுத்தறிவுக்குச் சற்றும் பொருந்தாத சிந்தனையோட்டத்தை வளர்த்து மக்களிடம் மடமையைப் பெருகச் செய்வதின் மூலமே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், ஆட்சிப் பீடத்தில் தொடர்ந்து இருக்கவும் முடியும் எனக் கருதுகிறது. இத்தகைய போக்குக்கு எதிராக மக்கள் திரண்டெழவேண்டும்.

# திரை அருட்

## ஏ.பி.நாகராஜன்

“பேரன்பு மிக்க ரசிகப் பெருமக்களுக்கு...” என்று ஆரம்பித்து படத்தைப் பற்றிப் பேசும் அந்தக் குரல் விஷேசமானது. அந்தக் குரல் ஒலித்த படங்களோ தமிழ்த் திரையுலகில் அமரத்துவம் மிகுந்தது.



அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் ஏ.பி.என் என்று அழைக்கப்படும் ஏ.பி.நாகராஜன்.




கண்காட்சி படத்தில் கே.டி.சந்தானத்தின் சந்தப்பாடல் ’அனங்கன் அன்பன் வசந்தன் மன்மதன் என்று வணங்கும் என்னுயிர் மன்னவா’விற்கு துவக்கத்தில் தொகையறாவும் ஏ.பி.என் குரலே!

பட உலகில் நடிகராக நுழைந்து, கதை—வசன கர்த்தாவாகப் புகழ் பெற்று டைரக்டராக உயர்ந்தவர் ஏ.பி.நாகராஜன். ஏ.பி.நாகராஜன் 1928—ம் ஆண்டு பிப்ரவரி 24—ந்தேதி பிறந்தார். சொந்த ஊர் சேலம் மாவட்டம் சங்ககிரி பக்கத்திலுள்ள அக்கம்மாபேட்டை. தந்தை பெயர் பரமசிவம். தாயார் லட்சுமி அம்மாள்.

நாகராஜனின் தந்தை ஜமீன்தார். எனவே நாகராஜன் பிறந்த போது நல்ல வசதி படைத்திருந்தார். ஆனால் சிறு வயதிலேயே தந்தையையும், தாயையும் இழந்தார். பணக்கார குடும்பம் வறுமையில் வாடியது. இதன் விளைவாக பள்ளிக்கூட படிப்பைத் தொடர முடியாமல் நாடகக் கம்பெனியில் சேர்ந்தார் நாகராஜன்.

ஏ.பி.நாகராஜனுக்கு பெற்றோர் வைத்த பெயர் “குப்புசாமி” என்பதாகும். இவர் பணியாற்றிய

# செல்வம்

டி.கே.எஸ். நாடக குரூப்பில் மொத்தம் 3 பேர் “குப்புசாமி” என்ற பெயர் கொண்டவர்களாக இருந்தனர். இதனால் டி.கே.சண்முகம் அதற்கு ஒரு முடிவு கட்டினார். இவருக்கு பெற்றோர் வைத்த `குப்புசாமி’ என்ற பெயரை மாற்றி “நாகராஜன்” என்று பெயர் சூட்டினார். பிற்காலத்தில் அது புகழ் பெற்ற பெயராக மாறியது.

சிவாஜிகணேசன் நாடகங்களில் பெண் வேடத்தில் நடித்து வந்த அதே காலக்கட்டத்தில், தமிழ் இலக்கியங்களை தானாகவே படித்து அதில் சிறப்பு பெற்றவராக விளங்கினார். சிறுவனாக இருந்த நாகராஜன், இளைஞரானபின், அவரே வசனம் எழுதி இயக்கி நடிக்கவும் செய்தார். இப்படி “நால்வர்”, “மாங்கல்யம்”, “ராமாயணம்”, “மச்சரேகை” போன்ற நாடகங்கள் அரங்கேறின. கொஞ்ச காலம் `சக்தி’ நாடக சபையில் பணியாற்றினார். நாகராஜனுடன் சிவாஜிகணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன் போன்றவர்களும் ஒன்றாக நடித்தனர்.



ஏ.பி.நாகராஜனும் பெண் வேடத்தில் நடித்து வந்தார். “சங்கீதக் கோவலன்” நாடகத்தில், மாதவியாகவும், கண்ணகியாகவும் இரட்டை வேடத்தில் நடித்தார். அப்போது அவருக்கு வயது 9. நாடக நோட்டீசில் “9 வயது குயிலினும் இனிய குரல் வாய்ந்த சங்கீத மாஸ்டர் ஏ.பி.நாகராஜன், மாதவியாகவும், பின் கண்ணகியாகவும் நடிக்கிறார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நாகராஜனுக்கு நல்ல குரல் வளம் இருந்தது. நீண்ட வசனங்களை பேசும் ஆற்றல் பெற்றிருந்தார்.

பின்னர் சேலம் மாடர்ன் தியேட்டர்சில் உதவி ஒளிப்பதிவாளராக ஏ.பி.நாகராஜன் சேர்ந்தார். 1953—ல் சங்கீதா பிக்சர்ஸ் என்ற பட நிறுவனம், ஏ.பி.நாகராஜன் எழுதிய “நால்வர்” என்ற கதையை படமாக்கியது. ஒரே குடும்பத்தில் 4 பிள்ளைகள். மூத்தவன் போலீஸ் அதிகாரி. இன்னொருவன் அரசியல்வாதி. மற்றவர்கள் மாறுபட்ட குணம் கொண்டவர்கள். இதில், கடமையே உருவான போலீஸ் அதிகாரியாக நாகராஜன் நடித்தார். ஜோடியாக நடித்தவர் மலையாள நடிகை குமாரி தங்கம்.

குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட "நால்வர்", வெற்றிப்படமாக அமைந்தது. கதை— வசனத்தையும் நாகராஜன் சிறப்பாக எழுதியிருந்தார். இந்தப்படம் வெளிவந்தபின் "நால்வர்" நாகராஜன் என்று அழைக்கப்பட்டார்.

ஏ.பி.நாகராஜனுடன் பி.எஸ். சரோஜா, எஸ்.ஏ.நடராஜன், எம். என்.நம்பியார் ஆகியோர் நடித்தார்கள். ராஜசுலோசனா இப்படத்தில்தான் அறிமுகமானார். மாங்கல்யமும் வெற்றிப்படமாக அமைந்தது.



மாடர்ன் தியேட்டர்சில் ஏ.பி.நாகராஜன் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அங்கு எம்.ஏ.வேணு தயாரிப்பு நிர்வாகியாக இருந்தார். சேலம் செவ்வாய்ப் பேட்டையை சேர்ந்தவரான வேணுவும் அதிகம் படிக்காதவர். மாடர்ன் தியேட்டர்சில் சாதாரண வேலையில் நுழைந்த அவர், தனது திறமையால் நிர்வாகி அந்தஸ்துக்கு உயர்ந்தார்.

பின்பு எம்.ஏ.வேணு மாடர்ன் தியேட்டர்சை விட்டு விலகி, "எம்.ஏ.வி. பிக்சர்ஸ்" என்ற படக்கம்பெனியை ஆரம்பித்தார். ஏ.பி.நாகராஜனை கதாநாயகனாகப் போட்டு, "மாங்கல்யம்" என்ற படத்தை எடுத்தார். 1954—ல் வெளிவந்த இந்தப் படத்தின் கதை ட்ட வசனத்தை ஏ.பி.நாகராஜன் எழுத, கே.வி.மகாதேவன் இசை அமைத்தார். கே. சோமு டைரக்ட் செய்தார்.





நடிகர் வி.கே.ராமசாமியுடன் சேர்ந்து லக்ஷ்மி பிக்ஷர்ஸ் என்னும் நிறுவனத்திலிருந்து நாகராஜன் கதை வசனத்தில் 'நல்ல இடத்து சம்பந்தம்,' 'வடிவுக்கு வளைகாப்பு' ஆகிய படங்கள் வந்தன. 'மக்களைப் பெற்ற மகராசி' என்னும் படம் மாபெரும் வெற்றி படமாய் நாகராஜனுக்கு அமைந்தது.

## நவராத்திரி

1964—ல் "ஸ்ரீவிஜயலட்சுமி பிக்சர்ஸ்" என்ற சொந்தப்படக் கம்பெனியை நாகராஜன் தொடங்கினார். இந்த படக்கம்பெனியின் முதல் படம் "நவராத்திரி." இதில் சிவாஜிகணேசன் 9 வேடங்களில் நடித்தார். அவருக்கு ஜோடி சாவித்திரி. கதை— வசனம் மட்டும் எழுதி வந்த நாகராஜன், இந்தப் படத்தில் முதன் முதலாக டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றார். சிவாஜிகணேசனின் 100— வது படமான "நவராத்திரி" சூப்பர்ஹிட் படமாக அமைந்தது.

## திருவிளையாடல்

அடுத்து ஏ.பி.நாகராஜன் தயாரித்து,



திரைக்கதை ஸ்ரீ வசனம் எழுதி டைரக்ட் செய்த “திருவிளையாடல்” வரலாறு படைத்த படமாகும். ஏ.பி.நாகராஜனின் முதல் வண்ணப்படம் இது. சிவாஜி கணேசன், சாவித்திரி, முத்துராமன், தேவிகா, நாகேஷ், டி.எஸ். பாலையா முதலியோர் நடித்தனர். நக்கீரராக ஏ.பி.நாகராஜன் நடித்தார். சிவனாக சிவாஜியும், தருமியாக நாகேசும் தோன்றிய நகைச்சுவை காட்சி, மிகச்சிறப்பாக அமைந்து, காலத்தை வென்று இன்றும் வாழ்கிறது.

“திருவிளையாடல்” தமிழ்நாட்டில் பல நகரங்களில் 25 வாரங்கள் வெற்றிகரமாக ஓடிய வெள்ளி விழாப்படமாகும். திருவிளையாடலைத் தொடர்ந்து, “சரஸ்வதி சபதம்”, “கந்தன் கருணை”, “திருமால் பெருமை” முதலிய புராணப் படங்களை எடுத்தார். தில்லானா மோகனாம்பாள் 1968—ம் ஆண்டில் ஏ.பி.நாகராஜன் தயாரித்து இயக்கிய “தில்லானா மோகனாம்பாள்” ஒரு திரைக்காவியம்.

நாதசுரவித்துவான் சிக்கல் சண்முகவடிவேலுவாக சிவாஜி கணேசனும், நடன நங்கை மோகனாம்பாளாக பத்மினியும் வாழ்ந்து காட்டினர். தில்லானா மோகனாம்பாள் சூப்பர்ஹிட் படமாக அமைந்தது. இப்படம், ஆங்கில விளக்க உரையுடன் மேல் நாட்டில் திரையிடப்பட்டது. அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்று இந்தப் படத்தின் பிரதியை வாங்கிச்சென்று நாதஸ்வரம், பரதம் ஆகிய கலைகளைப்பற்றி தங்களது மாணவர்களுக்கு விளக்கப்படுத்தி வருகிறது.

தமிழின் முதல் சினிமாஸ்கோப் படமான ‘ராஜராஜசோழன்’ ஆகியவை உண்டு . இந்தியாவுக்கு வெளியே விருதுபெற்ற முதல் தமிழ்த் திரைப்படத்தை எடுத்தவர் என்ற பெருமையும் இவரையே சாரும்.




திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்த்திரையில் பகுத்தறிவு கருத்துகளைப் பரப்பி வந்தகாலத்தில் அதற்கு நேர்எதிராக புராணப் பாத்திரங்கள் மூலம் ‘தெய்வ’ங்களைத் தமிழ்ப பேச வைத்தவர் ஏ.பி.நாகராஜன். அவர், திராவிட இயக்கத்திற்கு எதிராக சிலம்புச்செல்வர் ம.பொ.சி. தொடங்கிய தமிழரசுக் கழகத்தில் இணைந்திருந்தார். அதனால், அவருடைய படைப்புகளிலும் அது வெளிப்பட்டது.

கம்பெனி நடிகர்கள் என்று சொல்வார்கள். அதுபோல ஏ.பி.என்., படங்களில் சில குறிப்பிட்ட நடிகர்கள் கண்டிப்பாக பங்கேற்பார்கள். உதாரணத்திற்கு பி.டி.சம்பந்தம், டி.என்.சிவதாணு, குண்டு கருப்பையா போன்றோர்.

தொடர்ந்து வெள்ளிவிழா கண்ட படங்களைத் தந்த ஏ.பி.என், சிறு பட்ஜெட் படங்களையும் தந்தார். வா ராஜா வா, கண்காட்சி, அகத்தியர், திருமலை தென்குமரி, குமாஸ்தாவின் மகள், மேல் நாட்டு மருமகள் ஆகிய படங்கள் வந்தன.




Thillana Mohanambal (1968)
nfai




நவரத்தினம்


திருவிளையாடல்











நன்கு படங்களில் சம்பாதித்து, தான் சம்பாதித்த பணத்தை திரையுலகிலேயே இழந்தவர் ஏ.பி.என். பொருளாதாரப் பிரச்சினை வாழ்நாள் முழுவதும் இருந்தது.

வி.கே.ராமசாமியுடன் சேர்ந்து சிவாஜி,பானுமதி நடித்த 'மக்களைப் பெற்ற மகராசி', எம்.ஆர் ராதா நடித்த 'நல்ல இடத்து சம்பந்தம்' போன்ற படங்களைத் தயாரித்தார். வி.கே.ஆர் நட்பு கசந்ததில் பின்னால் இவர் பெரிய இயக்குனரான போது ஏ.பி.என் படங்களில் வி.கே.ராமசாமி நடித்ததேயில்லை.

கடும் நெருக்கடியின்போது எம்.ஆர்.ராதா உதவி செய்தபோது எம்.ஆர்.ராதாவை பக்கத்து அறைக்கு அழைத்து காலில் விழுந்து கும்பிட்டார். ராதா தன் இயல்புப்படி 'எல்லார் முன் காலில் விழ வெட்கப்பட்டு ரகசியமாக பிறர் அறியாமல் நாகராஜன் என் காலில் விழுகிறான்.' என்றார்.

ராதாவும் கூட இவர் பின்னால் இயக்கிய எந்தப் படத்திலுமே நடித்ததில்லை.

திருவிளையாடலில் சிவாஜி,நாகேஷ் நடித்த அந்த பிரபல எபிசோடில் நக்கீரனாக ஏ.பி.என். பிரமாதமாக நடித்தார்.ஆனால் அதன் பின் அவர் இயக்கிய படங்கள் எதிலும் நடித்ததில்லை.




மிக பிரமாண்ட படங்களாக எடுத்த பின் சின்ன பட்ஜெட் படங்களாக திருமலை தென்குமரி,கண்காட்சி எடுத்தார். பின் சின்ன பட்ஜெட் அகத்தியர்,திருமலை தெய்வம் புராணப்படங்கள்.

மீண்டும் பிரமாண்டமாக 'ராஜராஜசோழன்'சினிமாஸ்கோப் (டைட்டில் கார்ட்— நடிகர் திலகம் உயர்திரு சிவாஜிகணேசன்)

நடிகர் திலகம் சிவாஜியை வைத்துப் பல படங்களை இயக்கிய இவர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆரை வைத்து இயக்கிய ஒரே படம், 'நவரத்தினம்'. அதுவே அவரது கடைசிப் படம். 1977—ல் நாகராஜன் மறைந்து விட்டாலும் அவரது திரைத் தமிழ், தமிழ்த் திரை இருக்கும் வரை மறையப்போவதில்லை.

கடன் தொல்லையில் சிக்கித் தவித்த ஏ.பி.என், வாழ்வில் கடைசியாக பெரிய பட்ஜெட்டில் பிரமாண்டமாக எம்.ஜி.ஆரை கதாநாயகனாக்கி அவருக்கு ஒன்பது நாயகியர் என்று 'நவரத்தினம்' படத்தை இயக்கினார். அப்படத்தின் மூலமாக அவரது கடன் தொல்லை நீங்கியது.

ஏ.பி.நாகராஜன் போன்ற மாபெரும் மேதமை மிகுந்த இயக்குனரைத் தமிழ்த் திரையுலகம் அதற்கு முன்னரும் கண்டதில்லை. இனியும் காண்பதற்கில்லை!

ஒப்பற்ற ஒளி தரும் பரிதியாகத் தமிழ்த் திரைவானில் அவர் என்றும் ஒளிர்ந்து கொண்டிருக்கிறார் என்பதே உண்மை!

# படப்பட்டியல்

தன் சொந்த தயாரிப்பு நிறுவனமான ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ் ஆரம்பித்து.. படங்களைத் தொடர்ந்தார்..

நவராத்திரி (1964) சிவாஜி கணேசனின் நூறாவது படம்

திருவிளையாடல் (1965)

சரஸ்வதி சபதம் (1966)

திருவருட்செல்வர் (1967)

சீதா (1967)

கந்தன் கருணை (1967)

திருமால் பெருமை (1968)

தில்லானா மோகனாம்பாள் (1968)

வா ராஜா வா (1969)

குருதட்சணை (1969)

விளையாட்டுப் பிள்ளை (1970)

திருமலை தெங்குமரி(1970)

கண்காட்சி (1971)

அகஸ்தியர் (1972)

திருமலை தெய்வம் (1973)

ராஜ ராஜ சோழன் (1973)

காரைக்கால் அம்மையார் (1973)

குமாஸ்தாவின் ,மகள் (1974)

மேல் நாட்டு மருமகள் (1975)

நவரத்தினம் (1977)




தமிழில் சிறந்த படத்திற்கான குடியரசுத் தலைவர் விருது தில்லானா மோகனாம்பாள் படத்திற்கும், திருவிளையாடல் படத்திற்கும் கிடைத்தது.

# காதலெனும் பொருண்மை

இவ்வேட்கையால் தணிவுற்ற
காதலர் யாரையும்
கண்டதுண்டோ நீ?
இக்கடலால் தணிவுற்ற
மீனெதையும் கண்டதுண்டோ நீ?
சைத்ரீகனிடமிருந்து தப்பியோடும்
சித்திரம் எதையும்
கண்டதுண்டோ நீ?

அஸ்ராவிடமிருந்து மன்னிப்பு கோரும்
வாமிக் யாரையும்
கண்டதுண்டோ நீ?
பிரிவில் காதலர்
பொருளற்ற பெயர்போல்
காதலெனும் பொருண்மைக்கோ
தேவையில்லை பெயரேதும்.

நீ கடல் நான் மீன்
உன்னிஷ்டம்போல்
ஏந்திக்கொள் என்னை
கருணை செய்,
ராஜவல்லமை செய்,
நீயின்றி நானோ தனியனாகிறேன்.

பெருந்திறன் பேரரசே,
கருணையில் ஏனிந்த சுணக்கம்?
ஒரு நொடி நீயில்லாவிடினும்
தீயெழுந்து வானுயரும்.
அத்தீயுன்னைக் கண்டால்
ஒதுங்கிக்கொள்கிறது ஒரு மூலையில்
தீயிலிருந்து ரோஜா பறிப்பவர் எவருக்கும்
அற்புத ரோஜா நீட்டுகிறது தீ.

பெருந்துயரம் இவ்வுலகெனக்கு நீயின்றி,
நீயில்லாத ஒரு கணமேனும் கூடாது.
உன் ஜீவன் மீது ஆணையாக,
நீயில்லாத வாழ்வெனக்குச்
சித்ரவதையும் வலியுமே!

ஒரு சுல்தான்போல்
ராஜ நடை போடுகிறது
உன்னுரு என்னிதயத்துள்,
ஜெருசலேம் தேவாலயத்துள் நுழையும்
சுலைமான்போலவும்.
ஆயிரம் தீப்பந்தங்கள் உயிர்கொள்ள
மசூதி ஒளிர்வுகொள்கிறது
சொர்க்கத்திலும் கௌஸார்
பொய்கையிலும்
நிரம்பி வழிகிறார்கள்
ரித்வான்களும் ஹூரிகளும்

மாட்சிமை மிகு அல்லா,
மாட்சிமை மிகு அல்லா,
விண்ணகத்தில் எத்தனையெத்தனை
நிலாக்கள்!
இந்தப் பீடம் முழுவதும்
அவ்வளவு ஹூரிக்கள்
விழியற்றோருக்கு மட்டும் புலப்படாமல்.
சடுதியான, ஆனந்தமான பறவையே
நேசத்துக்குள் முகாமிடுகிறது.
காஃப் மலையில் முகாமிட்டு வசிக்க
அன்காப் பறவையன்றி வேறு யாரால்
முடியும்?
சடுதியான, ராஜ அன்கா, பேரரசன்
ஷம்ஸ்!

கிழக்கு, மேற்கு மட்டுமல்ல
எவ்விடத்தையும் சாராதது
அந்தச் சூரியன்!

**ஜலாலுதீன் ரூமி**

தமிழில்: ஆசை

# மழைக்கோப்பை

கோப்பை நிறைய தேநீரும்
கோப்பை நிறைய மழையும்
மேஜையின் எதிரெதிரே வைத்தேன்.

நீ மழைக்கோப்பையை எடுத்துக்கொண்டாய்.
புன்னகையுடன் உறிஞ்சத்தொடங்கினாய்.
ஒவ்வொரு துளியும் மழை...
ஒவ்வொரு துளியும் காலம்...

மழையைக் கண்ணீரோடு ஒப்பிடுவதில்
உடன்பாடில்லை எனக்கு' என்றபடி
கோப்பையை வைத்தாய்.
பிரார்த்தனையும் வாழ்த்துகளுமாய்
இரு பூக்கள் முளைத்திருந்தன.
காலிக் கோப்பை பூந்தொட்டியாகியிருந்தது.

`மழை ஒரு மந்திரச்சொல்'
என்றபடி விடைபெற்றாய்.
மழையின் கால்களுக்கு இரண்டு கொலுசுகள்.
வலதுகால் வைத்து வரும்போது
மண்வாசம் கிளர்த்துகிறது.

மழை திரும்பிச்செல்லும்போது
எல்லாவற்றையும் ஈரப்படுத்திவிடுகிறது
நம் பாதைகளை...
நம் ஆடைகளை...
நம் பிரார்த்தனைகளை...
நம் வாழ்த்துகளை...
நம் கண்களை...

மழைவாசம் மெல்லப் பரவுகிறது.
பூத்திருக்கும் இரு மலர்கள் அசைகின்றன
உன் கண்களென.

**சுகுணா திவாகர்**

# சூத்திரம்

பள்ளிக்கூடத்தில்
ஸ்கேல் இல்லாமல்
நேர்க்கோடு இழுப்பது
எங்களுக்கெல்லாம்
ஒரு சாகசமாக இருந்தது...

என் தாத்தனின் ரகசியச் சூத்திரப்படி
நான் நேர்க்கோடு வரைந்து
பள்ளியில் வெற்றிபெற்றேன்.
தாத்தன்கள் இல்லாதவர்களுக்கு
வெற்றி
அவ்வளவு சுலபமாயிருக்கவில்லை.

வளர்ந்த பிறகுதான் புரிந்தது
நான் வரைந்து வெற்றிபெற்ற
நேர்க்கோடுகளிலெல்லாம்
வளைவுகள் இருந்தன.

வளைவுகளின்
மேல் வெயில்
விழுந்து
கானல்நீராய்
நேர்க்கோடு
தெரிந்தது

தெரிந்தபோது
என் பேரனுக்கு
நேர்க்கோடு
வரையும்
சூத்திரத்தை
ஏற்கெனவே
சொல்லிக்கொடுத்துவிட்டிருந்தேன்!

**ராம்பிரசாத்**

'கொடி' மற்றும் 'ராட்சசன்' பட இயக்குநர்களுடன் நடிகர் தனுஷ் இணையும் புதிய படங்களின் அறிவிப்பு வெளியாகியுள்ளது. சத்ய ஜோதி பிலிம்ஸ் பட நிறுவனத்தின் அடுத்தடுத்த இரண்டு படங்களில் நடிக்க நடிகர் தனுஷ் ஒப்பந்தமாகியுள்ளார். அந்நிறுவனம் தயாரிக்கும் 34வது படத்தை எதிர்நீச்சல் மற்றும் கொடி படங்களின் இயக்குநர் துரை செந்தில்குமார் இயக்க உள்ளார். மீண்டும் இரட்டை வேடத்தில் நடிக்கும் தனுஷ், எப்படி தன் தோற்றத்தில் மாற்றம் செய்யப் போகிறார் என்பது கேள்விக்குறியாக எழுந்துள்ளது.

## நடிப்புக்கு இன்னுமொரு பாடம்!



## மீண்டும் இரட்டை வேடம்!

## அறிமுகமாகும் பிரபலங்கள்!



## பிரபலங்களாகட்டும் புதுமை!

தெலுங்கில் விஜய் தேவரகொண்டா நடிப்பில் வெளியாகி, பெரும் வரவேற்பைப் பெற்ற படம் 'அர்ஜுன் ரெட்டி'. அது 'வர்மா' என்ற பெயரில் தமிழில் ரீமேக் செய்யப்பட்டுள்ளது. முதலில் பாலா இயக்க, பின்னர் இயக்குநர் மாறி உருவாகியுள்ள இந்தப் படத்தில், விக்ரமின் மகன் துருவ் விக்ரம் ஹீரோவாக அறிமுகமாகிறார். 'மேகா' என்ற மாடல் துருவ் விக்ரம் ஜோடியாக நடித்துள்ளார். ஏற்கெனவே ஒரு பெங்காலிப் படத்தில் நடித்திருக்கும் மேகா, 'வர்மா' மூலம் தமிழில் அறிமுகமாகிறார்.

## ரசிக சிகாமணிகளே!...

வரும் மே *1* ஆம் தேதி அஜித் நடிப்பில் உருவாகும் 'அஜித் *59*'மற்றும் சிவகார்த்திகேயனின் 'மிஸ்டர் லோக்கல்' ஆகிய படங்கள் வெளியாக இருப்பதால் சமூக வலைதளங்களில் மோதல் போக்கு உருவாகியுள்ளது. சமீபத்தில் 'பேட்ட' மற்றும் 'விஸ்வாசம்' படம் இரண்டும் ஒரே நாளில் வெளியானது. ரஜினியின் 'பேட்ட' படத்தைவிட 'விஸ்வாசம்' திரையரங்குகளில் நல்ல வசூலை ஈட்டியது. வழக்கமாகப் பட ரிலிஸ் நிகழ்ச்சிகளின் போது ரசிகர்கள் மோதிக்கொள்வார்கள். ஆனால் இம்முறை ரிலிஸ் தேதிக்கே மோதிக்கொள்ளும்படியான சூழ்நிலை உருவாகியுள்ளது.



## விரும்புங்கள்... விரிசல் ஏற்படுத்தாதீர்கள்!



## 'சைலண்ட்'டாக வரும் சௌந்தர்யம்!

## இனி இஞ்சி இடுப்பழகிதான்!

உடல் எடையைக் குறைத்து பழைய நிலைமைக்கு திரும்பியுள்ள அனுஷ்காவுக்கு பாராட்டுகள் குவிகிறது. அனுஷ்கா நடிப்பில் 2018—ம் ஆண்டு ஜனவரியில் வெளியான படம் 'பாகமதி'. தமிழ் மற்றும் தெலுங்கில் மாபெரும் வரவேற்பைப் பெற்ற அப்படத்துக்குப் பிறகு அனுஷ்கா வேறெந்த படத்திலும் நடிக்கவில்லை. 'இஞ்சி இடுப்பழகி' படத்துக்காக ஏற்றிய எடை குறையாததால், எந்தவொரு புது நிகழ்ச்சியிலும், படத்திலும் நடிக்காமலே இருந்தவர், உடல் எடை குறைப்புக்குப் பிறகு மாதவன், அஞ்சலி, ஷாலினி பாண்டே உள்ளிட்ட நடிகர்களுடன் ஹாலிவுட் நடிகர்களும் நடிக்கும் 'சைலன்ஸ்' படத்தில் நடிக்கிறார் அனுஷ்கா. இது வசனமே இல்லாத படம் என்பதால், அனைத்து மொழிகளிலும் வெளியிட படக்குழு முடிவு செய்துள்ளது.

# காவிரி முதல்
## நீ(தி)ர் தேடி ஒரு நெடும்பயணம்!

'பின்னாலே தெரிவது அடிச்சுவடு!
முன்னாலே இருப்பது அவன் வீடு!
இரண்டுக்கும் நடுவினில் விளையாடு!
நல்லதை நினைத்தே போராடு!'

மக்கள்திலகம் தனக்கே உரிய உற்சாகத்தோடும் கம்பீரத்தோடும் பாடும் அந்தப் பாடல் என்னைச் செதுக்கிய பாடல்! என் வாழ்வின் ஓட்டத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி, நான்கு சுவரிலிருந்து பெயர்த்தெடுத்து பொது வெளியில் உலவ விட்ட பாடல்!

வாழ்வில் மேற்கொள்ளும் பயணங்களும் சில நேரங்களில் புதிதாகவும், புதிராகவும், புதினமாகவும் கூட அமைந்துவிடுவதுண்டு!

அப்படித்தான் என் வாழ்வின் அந்திமம் வரையிலும் நினைவில் கொள்ளும் விதமாக அமைந்துவிட்டது அந்தப் பயணம்! இந்தத் தொடர் எழுதும் வேளையில், அப்பயணம் மேற்கொண்டு சுமார் ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால் இன்னமும் பசுமையாக அந்த நாட்கள் என் நெஞ்சில் நிழலாடிக் கொண்டே இருக்கின்றன. அந்த நினைவுகளை அசைபோடுவது மட்டும்தான்




கவியரசர் கண்ணதாசனின் அந்தப் பாடல் வரிகளைப் போலத்தான் அமைந்து விட்டது என் வாழ்வில் நான் மேற்கொண்ட ஒரு பயணம்!




வாழ்வே ஒரு பயணம்தான் என்றாலும், இந்தத் தொடரின் நோக்கமாக இருப்பின் அது பிறர்க்கு அர்த்தமற்றதாகி விடும். ஆனால் மக்களின் நல்வாழ்வுக்கு, குறிப்பாக இந்திய விவசாயிகளுக்கு, அதிலும் குறிப்பாகத் தமிழகத்து விவசாயிகளுக்கு நலம் விளையும் நோக்கத்தோடு மேற்கொள்ளப் பட்ட பயணம் அது!

மேதகு முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் "நீங்கள் கண்ட இந்தியாவின் நிலை இது என்பது பதியப்பட வேண்டும். இப்பயணத்தைப் பற்றிப் புத்தகமாக எழுதி வெளியிட வேண்டும்!" என்பதை வலியுறுத்தினார்.

# கங்கை வரை

## கொற்றவன்

நிச்சயம் எழுதுவதாக அவரிடம் வாக்கும் தந்துவிட்டு வந்தபின், நெடுநாட்களாக இதை எழுத இயலாமல் போனது. அடிக்கடி இப்பயணக் குறிப்பேடுகளைப் பார்க்கும்போது திருமிகு கலாம் அவர்களுக்கு நான் தந்த வாக்குறுதி நினைவுக்கு வந்து என்னைக் கலங்கடிக்கும்!

இதனை எழுத்தாக்கம் செய்ய வேண்டிய கடமை என்னை அவ்வப்போது உந்தித் தள்ளிக்




கொண்டே இருந்தாலும், எதற்கும் நேரம் காலம் வாய்க்க வேண்டும் என்பார்கள்.

அந்த நேரம் இப்போது வாய்த்திருக்கிறது. இந்த நேரத்தில் மீண்டும் அப்பயண நாட்களை ஒவ்வொரு நாளாக நினைத்து பார்க்க வேண்டிய தருணம் வாய்த்திருக்கிறது. ஆம்! இப்பயணத் தொடர் எழுதுவதற்காக அப்படி ஒரு கட்டாயத் தேவையும் இருக்கிறது.

வந்த வழி மறந்து விட்டால் போகும் வழி பொருளற்றதாகிவிடும்!

வாழ்க்கை சில நேரங்களில் புதிராகிப் போவது, வந்த வழியைச் சிலர் மறந்ததன் காரணமாகவும் கூட இருக்கலாம்!

ஒவ்வொரு நாளும்,




ஒவ்வொரு பொழுதும் மனிதர்களுக்கு ஒரு பாடத்தை நடத்திக் கொண்டே இருக்கிறது அதை எடுத்துக் கொள்வதும் விடுத்துச் செல்வதும் அவரவரின் பக்குவப் படிநிலைகள்!

வாழ்க்கையில் அடிமீது அடியெடுத்து ஒவ்வொரு நாளையும் கடந்து செல்லும் நாம், சில நேரங்களில் நாம் எடுத்து வைத்த அடி சரியா தவறா என்று அலசிப் பார்க்க வேண்டிய நிலையை எட்டுவோம்.

அந்த அலசலை நாம் விரும்பியோ அல்லது விரும்பாமலோ கூட இருக்கலாம். ஆனால் நடந்து வந்த பாதை இதுவென்று அறிந்து கொண்ட எவரும் எடுத்து வைக்கும் அடியில் எச்சரிக்கையாக இருப்பர் என்பது தான் வாழ்ந்தவர்களின் வரலாறு இருக்கிறது!

இவ்வளவு பெரிய பீடிகை தேவையா என்று பார்த்தால் இந்தத் தொடரை நான் எழுதுவதற்கு அடித்தளமாக இருப்பதே நான் நடந்து வந்த பாதைதான்!




சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பத்திரிகைச் செய்தி! தஞ்சை விவசாயிகள் தற்கொலை என்பது அந்த செய்தியின் தலைப்பு! அதை ஒட்டி உள்ளீடாகப் போகும்போது, படிக்கும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் நான் வடிக்கும் கண்ணீராக மாறியது.

தஞ்சை விவசாயிகளின் நிலைமை இவ்வளவு துயரம் நிறைந்ததா என்பதை எண்ணிப் பார்க்கும் பொழுதாக அமைந்தது அந்தப் பொழுது!

ஒரே ஆண்டுக்குள் 200க்கும் மேற்பட்ட தஞ்சை விவசாயிகள் தற்கொலை என்பது தலைப்புச் செய்தியாகத் தமிழகத்தில் பேசப்படவில்லை என்பது துயரமான செய்தி!

தலைப்புச் செய்திகளின் விவரங்களை தமிழகப் பத்திரிகைகள் தரும் விதத்தைப் பார்த்தால் பெருந்துயரம்!

ஒரு நடிகை கடை திறப்பு விழாவுக்கு சென்றது மிகப்பெரிய செய்தியாகிறது!

யாரோ ஒரு மனிதன் தன்னுடைய இன்பத்திற்காகச் செய்யும் செய்தி மிகப் பெரிய விளம்பரத்தைப் பெறுகிறது!




யாரோ யாருடனோ சென்றால், அது தமிழகத்துக்குப் பிரதானச் செய்தியாகிறது!

மொத்தத்தில் விளம்பரங்களை மட்டுமே தலைப்புச் செய்தியாகவும், தலைபோகிற செய்தியாகவும் காட்டிவிட்டு, தலைப்புச் செய்தி ஆகா வேண்டிய செய்திகளைத் துணுக்குச் செய்தியாக்கித் தருகின்றன தமிழகத்து ஊடகங்கள்!

தஞ்சை விவசாயிகள் தற்கொலை என்ற குறுஞ் செய்தி என் தலையில் பெரும் செய்தியாகப் பதிந்தது எந்தச் செய்தி சொல்லப்பட வேண்டுமோ

அந்தச் செய்தி இருட்டடிப்பு செய்யப்படுகிறது. சொல்லக் கூடாதோ தலைப்பு செய்தியாகவும் மக்களைக் கவர்ந்திழுக்கும் செய்தியாகவும் மக்களின் மனப் போக்கில் ஆறுதல் தரும் செய்தியாகும் பயப்படுகிற வேடிக்கை வியாபார உத்தி என்ற பெயரில் ஊடகங்களிடையே நிகழ்ந்து வருவது வாடிக்கையான ஒன்றாகவே போய்விட்டது

இந்த சமயத்தில் மகாகவி பாரதியின் பாடல் வரிகள் நினைவுக்கு வருகிறது.

"தேடிச் சோறு நிதம் தின்று பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி மனம்வாடி
துன்பம் மிக உழன்று பிறர்வாடப்
பல செயல்கள் செய்து நரைகூடிக் கிழப்
பருவம் எய்தி —கொடும்கூற்றுக்கு இரையெனப்
பின் மாயும் பல வேடிக்கை மனிதரைப் போல
நான் வீழ்வேனென்று நினைத்தாயோ!"

சமூகத்தின் மீது அக்கறை கொண்ட ஒவ்வொரு மனிதனும் தன்னை நோக்கியே பாடிக்கொள்ள வேண்டிய பாடல்!

தன்பங்குக்கு அந்த அக்கினிக் குஞ்சு எப்போதோ பாடிச் சென்று விட்டது.

நான் படித்த அந்தப் பத்திரிகைச் செய்தி என்

தலையில் ரீங்காரமிட்டுக்கொண்டே இருந்தது. சில சமயங்களில் கனாவாக வந்து போனது.

எனக்குள் சிறிய சஞ்சலம் தலை காட்ட ஆரம்பித்தது. அரசாங்கத்தால் தீர்வு காண முடியாததை ஒரு தனிமனிதன் யோசிக்கும் பொழுது சிக்கல்கள் வரத்தானே செய்யும்! வந்தது எனக்கும்!

தமிழகத்தில் தொடர்கதையாக நீடிக்கும் இந்தத் தண்ணீர்ச் சிக்கலை, தவிக்கும் தமிழக விவசாயிகளின் பெரும் சிக்கலை, இந்தியத் தலைநகருக்கு, இந்தியாவை ஆளும் அரசுக்குக் கொண்டு சென்றால் என்ன? என்ற கேள்வி எழுந்தது. இதற்கு முன்பு இந்தச் செய்தி கொண்டு செல்லப்படவில்லையா என்றால், செய்தி சொல்லப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்




அது தீர்வு காணும் வரை!

அந்த எண்ணத்துடன் இந்தச் செய்தியை முதலில் தமிழகத்துக்கும், பிறகு பிற மாநிலங்கள் வாயிலாக இந்தியத் தலைநகருக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்று நண்பர்களிடம் பேசிய பொழுது, இதற்கு என்ன செய்ய முடியும் என்று அலசி ஆராய்ந்தோம்.

மேலும் தஞ்சை விவசாயிகளின் தற்கொலை குறித்து ஆராயத் தொடங்கியபோது, ஒரே பதிலாக, 'தண்ணீர் இல்லை! அதனால் உயிர் வாழ எங்களுக்குத் தகுதி இல்லை!' என்று அவர்களது குரலாகப் பிறர் தங்களது குரலை முன்வைத்தார்கள். அது உண்மையா என்று ஆராய்ந்தால் விவசாயிகள் பயிர்கள் வாடியதனால் மட்டும் இறக்கவில்லை! தாங்கள் வாங்கிய கடனுக்காகவும் இறந்திருக்கிறார்கள் என்ற சோகமும் அதனுள் புதைந்து இருந்தது.

காவிரியில் தண்ணீர் வந்தால் தமிழகத்தில் விவசாயம் தழைத்தோங்கும்! அது வராதபோது கண்ணீரும் பஞ்சமும்தான் தலைப்புச் செய்தியாகும் இந்தத் தகவலும் எங்களுக்குப் புரிந்தது.

இந்தியாவில் ஆண்டுதோறும் சராசரியாக 15,459 விவசாயிகள் தற்கொலை மற்றும் மாரடைப்புக்கு ஆளாகிறார்கள் என்கிறது ஒரு புள்ளி விவரம்!

அதன்படி, 2000 ஆண்டு — 16,603,

2001 — 16,415,

2002 — 17,971

2003 — 17,164 என்கிறது




அந்தப் புள்ளி விவரம்!

வயிற்றுக்குச் சோறிடும் நம் உழவர் பெருமக்கள் தாங்கள் வாழ வழிவகை தெரியாமல் தற்கொலை செய்து மாண்டு செய்திகள் மேலும் மேலும் என்னைத் தடுமாற்றம் கொள்ளச் செய்தது. திரைத்துறையில் வாய்ப்புத் தேடி நான் அலைந்து கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில், எந்த வாய்ப்பும் கிட்டாமல், திரைத்துறையில் கிடைத்த செட் பாய் போன்ற அடித்தட்டு வேலைகளையெல்லாம் செய்து, வயிற்றுப்பாட்டை ஓட்டிக் கொண்டிருந்த அந்த நாட்களில்... இந்தச் சோகம் என்னைச் சமூகத்தின் மீது சிறிதளவேனும் அக்கறை கொள்ளச் செய்தது என்றால், அது நான் பிறந்த மண்ணில் நிகழும் சோகம் என்ற அக்கறையாகவும் கூட இருக்கலாம்!




தொடர்ந்து இது குறித்து நண்பர்களுடன் ஒவ்வொரு நாளையும் நகர்த்தியபோது இச்செய்தியை இந்தியா முழுவதும் கொண்டு செல்வதுதான் ஏற்புடையதாக இருக்கும் என்று எண்ணினோம்!

இந்தியா முழுவதும் தண்ணீர்ச் சிக்கல் வரக்கூடாது என்றால், அதற்கான தீர்வு, நதிகள் நாட்டின் சொத்தாக இருக்க வேண்டும். அது ஒவ்வொரு மாநிலத்தின் தனிச்சொத்தாக இருக்கக் கூடாது. அரசியலமைப்பு சட்டம் அவ்விதமாகத்தான் சொல்கிறது என்றால், அதனை ஏன் அரசியல்வாதிகள் நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை?

காவிரி கர்நாடகத்துக்கு மட்டுமன்று தமிழகத்துக்கும் கூட! முல்லைப் பெரியாறு கேரளத்துக்கு மட்டுமன்று தமிழகத்துக்கும் கூட! எனவே தென்னக நதிகள் தென்னக மாநிலங்களுக்குப் பொதுவானதாக அமைந்திட வேண்டும்! கரைபுரண்டோடும் கங்கையும் பிரம்மபுத்திராவும் வீணாய்க் கடலில் கலக்காமல், இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு வழங்க வேண்டும்! வாழ்வைத் தரவேண்டும்!




அதுபோன்ற பரந்துபட்ட சிந்தனைகள் எங்களுக்குள் பதியத் தொடங்கிய இந்தச் சமயத்தில்தான் நதிகள் இணைப்புக் குறித்து மேதகு அப்துல் கலாம் அவர்கள் முன்மொழிந்தார்.

இதனை வெறும் ஏட்டளவில் வைக்காமல் செயற்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதை மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும் என்றும் முடிவெடுத்து, நாடு முழுதும் நடைப்பயண பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என்ற முடிவெடுத்தோம்.

இந்தியா முழுதும் நடந்து செல்வது எத்தனைச் சிக்கல் நிறைந்தது என்பதை எல்லாம் அச்சமயத்தில் எண்ணிப் பார்க்கவில்லை!

'எண்ணித் துணிக கருமம்' என்பார் வள்ளுவர். ஆனால் தஞ்சை விவசாயிகள் தற்கொலைகளை மட்டுமே எண்ணிப் பார்த்த மனத்துடன், எது நடந்தாலும் எங்கள் பயணத்தை மேற்கொள்வதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்ற முடிவுடன் 'காவிரி முதல் கங்கை வரை' நடைப்பயணம் என்று அறிவித்தோம்.

தனி நபராக நின்று இதனைச் செய்வதைவிட ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலம் செய்வது சிறப்பானதாக இருக்கும் என்று சிலர் ஆலோசனை வழங்கினார்கள். அதன்படி 'வெளிச்சம்' என்ற ஒரு அமைப்பை நண்பர்களுடன் சேர்ந்து ஏற்படுத்தினேன். அந்த அமைப்பின் தலைவன் என்ற முறையில் இப்பயணத்தின் தலைவனாகவும் அமர்த்தப்பட்டேன்.

என் பள்ளித் தோழர்களான திரு வி.ஜி.ராஜன் திரு.ஜெயக்குமார் ஆகியோர் என்னுடைய இப்பயணத் திட்டத்திற்கும் 'வெளிச்சம்' அமைப்புக்கும் இரு கண்களாக அமைந்தனர்.

(தேடலுடன் பயணிப்போம்..)

# புத்தக விமர்சனம்

## மாமல்லபுரத்தில் மங்கையும் சிற்பியும்

**விலை : ரூ. 200**

**நூல் ஆசிரியர்:**

**ஏ.பி நாகராஜன்**

**வெளியீடு:**

**வானதி பதிப்பகம்,**

**சென்னை–17.**




*தமிழ்த் திரையுலகில் தனக்கென தனி முத்திரை பதித்த ஏ.பி நாகராஜன் படைத்துள்ள சரித்திரப் புதினமே 'மாமல்லபுரத்தில் மங்கையும் சிற்பியும்' என்ற அற்புதமான அழகியலும் தத்துவமும் கலந்த தனித்துவமான படைப்பு!*

*எத்தனையோ தமிழ்த் திரைப்படங்கள் வந்திருக்கும்போதும், தனது படைப்புக்களான திருவிளையாடல், சரஸ்வதி சபதம், திருவருட் செல்வர் போன்ற காலத்தால் அழியாத அமரத்துவம் பெற்ற திரைப்படங்களைத் தந்து அழியாப் புகழ் பெற்றதைப் போலவே, பல்லவர்களின் காலத்தில் புகழ்மிக்க படைப்பாக அமைக்கப்பட்ட மாமல்லபுரத்தின் மகிமையை மையப்படுத்தி காதலையும் வீரத்தையும் கலந்து, படிக்கும் மனங்களில் பெரும் பரவசத்தை ஏற்படுத்தி, நெஞ்சில் நிலைக்கும் வண்ணம் தந்திருக்கிறார் ஆசிரியர்.*

*காட்சி ஊடகத்தில் ரசிகனைக் கட்டிப் போடும் வித்தை அறிந்த வித்தகரான இவரது எழுத்து நடை, வாசகர்களை வளைத்து தம் பக்கத்திலேயே கட்டிப் போடும் வித்தையை அறிந்திருப்பதையும் பறைசாற்றும்படி அமைந்திருக்கிறது இந்நூல்! வாசிப்பதற்கு மட்டுமன்று, தமிழையும், தமிழ் மண்ணின் கலாசாரத்தையும் நேசிப்பவர்களுக்கும் கிடைத்திருக்கும் அற்புத காலப்பெட்டகம் என்றே சொல்ல வேண்டும்!*

# புலிப்பார்வை

## கொற்றவன்

வியப்பில் விரிந்த வில்லவன் விழிகள் ஆடாது அசையாது அந்த ஓவியத்தின் மீதே நிலை குத்தியிருந்தன.

அந்த ஓவியத்தில் தீட்டப்பெற்றிருந்த வீரன், மார்பில் கவசம் தாங்கி, கையில் வாங்குவில்லில் நாணேற்றி, புருவம் நெருக்கி, விழிகள் சுருக்கி, புலிப்பார்வையுடன் குறிபார்த்தபடி இருந்தான் ஒரு வீரன். மென்பட்டுத் துகிலில் வரையப்பட்டிருந்த அவ்வீரனின் அரும்பு மீசையும், சுருள்முடியின் ஒரு இழைகூட மிகத் துல்லிய வரையப்பட்ட அவ்வோவியத்தின் உயிர்ப்பு, பார்ப்பவர் எவரையும் வசப்படுத்திவிடும் ஈர்ப்பு மிகுந்ததாகவும், தன்னை நோக்குபவரைக் குறிபார்ப்பது போன்ற தோரணையுடன் வீரத்தைப் பறைசாற்றும்படியாக அமைந்திருந்தது.

ஆனால் வில்லவனின் வியப்புக்கு அவ்வோவியத்தின் வனப்போ, வீரமோ, ஈர்ப்போ காரணமாக இல்லை! இந்த அற்புத ஓவியத்தை யார் வரைந்திருக்கக் கூடும்? எதிர்காலத்தை மிகச் சரியாகக் கணித்துவிடும் ஆற்றல் கொண்ட ஒரு மாமனிதர்தான் இதனைத் தீட்டியிருக்க முடியும் என்று ஆணித்தரமான எண்ணம் அவன் உள்ளத்தில் உதித்தது.




“ஆம்! அப்படித்தான் இருக்கவேண்டும்!” வில்லவன் அதரங்கள் அந்த வார்த்தைகளை உச்சரித்தன.

“ஆம் வில்லவா! இப்படித்தான் இருக்கவேண்டும்!” தன் உள்ளத்தில் ஓடிய எண்ணம் தன்னையுமறியாமல் வெளிப்பட்ட அந்த வார்த்தைகளையே திரும்ப ஒப்புவித்த நற்சோணை மாதேவியாரின் குரல் கேட்டுத் திரும்பினான்.

வில்லவனை அன்பு ததும்பும் விழிகளால் பார்த்த நற்சோணை மாதேவியார், அவன் கன்னங்களை இருகைகளாலும் வாஞ்சையுடன் பற்றிக் கொண்டார். “வில்லவா! உன்னை இப்படித்தான் காண ஆசைப்படுகிறேன்!” அந்த வார்த்தைகளைக் கூறும்போதே மாதேவியாரின் கண்கள் துளிர்த்தன.

“பாட்டி! என்ன இது? ஏன் மனம் கலங்குகிறீர்கள்?” தன் கன்னங்களைப் பற்றியிருந்த அவரது கரங்களை அன்புடன் பிடித்து தன் இருகரங்களின் இதமான பிடிக்குள் கொண்டுவந்தான்.

“கலங்காமல் எப்படி இருக்க முடியும்? வாளும் வேலும் விளங்க வேண்டிய உன் கரங்களில், ஏடும் எழுத்தாணியும் துலங்குகிறது! பொற்பூ மாலையும் ரத்தின ஆரமும் மிளிர வேண்டிய உன் உடலில் வறுமையான புலவனின் மலிவான துகிலாடை! இதென்ன கோலம்?” மாதேவியின் குரல் தழுதழுத்தது.

“காலத்தின் கோலம்! அதற்கேற்றபடி நான் போடும் தாளம்! வேறென்ன சொல்ல? சரி, அதெல்லாம் இருக்கட்டும்! தாங்கள் இப்படித் திடுமெனப் புறப்பட்டு முசிறிக்கு வரக் காரணம்?”

“என் பேரன்புப் பேரனைப் பார்ப்பதற்கு, நான் ஓடிவரக் காரணம் தேவையில்லை!”

“உங்களுக்கு வேண்டுமானால் காரணம் தேவையில்லாமல் இருக்கலாம்! ஆனால் முசிறிக்கு அடிக்கடி நற்சோணை மாதேவியார் வரும் காரணம் மக்களுக்குத் தெரிந்துவிட்டால் நிலைமை என்னவாகும்?”

“உனது நிலையை விடவா எனக்கு ஊர் நிலவரம் கலவரம் தந்துவிடப் போகிறது?” சொல்லி முடித்த மாதேவி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். அவரது உள்ளத்தில் குமுறும் அனலின் அழுத்தத்தின் விளைவாக அப்பெருமூச்சு எழுவதை உணர்ந்தான் வில்லவன்.

சிறிதுநேரம் அமைதி தேவை என்பதை உணர்ந்தவனாக வார்த்தைகள் உதிராமல் பார்த்துக் கொண்டான். நற்சோணை மாதேவியார் தன் கழுத்தில் கிடந்த ருத்திராட்ச மாலையைத் தொட்டு தன் கண்களில் ஒற்றிக் கொண்டார். பின்னர் அந்த மாளிகையின் மேற்குச் சாளரம் அருகே போய் அமைதியாக நின்றார். வில்லவனும் அமைதியைக் கலைக்காமல் அவர் அருகே சென்று நின்றான்.

அந்தச் சாளரத்தின் வழியே அவர்களது பார்வை அலைகடல்மீது அலையாடியது. சுள்ளியம் பேரியாறு கடலில் கலக்கும் முசிறித் துறைமுகத்துக்கருகே அமைந்திருந்த அந்த மாடமாளிகையின் உயரத்திலிருந்து பார்க்கும்போது முசிறியின் அழகு தெற்றென விளங்கியது.



சீனமும் கிரேக்கமும் வெகுவாய் புகழ்ந்துரைக்கும் சேரத்துறைமுகம் முசிறி! அதன் வளமுன் வனப்பும் உலகெலாம் பரவிப் பெரும்புகழ் பெற்றிருந்த செங்குட்டுவன் ஆளும் பொன்னான காலம்!




பொன்னொளி பாயும் குடக்கடலின் மாலைநேரம்!...

சேரமண்டலம் தொழுதேற்றும் நற்சோணை மாதேவியாருக்கு கண்ணீர் வழிந்தது கண்களின் ஓரம்!... அவர்களிடையே நிலவிய அமைதியைக் கலைத்தது ஒரு குரல்!

“மாதேவி...”

சற்றுத் தூரத்தில் திரைச்சீலையருகே பழச்சாறு நிரம்பிய தங்கக்குவளைகளை வெள்ளித்தட்டில் ஏந்தியபடி நின்றிருந்தாள் ஒரு அழகி!

குரல் கேட்டுத் திரும்பிய வில்லவன், தங்கச் சிலையைக் கண்டாற்போன்ற பிரமிப்பில் சிலையாகிப் போனான்.

மாதேவியார் கண்களைத் துடைத்தபடி "வா பொற்கொடி!" என அவளை நோக்கி வந்தார். மாதேவியாரிடம் ஏதோ கிசுகிசுத்தாள் பொற்கொடி.

"அப்படியா?" அந்த ஒற்றை வார்த்தையில் தொனித்தது ஒருவிதத் துடிப்பு!

"வில்லவா, இங்கேயே சற்றுப் பொறு! இதோ வருகிறேன்!" சொன்ன வேகத்தில் அந்தக் கூடத்தை அடுத்துள்ள அறைக்கு விரைந்தார் நற்சோணை மாதேவியார்.



வில்லவன், தன்னை நோக்கிப் பொற்சிலையென வந்து நின்ற பொற்கொடியை வைத்த கண் மாறாமல் பார்த்தபடியே நின்றான். அவளும் பார்வையை அவன் மீதே பதித்தபடி, வெள்ளித் தட்டை அவனை நோக்கி நீட்டியபடி நின்றாள்.

அவ்விருவரின் பார்வைப் பரிமாற்றத்தில், பலவிதமான எண்ணங்கள் தோன்றி ஆட்டுவித்தன.

ஒருவரை ஒருவர் மறந்து...
ஒன்றாய் உள்ளம் கலந்து...
ஒளி வானில் உயரப் பறந்து...
ஒய்யார கானம்பாடித் திரிந்து...
ஒன்றான இன்பத்தில் மகிழ்ந்து...
ஈருடல் ஒருயிராய் கலந்த நினைப்பில் இருவருக்குள்ளும் சிலிர்ப்பு!

ஒரு பளீர் மின்னல் கடக்கும் தொலைவு போல தொலைந்து போய் மீண்டார்கள் அவ்விருவரும். எல்லாம் ஒரு சில கணங்களில்...




"எடுத்துக் கொள்ளுங்கள்!"

யாழின் இனிமையுடன் ஒலித்தது இந்த இன்பச்சிலையின் குரலா? சிலிர்ப்பு விலகாமல், அவள் நீட்டிய தங்கக் குவளையை ஏந்திக் கொண்டான்.

"நீ...." அவன் என்ன கேட்க விழைகிறான் என்பதை உணர்ந்தவளாக, அவள் பதிலளித்தாள்.

"ஆம்! நான்தான்!"

"நான்தான் என்றால்?"

"உங்கள் கேள்விக்கான பதில் என்று பொருள்!" முத்துப்பல் தெரிய அவள் காட்டிய நாணத்தில் அவனது மயக்கம் மேலும் அதிகரித்தது.

அழகின் மொத்த வடிவமும் நான்தான் என்பதுபோல எவ்வளவு கிறங்கடிக்கிறாள்? இப்படியொரு மயக்கும் பேரழகி நற்சோணை மாதேவியாரின் சேடிப்பெண்ணா? இல்லை! இருக்காது! இதில் ஏதோ மர்மம் இருக்கிறது! இவள் யார்?

"நான் யார் என்பது இருக்கட்டும்! தாங்கள் யார்?" அவள் வீசிய கேள்விக்கணையில் வில்லவன் திடுக்கிட்டுப் போனான். தன் மனவோட்டத்தை எப்படி இவளால் ஊகிக்க முடிகிறது? என்ன பதிலளிப்பது எனத் தெரியாமல் தடுமாறிப் போனான். அந்தத் தங்கச் சிலை மயக்கும் புன்னகையுடன் மீண்டும் வினவினாள்.

"சொல்லுங்கள்! தாங்கள் யார்?"

தன் தடுமாற்றத்தை மேலும் நீட்டிக்காமல் குரலில் சற்றே கம்பீரத்தைக் கூட்டிக் கொண்டான் வில்லவன்.

"இது உனக்குத் தேவையற்ற கேள்வி!" அவன் கூறிய வார்த்தைக்குத் துணுக்குற்றவள் சட்டெனத் தலைகுனிந்தாள்.

"மன்னியுங்கள்!" மெல்லிய குரலில் கூறியவள், திரும்பி நடக்க எத்தனித்தாள்.

"நில்!..."

அடுத்த நொடி, அடுத்த அடி வைக்காமல் அப்படியே நின்றாள். அவன் அவளை நோக்கி அடியெடுத்து வந்தான்.

அப்படியொரு வார்த்தை கூறியிருக்க வேண்டாமோ? இருவரும் ஒரே நேரத்தில், ஒரே கோணத்தில் தங்களுக்குள் நினைத்துக் கொண்டனர். அவள் மெதுவாய் திரும்பினாள். இருவரது விழிகளும் அவர்களது கட்டுப்பாட்டில் இல்லாமல் நேர்க்கோட்டில் சந்தித்துக் கதை பேசிக் கொண்டன. வில்லவன் முதலில் தன்னைக் கட்டுக்குள் கொண்டு வந்தான்.

"சற்று கடுமையாகக் கூறிவிட்டேன், என்னை மன்னித்துவிடு!"

"ஐயோ! தாங்கள் மன்னிப்பு கேட்பதா? மன்னியுங்கள்! நான்தான் உங்கள் மீதுள்ள..." என்றவள், சட்டெனத் தன் நாக்கைக் கடித்துக் கொண்டு பேச்சை நிறுத்தினாள்.

"என்ன? நீ சொல்ல வார்த்தைச் சொல்!" வில்லவனின் ஆர்வம் பொங்கியது. அவள் நாணினாள்.

"தங்கள் மீதுள்ள மதிப்பின் காரணமாக அவ்விதமாகக் கேட்டேன்!"

"என்ன? என் மீதுள்ள மதிப்பா? என்னைப் பற்றி உனக்கென்ன தெரியும்?" தன் ஏமாற்றத்தை வெளிக்காட்டாமல் வில்லவன் விரக்தியாய்ச் சிரித்தான்.

அவள் சிலநொடிகள் சிந்திப்பவள் போல் கண்களை மூடித் திறந்தாள்.

"தெரியும்! சிறிதளவு தெரியும்! தங்களைப் பற்றி நான் உணர்ந்தது ஒன்று!... எனக்கு உணர்த்தியது ஒன்று!... மக்கள் உரைப்பது ஒன்று!... மாதேவியின் உரைத்தது ஒன்று!... இதில் எதை நான் சொல்ல?" அவள் ஒவ்வொரு வார்த்தையையும் அமைதியாகவும் அழகாகவும் சொல்லக் கேட்டு அதிசயித்துப் போனான் வில்லவன்.

இவள் வார்த்தைகளைப் பயன்படுத்தும் அழகைப் பார்த்தால், இவளைப் பேச விட்டுக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் போலிருக்கிறதே!

"அடேயப்பா!... உணர்ந்தது... உணர்த்தியது... உரைப்பது... உரைத்தது... என்று ஏகமாய் பொடி வைக்கிறாயே... சரி, நீ சொல்ல விரும்புவதைச் சொல்! எதைச் சொல்கிறாய் என்று பார்ப்போம்!"

வில்லவனிடமிருந்து வெளிப்பட நேசப்புன்னகையைக் கண்டு அவளும் நாணத்துடன் குறுநகை புரிந்தாள்.

"முதலில் உன் பெயரைச் சொல்! பிறகு நீ சொல்ல வந்ததைச் சொல்!" "

"பொற்கொடி!"

"ஓ! மிகப் பொருத்தமான பெயர்! சொற்கொடி என்றும் அழைக்கலாம் போலிருக்கிறது!"

"இதோ! இந்த ஓவியத்தில் இருக்கும் வில்லவர் தாங்கள் தானே?" பொற்கொடி அந்த ஓவியத்தை நோக்கி கைநீட்டிக் கேட்டாள். வில்லவனின் பார்வை அந்த ஓவியத்தின் மீது மீண்டும் பதிந்தது. மீண்டும் வியப்பு எழுந்தது. தயக்கமும் மயக்கமுமாய் வார்த்தை வெளிவந்தது.

"நான்... என்றுதான் சொல்ல வேண்டும்! அதேநேரம் நானில்லை என்பதையும் சொல்ல வேண்டும்!"

"ஆனால், இதுதான் தாங்கள் என்று, அதாவது, இளவரசர் வில்லவன் இவர்தான் என்று சேரமண்டலம் சொல்லவேண்டும்!" பொற்கொடி சொன்ன அடுத்த நொடி, மின்னல் போலத் திரும்பினான் வில்லவன். மலைப்பு மலையளவு அவனுக்குள்!




"ஆம்! வாங்குவில் கொண்டு வேங்கையின் சீற்றத்துடன் பாயும் இவர்தான் இளவரசன் வில்லவன்! எதிர்க்க நினைப்போரின் எண்ணத்தை முனையொடித்து... எதிரிப்படையைச் சிதறடித்து... நாடிவந்த புலவர்க்கு பொன்பொருள் கொட்டிக்கொடுத்து... மக்களின் இதய சிம்மாசனத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும் சேரப்பெருங்குடியின் வீராதி வீரர் வில்லவன் என்று எதிர்காலத்தில் மக்கள் வாயாரப் புகழ வேண்டும்! அவ்விதமாக வாழ வேண்டியவர் இப்படி அரையாடை தரித்து, அரண்மனை வாழ்வை முறித்து, வீரவாழ்விலிருந்து தன்னைப் பிரித்து, கடந்த காலத்தின் விதியை நினைத்து, நிகழ்காலத்தில் தன் குடிப்பெருமையை மறந்து, எதிர்காலம் குறித்த நினைப்பேயின்றி இப்படி ஒதுங்கி வாழலாமா?" விறுவிறுவெனப் பேசிமுடித்து சற்றே மூச்செடுத்து கொள்ள நிதானித்தவளை, இன்னமும் மலைப்பு மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தான் வில்லவன்.

யார் இவள்? முக்காலத்தையும் உணர்ந்தவள் போல பேசுகிறாளே! முசிறி மக்கள் அறியாத இந்த இளவரசனை இவள் எப்படிக் கண்டுபிடித்தாள்?

"இவள் எப்படி என்னைப் பற்றி இவ்வளவு



பேசுகிறாள் என்றுதானே நினைக்கிறீர்கள்? நற்சோணை மாதேவியாரின் கண்ணீர் இவ்வளவும் தங்களுக்குப் புரியவைத்திருக்க வேண்டும். அவர் தங்களிடம் பேச நினைத்ததைத்தான் நான் கூறி இருக்கிறேன்” அவள் பேசப்பேச வில்லவனின் அதிர்ச்சி பன்மடங்குப் பன்மடங்குக் கூடிக் கொண்டிருந்தது.

“மலையகழ்க்குவனே!.. கடல்தூர்க்குவனே!... வான்வீழ்க்குவனே!...” என பட்டினப்பாலைப்பாடியபெரும்புலவர் உருத்திரங்கண்ணனார்க்கு பொன்னும் மணியும் ரத்தினமும் பதித்த சித்திர மண்டபத்தைப் பரிசாகக் கொடுத்த சோழ மாமன்னர் கரிகாலர்!... தமிழ் நிலத்து மக்கள் எந்நாளும் வளங்குன்றாப் பெருவாழ்வு வாழ, காவிரியில் கல்லணை எழுப்பி ஆயிரமாயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கும் அழியாப் புகழ் பெற்ற கரிகாலர்... இமயம் வரை சென்று தன் புலிக்கொடி நாட்டிய அப்பெருமகனாரின் வழித்தோன்றலான நற்சோணை மாதேவியார்... உங்கள் மேல் உயிரையே வைத்திருக்கிறார்! தன் குலப் பெருமை விளங்கச் செய்யும் குலக்கொடியான தாங்கள், தமிழுக்கு மட்டுமல்ல, தமிழ் நிலத்துக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்பதே நமது மாதேவியாரின் கனவு! ஒருவேளை தன் வாழ்நாளில் அந்தக் கனவு... வெறும் கனவாகவே போய்விடுமோ என்ற பெரும் கவலையில் தினந்தினம் அவர் உருகிக் கொண்டிருக்கிறார்! இந்த ஓவியம்தான் அவரை ஓரளவுக்கேனும் ஆற்றுப் படுத்தி வருகிறது என்பதைத் தாங்கள் அறிவீர்களா?”

கேள்வியுடன் நிறுத்திய அந்த பேசும் ஓவியத்தையும், கேள்விக்குரியதாய் விளங்கும் பேசாத ஓவியத்தையும் மாறிமாறிப் பார்த்தான் வில்லவன்.




அவனுக்குள் மின்னல் வெட்டி இடிஇடித்து மழை பொழிந்ததுபோல் எண்ண அலைகள் கரை புரண்டு ஓடிற்று. அந்த வண்ண ஓவியம் அவனுக்குள் எண்ணக் காவியம் படைத்தது!

அது வெறும் ஓவியம் அல்ல, தான் யார் என்று தனக்கே உரைக்கும் வீரகாவியம் என்பதை அவன் உணர்ந்தான். அந்த ஓவியத்தின் புலிப்பார்வை அவனுக்குள் ஊடுருவியதில் அவனும் அவ்வோவியத்தைப் புலிப்பார்வையுடன் நோக்கினான்.

அப்போது அங்கே வந்து நின்ற நற்சோணை மாதேவியார், அவனது பார்வையில் விழவில்லை! அவரும் அவனது கவனத்தைக் கலைக்க வில்லை!

கண்களின் குறிப்பால் பொற்கொடியை அருகில் அழைத்தார் மாதேவியார். வந்தவளை வாஞ்சையுடன் அணைத்து அவளது நெற்றியில் முத்தமிட்டார்.

“நாள் கணக்கில் நான் அன்புடன் ஓதியதை எல்லாம் ஒரு சில நொடிகளில் உன் வார்த்தைகளும்

இந்த ஓவியமும் வல்லவனுக்கு உணர்த்தி விட்டதாய் உணர்கிறேன்!" மாதேவியாரின் கண்கள் அன்பில் ஒளிர்ந்தன.

ஓவியத்தின் மீதிருந்து பார்வையை விலக்கிய வில்லவன், மாதேவியாரின் வார்த்தைகள் உண்மைதான் என்பதாக ஆமோதித்துத் தலையசைத்தான். மாதேவியார் மீண்டும் பொற்கொடியை அணைத்துக்



கொண்டார். அந்நேரம், வில்லவன் தன்னை அணைக்க மாட்டானா என பொற்கொடி மனதில் வெகுவாய் ஆற்றாமை அலை எழுந்தது. அந்த ஏக்கம் அவள் கண்களில் தெரிவதை, அவளது பார்வை வில்லவன் மீது பதிந்து திரும்பிய ஒரு நொடியில் மாதேவியார் உணர்ந்து கொண்டார்.

அதே நொடிப் பார்வையில் பொற்கொடியின் உள்ளத்தை வில்லவனும் உணர்ந்தான்.

"சொற்கொண்டு கவிதை உணர்த்தாதை, கற்கண்டு வார்த்தை உணர்த்தாதை, கலைநயமிக்க ஒரு படைப்பு உணர்த்தி விடும் இல்லையா வில்லவா?" மாதேவியார் கேள்விக்கு, தலைசாய்த்து அந்த ஓவியத்தைப் பார்த்தபடியே மறுமொழி சொன்னான் வில்லவன்.

"ஆம் பாட்டி! ஆயிரம் வார்த்தைகள் சொல்லாததை, ஒரு பார்வை சொல்வதைப் போல, ஒரு பெரும் காவியம் சொல்லாததை, ஒரு ஓவியம் சொல்லி விடும் என்பதை உணர்கிறேன்!"

மூவரின் விழிகளும் ஒன்றாய் அந்த ஓவியத்தின் மீது பதிந்தன. பேசாத அந்த ஓவியம் எதிர்காலம் குறித்து அவர்களிடம் பேசியது! ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காட்சியைக் காட்டியது.

"உண்மை! முற்றிலும் உண்மை! காற்றில் கரையும் சொற்களை விடவும் கலை வடிவம் கொள்ளும் சொற்கள் காவியம் சொல்லும்! காலத்தை வெல்லும்!"

நற்சோணை மாதேவியாரின் வார்த்தைகள் சத்தியமானவை என்பதற்கு அதன் பிறகான நாட்கள் சான்றாகி நின்றன.




சேர மன்னன் செங்குட்டுவன், புலவர் பரணரின் தமிழுக்காகத் தன் மகனையே பரிசிலாகக் கொடுத்தான். ஏடும் எழுத்தாணியும் ஏந்தி பரணரின் குடிலில் தமிழ் கற்கும் மாணாக்கனாகக் காலம் கழித்த சேர இளவரசன், மீண்டும் தன் குடிப்பெருமை விளங்க, செங்கோல் ஏந்தி நாடு சிறக்க ஆட்சி புரிந்தான். தானே ஒரு புலவனாக இருந்தபோதும், புலவர் பெருமக்களை காக்கும் கொடையில், மாரியாய்ப் பொழிந்த புரவலனாக விளங்கினான் என்பதைக் காலம் பின்னாளில் வரலாற்றுக் காட்சியாகக் காட்டி நிற்கிறது!

* * *

கதைக்கு விழுந்த விதை:

• சேரன் செங்குட்டுவன் மீது புலவர் பரணர் பாடிய பாடிய பதிற்றுப்பத்து.

• சோழ மாமன்னன் கரிகாலன் மீது புலவர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலை.

# மங்காத தமிழென்று

## திராவிட மொழிகளின் தாய்!

மனிதகுல நாகரிகத்தை முன்னெடுத்துச் செல்வதில், மகத்தான பங்களிப்பைச் செய்தவை மொழிகள்தான். நாடோடித் திரிதல், வேட்டையாடுதல், கால்நடை மேய்த்தல், கடல்மேல் சேர்தல், உழவு செய்தல் இந்த ஐந்து படிநிலைகளில் மனித நாகரிகம் கொஞ்சம் கொஞ்சமாக விரிவடையத் தொடங்கியது. காட்டுமிராண்டிகளின் கூடாரமாகக் காட்சியளித்த மனித இனம், வேட்டையாடுதலின் மூலம் ஒரு வேட்டைச் சமூகத்தையே தன் இதயத்தில் தாங்கி நகர்ந்தது. அதன் முன்னர் நாடோடியாகத் திரிந்து பல்வேறு கால தட்பவெப்ப நிலைகளில் தன் உடல் தாங்க, மனம் ஏங்க புதியவற்றை கற்றுக் கொண்டது.

பின்பு நாகரிகம் வளர்ந்து, ஆடு, மாடுகளை தன்னகத்தே தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, மேய்ச்சல் சமூகமாக நாகரிகம் விரவியது. பின்னர் விரிந்து பரந்த கடற் பகுதிகளில் மீன் உள்ளிட்ட உயிரினங்களை வேட்டையாடி, அதில் தானும் உண்டு, பிறருக்கும் வழங்கி, அதன் மூலம் ஒரு பண்டமாற்று நாகரிகத்தை நோக்கி நகர்ந்தது. அதன் பின்பு விவசாயம் செய்ய விதைத்தல் மூலமாக, விவசாய நாகரிகத்தைக் கற்றுணர்ந்தான்.

தனக்குத் தோன்றிய கருத்துக்களை பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும். முதலில் தம் எண்ணங்களை, மெய்ப்பாடுகள், சைகைகள், ஓவியங்கள் போன்றவற்றின் மூலமாக பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர். இவற்றின் மூலம் பருப்பொருள்களை (கண்ணில் காணக்கூடிய, தொட்டு உணரக்கூடிய பொருள்கள்) மட்டுமே ஓரளவு உணர்த்த முடிந்தது. நுண் பொருள்களை உணர்த்த இயலவில்லை. அதனால், ஒலிகளை உண்டாக்கி பயன்படுத்தத் தொடங்கினர். சைகையோடு சேர்ந்து பொருள் உணர்த்திய ஒலி காலப்போக்கில் தனியாகப் பொருள் உணர்த்தும் வலிமை பெற்று மொழியாக வளர்ந்தது.




மனித இனம் வாழ்ந்த இட அமைப்பும், இயற்கை அமைப்பும் வேறுபட்ட ஒலிப்பு முயற்சிகளை உருவாக்கத் தூண்டின. இதனால் பல மொழிகள் உருவாகின. உலகத்தில் உள்ள மொழிகள் எல்லாம் அவற்றின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில், மொழிக் குடும்பங்கள் பலவாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 1,300—க்கும் மேற்பட்டது எனலாம். இவற்றை நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கின்றனர். அவை 1.இந்தோ ஆசிய மொழிகள்; 2.திராவிட மொழிகள்; 3.ஆஸ்திரோ ஆசிய மொழிகள்; 4.சீன திபெத்திய மொழிகள் என்று அழைக்கப்படுகின்றன. பல மொழிகளும் இங்கு பேசப்படுவதால், இந்திய நாடு மொழிகளின் காட்சி சாலையாகத் திகழ்கிறது என்று அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார். உலகின் குறிப்பிடத்தக்க பழைமையான நாகரிகங்களில் இந்திய நாகரிகமும் ஒன்று. மொகஞ்சதாரோ, ஹரப்பா அகழ்வாய்வுக்குப் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதை திராவிட நாகரிகம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி எனப்படுகிறது. திராவிடம் என்ற சொல்லை முதன் முதலில் குறிப்பிட்டவர், குமரிலப்பட்டர். தமிழ் என்ற சொல்லில் இருந்துதான் "திராவிடா' என்ற சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

ஈராஸ் பாதிரியார் என்பார் இம்மாற்றத்தை தமிழ், தமிலா, தமிழா, டிரமிழா, ட்ரமிழா த்ராவிடா, திராவிடா என்று உணர்த்துகின்றார். முதலில் பிரான்சிஸ் எல்லீஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து, இவை தனி ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார். இந்த மொழிகளை ஒரே இனமாகக் கருதி, தென்னிந்திய மொழிகள்

சங்கே

# முழங்கு!

வைகைச்செல்வன்

எனவும் பெயரிட்டார்.

இதனையொட்டி மால்தோ, தோடா, கோண்டி முதலான மொழிகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஹோக்சன் என்பார் இந்த மொழிகள் அனைத்தையும் இணைத்து, “தமிழியன்’ என்று பெயரிட்டதோடு, மற்ற மொழிகளில் இருந்து இவை மாறுபட்டவை என்றும் கருதினார். மாக்ஸ்முல்லரும் இதே கருத்தைக் கொண்டிருந்தார். 1856—இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்டுவெல், பல்வேறு

**உலகத்தில் ஏழு அதிசயங்கள் உள்ளது என்று சொல்கிறார்கள்... எனக்கு ஒரே அதிசயம் என் தமிழ் மொழி மட்டுமே!**

இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி, திராவிட மொழிகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகளையும் எடுத்துரைத்தார். கால்டுவெல்லுக்குப் பின்னர், ஸ்டென்கெனா, கே.வி.சுப்பையா, எல்.வி.ராமசாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சிசுந்தரம் முதலான அறிஞர்கள், மொழி வழியான ஆய்வுகளுக்கு பங்களிப்புச் செய்தனர்.

மொழிகள் பரவிய நில அடிப்படையில், தென் திராவிட மொழிகள், நடு திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என மூன்றாக திராவிட மொழிக் குடும்பம் வகுக்கப்பட்டுள்ளது. இவற்றில் தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, கோத்தா, தோடா, கொற்றகொரகா, துளுவம், குடியா ஆகியவை தென் திராவிடம் என்றும், தெலுங்கு, கூயி, கூவி, கோண்டா, கோலமி, நாய்கி, பெங்கூ, முன்டா, பர்ஜி, கதபா, கோண்டி, கோயா ஆகியவை



நடு திராவிடம் என்றும், குருக், மால்தோ, பிராகுய் ஆகியவை வட திராவிடம் என்றும் பிரிக்கப்பட்டுள்ளது;

மேலும் அண்மையில் கண்டறியப்பட்ட எருகளா, தங்கா, குரும்பா, சோளிகா ஆகிய நான்கு மொழிகளையும் சேர்த்து, திராவிட மொழிகள் மொத்தம் 28 என்றும் கூறுவர்.

திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டதாகவே காண முடிகிறது. ஏனென்றால், சொற்களின் தவிர்க்க முடியாத பகுதிதான் வேர்ச்சொல் என்பதும், அடிச்சொல் என்பதும் ஆகும். இவற்றில் உதாரணமாக, அடிச்சொல் திராவிட மொழிகள் ஒன்றை உதாரணமாக நாம் காணுகிற போது, கண் என்பது தமிழில் கண்ணு மலையாளத்திலும், கன்னடத்திலும் மருகுகிறது.

இது போல் கன்னு, தெலுங்கிலும், குடகிலும் இவ்வாறாக தோன்றுகிறது. குருக் மொழியில் ஃகன் என்றும் பர்ஜி மொழியில் கெண் என்றும், தோடா மொழியில் கொண் என்று தோன்றுகிறது. ஆக, இதன் அடிச்சொல் என்பது தமிழில் இருந்துதான் தோன்றியது என்பதை ஓர் ஆய்வின் தரவுகள் நமக்குச் சொல்லுகின்றன.

மேலும், ஒரு சான்றாக தமிழில் மூன்று என்று எண்ணைக் குறிப்பிடுகிறோம். மலையாளத்தில் மூணு என்றும், தெலுங்கில் மூடு என்றும், கன்னடத்தில் மூரு என்றும், துளுவில் மூஜி என்றும் அழைக்கப்படுகிறது. இம்மொழிகளுக்கெல்லாம் மூலம் தமிழ் மொழியில் இருந்துதான் எழுத்துக்களாக உருவாகி இருக்கிறது என்பது கண்டறிந்த ஆய்வுகளாகும்.

திராவிட மொழிகளில் உயிரெழுத்தில் இருந்த குறில், நெடில் வேறுபாடுகள், வேறுபடுத்த துணை செய்கின்றன. இவற்றில் பொருள் தன்மையை ஒட்டி பால் பாகுபாடு, திராவிட மொழிகளில் அமைந்துள்ளது. ஆனால், வடமொழியில் இவ்வாறு அமையவில்லை. உயிரற்ற பொருள்களும், கண்ணுக்கே புலப்படாத நுண்பொருள்களும் பால்பாகுபாடு படுத்தப்படுகின்றன. இம்மொழிகளில், கைவிரல்கள் பெண் பால் என்றும், கால் விரல்கள் ஆண் பால் என்றும் வேறுபடுத்தப்படுகின்றன. திராவிட மொழிகளில் அவ்வாறாக இல்லை.

இவற்றில் ஆண் பால், பெண் பால் என்ற பகுப்பு உயர்திணையில் ஒருமையில்தான் காணப்படுகிறது. பன்மையில் அமையப் பெறவில்லை. அஃறிணைப் பொருள்களைப் பொருத்த மாத்திரத்தில், ஆண், பெண் என்ற பால் அடிப்படையில் பகுத்தாலும், அவற்றுக்கென பால் காட்டும் விகுதியில் அமையப் பெறுவது இல்லை. இவற்றில் கடுவன் — மந்தி, களிறு — பிடி என்பது நாம் எடுத்துக்காட்டாகப் பார்க்கலாம்.

இவற்றில் ஒரு படி மேலாகப் போய்ப் பார்த்தோமானால், ஆங்கிலம் போன்ற மொழிகளில், வினைச்சொற்கள் காலத்தை மட்டுமே காட்டும். இவற்றுள் திணை, பால் + எண் ஆகியவை வேறுபாட்டைக் காட்டுவதில்லை.




திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் இவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன. வந்தான் என்பது, உயர்திணை ஆண் பால் ஒருமை என்பதை உதாரணமாக நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆனால், மலையாள மொழி இவ்வியல்புகளுக்கு மாறாக அமைந்துள்ளது; திணை, பால், எண் ஆகியவற்றில் பாலறி கிளவிகள் இல்லை. தனிச்சொற்களே ஆண், பெண் பகுப்பை அறிந்து கொள்ள முடியும். இவ்வாறாக, திராவிட மொழிகளில் சில பொதுப்பண்புகளும், சிறப்புகளும் பெற்றிருந்தாலும் அவற்றுள் தமிழுக்கு என்று சிறப்பும், தனித்தன்மைகளும் அமைந்திருப்பதே, தமிழுக்கு கிடைத்த மிகப் பெரும் பேறாகும்.

மலையாளத்தில் 12—ஆம் நூற்றாண்டில் ராமசரிதமும், 15—ஆம் நூற்றாண்டில் இலக்கணநூல் லீலாதிலகமும் அந்த மொழிக்கான பெருமைகளாகும். தெலுங்கில் 11—ஆம் நூற்றாண்டில் இலக்கியம் பாரதமும், 12—ஆம் நூற்றாண்டில் ஆந்திரா பாஷாபூசணமும் அந்த மொழிக்கான மூலமாகும். அதே போன்று, கன்னடத்தில் 9—ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கியம் கவிராஜமார்க்கம் ஆகும். இவை இந்திய இலக்கணக் கொள்கைகளின் பின்னணியில் தமிழ் இலக்கணம் உள்ளதற்குச் சான்றாக உள்ளன. தமிழ் மொழியைப் பொருத்தவரை, 2—ஆம் நூற்றாண்டு அளவில் சங்க இலக்கியமும், 3—ஆம் நூற்றாண்டு அளவில் தொல்காப்பியமும் நமது மொழிக்கான பெருமை குறித்த தரவுகளாகும். ஆக, இவற்றிலிருந்துதான் தென்னிந்திய மொழிகள் தோன்றியிருக்கின்றன என்பது பல்வேறு ஆய்வுகளின் சான்றுகளாகும்.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிஜி தீவு, தென்னாப்பிரிக்கா, மோரீஷஸ், பிரிட்டன், டயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் தொன்மையும், இலக்கண இலக்கிய வளமும் உடைய தமிழ் மொழி பேசப்படுகிறது என்பது மொழி குறித்தான பெருமைகளாகும். தனித்த இலக்கண வளமும், பிறமொழித் தாக்கம் குறைந்தும், திராவிட மொழிகளுக்குத் தாய் மொழியாகவும், சொல் வளமும், சொல்லாட்சி உடையதாகவும் தமிழ் உள்ளது. மேலும், இந்திய அளவில் கல்வெட்டுத்துறையின் ஆராய்ச்சியின் பெரும் பகுதி தமிழில் இடம்பெற்றுள்ளதும் தொன்மையான மூத்த மொழி தமிழ் என்பதும் ஆய்வாளர்களின் பார்வையாகும்.

தனித்தன்மை மாறுபடாமல் தன்னை புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாக தமிழ் மொழி விளங்குவதால், பல நூற்றாண்டுகள் கடந்தும் தழைத்தோங்கி விளங்குகிறது.

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.




*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



## தொடர்புகளுக்கு

*editor@ithamil.com*




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# பானைத் தெப்பம் 29

**சு**கரின் வரவேற்புக் குரலைக் கேட்டதும் மாமல்லரின் முகத்தில் புன்கையின் சாயல் தோன்றியது. சிவகாமி கிளியை அடிப்பதற்காகக் கையை ஓங்க, கிளி அவளுடைய அடிக்குத் தப்பி இறகுகளைச் சட சடவென்று அடித்துக் கொண்டு ஒரு வட்டமிட்டு வந்து சிவகாமியின் தோள்களில் உட்கார்ந்த காட்சி, அவருடைய முக மலர்ச்சியை அதிகமாக்கியது.




அச்சமயம் விஹாரத்தின் ஓரமாகப் பானைத் தெப்பத்தில் வந்து கொண்டிருந்த குண்டோதரனை மாமல்லர் பார்த்தார். கையில் சமிக்ஞையினால் "நில்லு!" என்று ஆக்ஞையிட்டார்.

அதே நேரத்தில் மேலேயிருந்து குனிந்து பார்த்த சிவகாமி, "அப்பா! இதோ குண்டோதரனும் வந்து விட்டானே! பானைத் தெப்பம் கொண்டு வருகிறான்!" என்று கூறிக் கையைக் கொட்டி மகிழ்ந்தாள். இரவெல்லாம் அவளுடைய மனத்தில் குடிகொண்டிருந்த கவலையும் பீதியும் மறைந்து இப்போது ஏதோ பெரிய வேடிக்கையில் ஈடுபட்டிருப்பது போன்ற குதூகலம் காணப்பட்டது.




தெப்பம் விஹாரத்தின் தூண்களின் மீது இடிக்காதபடி குண்டோதரன் அதைச் சாமர்த்தியமாகத் திருப்பி விட்டுக் கொண்டு மாமல்லரின் குதிரையண்டை வந்தான். "பிரபு! படகுக்கு வந்து விடுங்கள்!" என்றான்.

"யார் அப்பா நீ! எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே!" என்று மாமல்லர் கேட்டார்.

"சத்ருக்னனுடைய ஆள், சுவாமி!" என்று கூறிக் குண்டோதரன் தலைப்பில் முடிந்து வைத்திருந்த இலச்சினையைக் காட்டினான்.

"இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்?"

"என்னுடைய எஜமானர் உத்தரவின் பேரில் எட்டு மாதமாக இவர்களுடன் இருக்கிறேன், பிரபு!" என்றான் குண்டோதரன்.

"தெப்பம் எப்படி கிடைத்தது?"

"ஒரு வயோதிக புத்த பிக்ஷு தள்ளிக்கொண்டு வந்தார். அவரை வெள்ளத்தில் நான் தள்ளிவிட்டு இதைக் கொண்டு வந்தேன்!"

"பிக்ஷுவையா வெள்ளத்திலே தள்ளினாய்? அட, பாவி! ஏன் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்தாய்?"

"தெப்பத்தில் அவருக்கு இடம் காணாதென்று தான்! தங்களையும் சேர்த்துக் கணக்குப் பண்ணிப் பிக்ஷுவுக்கு இடம் காணாதென்று பிடித்துத் தள்ளினேன்!"

"நான் வருவேனென்று எப்படித் தெரியும்?"

"அதுகூடத் தெரியாவிட்டால் மஹேந்திர பல்லவரின் ஒற்றர் படையிலே இருக்க முடியுமா, பிரபு?

மாமல்லர் குதிரையின் முதுகிலிருந்து தாவி, பானைத் தெப்பத்தில் வெகு லாகவமாக ஏறிக்கொண்டார். பிறகு குதிரையின் முகத்தை இரண்டு தடவை தடவிக் கொடுத்து அருமை ததும்பிய குரலில், "தனஞ்செயா! எங்கேயாவது





ஓடித் தப்பிப் பிழைக்கப் பார். கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்!" என்று கூறினார்.

உடனே, தனஞ்செயன் என்னும் அந்தக் குதிரை, வெள்ளத்தில் வேகமாக நீந்திக் கொண்டு, மரங்கள் இரு வரிசையாகத் தண்ணீருக்கு மேலே தலை நீட்டிக் கொண்டிருந்த சாலையை நோக்கிச் சென்றது.

குண்டோ தரனும் மாமல்லரும் பானைத் தெப்பத்தைப் பத்திரமாகச் செலுத்திக் கொண்டு விஹாரத்தண்டை சென்றார்கள். மேல் மச்சில் இருந்தவர்களைத் தெப்பத்தில் இறக்குவதற்கு வெகு பிரயாசையாகப் போய்விட்டது. முக்கியமாக, சிவகாமியின் அதிகத் தொந்தரவு கொடுத்தாள். சற்று முன்னால் வெள்ளத்திலே சாவதற்குத் துணிந்திருந்தவளுக்கு இப்போது உயிரின் மேலே அளவில்லாத ஆசையும் வெள்ளத்தைக் கண்டு பெரும் பயமும் உண்டாகி இருந்தன.

யார் முதலில் தெப்பத்தில் இறங்குவது என்பதிலேயே தகராறு ஏற்பட்டது. ரதியை முதலில் இறக்கப் பார்த்தார்கள் அது ஒ ரே



பிடிவாதம் பிடித்து இறங்குவதற்கு மறுத்தது.

ஆயனர் ரொம்பவும் வற்புறுத்திச் சொன்னதின் பேரில் சிவகாமி இறங்கச் சம்மதித்தாள். மேலேயிருந்து ஆயனரும் அத்தையும் பிடித்து இறக்க கீழே தெப்பத்திலிருந்து மாமல்லர் கைகளினால் அவளைத் தாங்கி இறக்கிவிட்டார். இறங்கியதும் தெப்பம் ஆடியபோது, சிவகாமி ரொம்பவும் பயந்து அலறினாள். மாமல்லர் அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உட்காரவைத்துத் தைரியம் சொன்னார்.

பிறகு, அத்தையும் ஆயனரும் இறங்கியபோது தெப்பம்

ஆடியதனாலும் சிவகாமிக்குப் பயம் ஏற்பட்டது. சுகர், மேலே வட்டமிட்டுக் கொண்டே இருந்தவர் எல்லோரும் தெப்பத்தில் இறங்கியதும், தாமும் வந்து ஒரு மூலையில் உட்கார்ந்து அண்ணாந்து பார்த்து, "ரதி! ரதி!" என்று கூவினார். அப்போது தெப்பம் கொஞ்சம் நகரவே, "ஐயோ! ரதியை விட்டு விட்டுப் போகிறோமே" என்று சிவகாமியும் சேர்ந்து அலறினாள்.

ரதி மேலேயிருந்து ஒரே தாவாகத் தாவித் தெப்பத்தில் குதித்தது. அதனுடைய முன்னங்கால் ஒன்று தெப்பத்துக்கு அப்பால் தண்ணீருக்குள் இறங்கிவிடவே, மறுபடியும் சிவகாமி, "ஐயையோ" என்று கூச்சலிட்டாள்.




எல்லோரும் உட்கார்ந்து எல்லாம் ஒழுங்கான பிறகு, குண்டோ தரன், "பிரபு! சற்றே படகை நிறுத்தி வையுங்கள். இதோ வந்து விடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு, தெப்பத்திலிருந்து குதித்து நீந்திக் கொண்டு, விஹாரத் துக்குள்ளே போனான்.




குண்டோ தரனுக்கு ஆபத்து வந்துவிடப் போகிறதே என்ற கவலை சிவகாமியைப் பிடித்தது. அவன் திரும்பி வருவதற்குள், நேரமாக ஆக அவளுடைய ஆர்ப்பாட்டமும் அதிகமாயிற்று.

கடைசியாகக் குண்டோ தரன் மேல் மச்சின் வழியாக எட்டிப் பார்த்து, "இதோ வந்துவிட்டேன்!" என்றான். அவன் கையிலே ஒரு மூட்டை இருந்தது. மூட்டையை முதலில் கொடுத்துவிட்டுக் குண்டோ தரனும் தெப்பத்தில் இறங்கியதும், "மூட்டையில் என்ன?" என்று ஆயனர் கேட்டார்.

அத்தை மூட்டையைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "அவல்!" என்று தெரிவித்தாள்.

"இந்த ஆபத்தான சமயத்தில்கூடக் குண்டோ தரன் வயிற்றுப் பாட்டை மறக்கவில்லை!" என்று சொல்லிச் சிவகாமி சிரித்தாள்.

"உங்களுக்குத்தான் என் விஷயம் தெரியுமே, அம்மா! நான் எது பொறுத்தாலும் பொறுப்பேன்; பசி மட்டும் பொறுக்க மாட்டேன்!" என்றான் குண்டோ தரன்.

"நல்ல முன் யோசனைக்காரன்!" என்றார் மாமல்லர்.

"சமயசஞ்சீவி என்றால் நம் குண்டோ தரன்தான்! பிக்ஷு அவல் வைத்திருந்தது உனக்கு எப்படி அப்பா தெரிந்தது?"

இப்படிக் குண்டோ தரனை எல்லோரும் பாராட்டிய பிறகு, தெப்பத்தில் ஒரு முனையில் குண்டோ தரனும், இன்னொரு முனையில் மாமல்லருமாக உட்கார்ந்து தெப்பத்தைச் செலுத்தினார்கள். விரைவாக ஓடிய வெள்ளத்தில் பானைத் தெப்பம் இலகுவாக மிதந்து சென்றது. ஆனால் வழியில் தென்பட்ட மரங்களில் மோதாமலும் வெள்ளத்திலே வந்த கட்டைகள் தாக்காமலும் தெப்பத்தை மிக ஜாக்கிரதையாக விட வேண்டியிருந்தது.

வானத்தில் மேகங்கள் இன்னும் குமுறிக் கொண்டிருந்தன. காற்றின் வேகம் குறைந்து போயிருந்ததென்றாலும், இலேசாக அடித்த காற்று உடம்பில் சில்லென்று பட்டது. அவ்வப்போது நீர்த் துளிகள் கிளம்பிச் சுரீரென்று மேலே விழுந்தன.

சற்று நேரத்துக்கெல்லாம் சிவகாமியின் பயம் பறந்து விட்டது. குதூகலமாய்ச் சிரிக்கவும் விளையாடவும் ஆரம்பித்து விட்டாள்.

"இப்படியே தெப்பத்தில் எத்தனை நாள் போய்க் கொண்டிருப்போம்?" என்று அவள் மாமல்லரைப் பார்த்துக் கேட்டாள்.

"ஏன்! கஷ்டமாயிருக்கிறதா?" என்றார் மாமல்லர்.

"இல்லை, இல்லை, இந்தத் தெப்போத்ஸவம் முடிந்து விடப் போகிறதே என்றுதான் கவலையாக

இருக்கிறது" என்றாள் சிவகாமி.

"முடியக் கூடாதா?"

"ஆமாம்; இப்படியே முடிவில்லாமல் என்றென்றைக்கும் வெள்ளத்தில் மிதந்து போய்க் கொண்டிருந்தால் என்ன?"

"ஒருவேளை நீ நினைத்தபடி நடந்தாலும் நடக்கலாம். இந்த வெள்ளம் நேரே சமுத்திரத்தில் போய்த்தான் சேரும். தெப்பமும் சமுத்திரத்துக்குப் போய்விட்டால்..."

"முடிவேயில்லாமல் மிதந்து கொண்டிருக்கலாமல்லவா?... ஒன்று மட்டும் சந்தேகமாயிருக்கிறது."

"என்ன சந்தேகம், சிவகாமி?"

"இதெல்லாம் கனவா, உண்மையா என்றுதான்".

"கனவு என்பதாக ஏன் உனக்குத் தோன்றுகிறது?"

"இம்மாதிரி தெப்பத்தில் ஏறி முடிவில்லாத வெள்ளத்தில் மிதந்து செல்வதாக அடிக்கடி நான் கனவு காண்பதுண்டு அதனாலேதான் இதுவும் ஒருவேளை கனவோ என்று சந்தேகப்படுகிறேன்."




"இந்த மாதிரி சம்பவம் ஒரு நாள் நேரிடக்கூடும் என்று நான் எப்போதும் எண்ணியது கிடையாது. ஆகையால் எனக்கு இது கனவோ என்று சந்தேகமாயிருக்கிறது."

"ஆனால் என்னுடைய கனவிற்கும் இப்போது நடப்பதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. கனவில் நான் காணும் படகிலே நானும் இன்னும் ஒரே ஒருவருந்தான் இருப்போம், இந்தப் படகிலே பலர் இருக்கிறோம்!"

"அந்த ஒருவர் யார்?"

"சொல்ல மாட்டேன்?"

பொழுது சாயும் சமயத்தில், கொஞ்ச தூரத்தில் பூமியும், பாறைகளும் மரங்களும் அடங்கிய காட்சி காணப்பட்டது. எப்போதும் முடிவில்லாமல் தெப்பத்தில் போய்க் கொண்டிருக்க ஆசைப்பட்ட சிவகாமிக்குக்கூட அந்தக் காட்சி ஆனந்தத்தை அளித்தது. ஒவ்வொருவரும் தத்தம் மகிழ்ச்சியையும் திருப்தியையும் பலவிதமாகத் தெரிவித்தார்கள். குண்டோ தரனுடைய முகத்தில் மட்டும் மலர்ச்சி காணப்படவில்லை.

"குண்டோ தரா! இது என்ன இடம் தெரியுமா? இங்கே நாம் இறங்க வேண்டியதுதானே?" என்றார் மாமல்லர்.

"ஆம், பிரபு! இறங்கவேண்டியதுதான் ஆனால் தீவின் ஓரமாக வெள்ளத்தின் வேகம் கடுமை என்று தோன்றுகிறது. பாறைகள் வேறே இருக்கின்றன!" என்றான் குண்டோ தரன்.

தெப்பத்தை அவர்கள் அத்தீவை நோக்கிச் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. தானாகவே வெள்ளத்தின் இழுப்பில் அகப்பட்டுத் தெப்பம் தீவை நோக்கிச் சென்றது. தீவை நெருங்க நெருங்க அதன் வேகம் அதிகமாயிற்று. கரையோரமாக நின்ற சிறு சிறு பாறைகள்




தெப்பத்திலிருந்தவர்களின் கண்களுக்குப் பிரம்மாண்ட மலைகளாகத் தோன்றின. பாறைகளின் மீது மோதாமல் தெப்பத்தைத் தீவின் ஓரமாய்ச் செலுத்துவதற்குக் குண்டோ தரனும் மாமல்லரும் தங்களாலான மட்டும் முயற்சி செய்தார்கள். ஆனால் தெப்பம் நேரே பாறையில் மோதுவதற்கே போவதுபோல் அதிவேகமாகப் போயிற்று. தெப்பத்திலிருந்தவர்கள் 'செத்தோம்' என்று தீர்மானித்தார்கள். சுகப்பிரம்மரிஷி அலறிக்கொண்டு பறந்து போய்ப் பாறையில் உட்கார்ந்து கவலையுடன் பார்த்தார். தெப்பம் பாறையில் மோதிற்று; பானைகள் சடசடவென்று உடைபட்டன. மூங்கில்கள் நறநறவென்று முறிந்தன. தெப்பம் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டுத் தபதபவென்று தண்ணீரில் மூழ்கிற்று.


(சபதம் தொடரும்)

# வேண்டும்

### ஈர நிலங்கள் மீது இரக்கம் காட்டுங்கள் !

பி“ஈர நிலங்களும் பருவகால மாற்றங்களும்‘ என்னும் மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆண்டு உலக ஈர நிலங்கள் விழிப்புணர்வு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

1971—ஆம் ஆண்டு பிப்ரவரி 2—ஆம் தேதி எஸ்கண்டர் பெரோஸ் தலைமையில் ஈரான் நாட்டின் ராம்சார் நகரில் 18 நாடுகள் கலந்து கொண்ட கூட்டத்தில் உலகளாவிய ஈர நிலங்களைப் பாதுகாக்கும் ஒப்பந்தம் கையழுத் திடப்பட்டது. அதை “ராம்சார் ஒப்பந்தம்‘ என்றும், அந்த ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்ட நாளான பிப்ரவரி 2—ஆம் தேதிதான் உலக ஈர நிலங்கள் விழிப்புணர்வு தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தியா இந்த ஒப்பந்தத்தை 1982—ஆம் ஆண்டு முதல் ஏற்றுக்கொண்டு தற்போது வரை உறுப்பினராக அங்கம் வகித்து வருகிறது.








இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம், ஈர நிலங்களின் தன்மையை அறிவார்ந்த பயன்பாட்டின் மூலம் அதனுடைய சூழலியல் தன்மை கெடாமல் பாதுகாத்து நிலைபெற்று நீடிக்கச் செய்வதாகும். உலகளவில் இதுவரை 2,331 ஈர நிலங்கள் “ராம்சார்‘ இடங்களாகவும், இதன் மொத்த பரப்பளவு 8,10,000 சதுர மைல்களாகவும் உள்ளன; இந்தியாவில் மொத்தம் 26 ஈர “ராம்சார்‘ இடங்கள் உள்ளன; இவற்றின் மொத்த பரப்பளவு 6,89,131 ஹெக்டேர்கள் ஆகும். தமிழகத்தில் கோடியக்கரை வன உயிரிகள் சரணாலயம் ஒன்று மட்டுமே “ராம்சார்‘ இடமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த பரப்பளவு 38,500 ஹெக்டர்கள் ஆகும்.

ஈர நிலங்கள் என்பவை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நீரால் மூடப்பட்டிருக்கும். இவை பெரும்பாலும் இயற்கையாகவோ அல்லது

# ஈரம்

## ரா. துரைபாபு

செயற்கையாகவோ நிலையான அல்லது பாயும் நீரோட்டம் கொண்டவையாகவோ இருக்கும். இவற்றுள் இயற்கையான ஈர நிலங்கள் என்பவை சதுப்பு நிலங்கள், கழிமுகங்கள், இயற்கை நீர் குட்டைகள், குளங்கள், ஏரிகள் முதலானவை. இத்தகைய ஈர நிலங்களை சேத்து நிலம், சகதி நிலம் என பொது மக்கள் அழைக்கின்றனர். அந்தந்த நாடுகளில் அந்தந்தப் பகுதிகளுக்கு உகந்த இன்றியமையாத, கணக்கிலடங்கா ஈர நிலங்கள் மத்திய—மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. உதாரணம், தமிழகத்தில் உள்ள வேடந்தாங்கல், பழவேற்காடு ஏரி, பள்ளிக்கரணை முதலானவை ஆகும்.








ஈர நிலங்கள் நமக்கு எண்ணில் அடங்காத பலன்களைத் தருகின்றன. கடல் அலைகளின் கோரத் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு, பல்வேறு வகையான உள்ளூர், வெளியூர் மற்றும் வெளிநாட்டுப் பறவைகளின் வாழிடம், சுற்றுச்சூழலில் உள்ள மாசுகளை உறிஞ்சிக் கொள்ளுதல், மண்ணரிப்பைத் தடுத்து நிறுத்துதல், வாடும் பயிருக்கு உயிர் நீராகச் செயல்படுதல், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துதல், நீர்வாழ் உயிரினங்களுக்கு உயிர் சூழலியல் இடமாகச் செயல்படுதல் உள்ளிட்டவை ஆகும்.

இத்தகைய பலன்களைத் தரும் ஈர நிலங்களின் இன்றைய நிலை என்ன தெரியுமா? ஏர் பூட்டி உழுத நிலங்களையும், ஏரியாக இருந்த நீர்ப் பாதைகளையும்,




பாதை தெரியாமல் ஓடிக்கொண்டிருந்த நீர் நிலைகளை கற்களை நட்டு கூறு போட்டு விற்று விட்டோமே... குப்பைகள் கொட்டும் இடங்களாகவும் தொழிற்சாலைகளின் கழிவு நீர் ஓடும் இடமாகவும் மாற்றிவிட்டோமே... வானைத் தொடும் கட்டடங்களை வானம் வழங்கும் அமிழ்தத்தைத் தேக்கி வைக்க இடம் இல்லாமல் கட்டி விட்டோமே... நீர் மண்டிப் போகையில் சேமிக்காமல் நீர் சுண்டிப் போகையில் போரில் அதைத் தேடுகின்றோமே... வரும் காலத்தில் வரும் போரே நீரால்...நிலவுக்கு ராக்கெட்டைச் செலுத்தும் நம்மால் இந்த ஈர நிலங்கள் மீது இரக்கம் செலுத்த முடியவில்லையே!

சென்னை பெருவெள்ளம், சுனாமியின் கோரத்தாண்டவம். இன்னும் சொல்லவேண்டுமென்றால், பருவமழையின்போது சென்னை போன்ற பெருநகரங்களில் வீடுகளில் ஏற்படும் வெள்ளம். இவையெல்லாம் எதனால்? ஈர நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, 20 மாடிக் கட்டடங்களாக மாற்றப் பட்டுள்ளன. ஏதோ ஊரில் குளங்களில் மீன்கள் செத்து மிதந்தன; பச்சை பசேல் என்று பாசிகளும் ஆகாயத்தாமரைகளும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. நீர் நிலைகளில் வேதிப் பொருள்கள் கலப்பதனால் நீரில் ஆக்சிஜன் குறைபாடு ஏற்படுகிறது; அதனால் உயிரினங்கள் இறக்கின்றன; இது நீர்வாழ் உயிரினங்களுக்கு மட்டுமல்ல; நமக்கும் இந்த நிலை கூடிய விரைவில் வர இருக்கிறது.




இன்றைக்குப் பெரும் ஒளியை வீசி கம்பீரமாய் நிற்கும் நகரங்கள் அனைத்தும் ஏதேனும் ஒரு ஈரநிலத்தின் மயான பூமிதான். உதாரணமாக, இன்று சென்னை நகரத்தின் அடையாளமற்ற ஆறாக மாறிவிட்டது அடையாறு. குப்பைக்கூளமாக மாறிவிட்டது பள்ளிக்கரணை. கவனிக்காமல் விட்டால், இன்னும் சில ஆண்டுகளில் பாலைவனமாகக்கூட பள்ளிக்கரணை மாறலாம். பல ஆண்டுகளுக்கு முன்பு படகு போக்குவரத்து நடை பெற்றுக் கொண்டிருந்த கூவம் ஆற்றில், இன்று நடந்து செல்ல முடியவில்லை. ஏனெனில் சாக்கடை, தொழிற்சாலைக் கழிவுகளின் துர்நாற்றம்.

மனிதர்கள், விலங்கினங்கள் என அனைத்து உயிரினங்களும் நிலைத்து நிற்க நீர் தேவை. அந்த நீரின் சேமிப்பு வங்கிகளாக விளங்கும் இந்த ஈர நிலங்களைச் சரிவரப் பாதுகாக்காவிட்டால் உயிரினங்களுக்கும் நீர்வாழ் மண்டலத்துக்கும் உள்ள தொப்புள் கொடி உறவு அறுந்து விபரீத விளைவுகளைச் சந்திக்க நேரிடும் .

கண்கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம் செய்து பலன் இல்லை. ஈர நிலங்கள் பாதுகாப்புத் திட்டங்களை பல கோடி ரூபாயில் அரசு செயல்படுத்தினாலும், தனி மனித விழிப்புணர்வை நாம் இன்னும் அடையவில்லை. இனி பணத்தைச் சாப்பிட முடியாது என்பதை மனிதர்களே உணர்ந்து கொள்ளுங்கள். அனைத்து உயிரினங்களுக்கும் உலகில் உள்ள அனைத்து வளங்களும் சொந்தமானவை. எனவே, இந்த விழிப்புணர்வு நாளில், ஈர நிலங்களைப் பாதுகாத்து பூமித் தாயை குளிரூட்டி நம்முடைய இரக்கத்தை அதன் மீது வெளிப்படுத்துவோம்!


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
10
AMAZING YEARS
Happy 10th Birthday
THANK YOU FOR YOUR SUPPORT




## நோயுறுதலும் நோயறிதலும் சித்த மருத்துவக் கருத்தாக்கங்களும் நெறிகளும்

எநோயுறுதலும் நோயறிதலும் சித்த மருத்துவக் கருத்தாக்கங்களும் நெறிகளும்

இந்தியாவின் மருத்துவ முறைகளில் பல சிறந்த சிகிச்சை முறைகள் மட்டுமன்றி அவற்றோடு பிணைந்த அரிய தத்துவங்களும் நோயாளிக்கும் வைத்தியருக்குமுள்ள உறவு பற்றிய நெறிகளும் பொதிந்திருப்பதைக் காணலாம். நவீனச் சிகிச்சைகள் மலிந்துவிட்ட இக்காலகட்டத்திலும் இம்முறைகள் வழங்கிவருவது பழமையின் மீதான வெறும் பிடிப்பாலல்ல; அவற்றிலுள்ள சிகிச்சை முறைகளின் சிறப்பாலும் வைத்தியத்தில் நோயாளிக்கும் முக்கியப் பங்கு வழங்கப்படுவதாலும்தான். ஆசிய மருத்துவ முறைகள் பற்றிக் கடந்த முப்பதாண்டுகளாக மானுடவியல், சமூகவியல் ஆய்வுகள் பல வெளிவந்துள்ளன. மேலைநாடுகளில் கிட்டத்தட்ட 60 சதவீதத்தினர் மாற்று மருத்துவ முறைகளை நாடுவதால் சமீபத்தில் ஆய்வுகள் பெருகியுள்ளன. அலோபதி முறையின் செயல்பாடுகளைப் பற்றியும் மருத்துவர்கள் நோயாளிகள் பற்றிய முடிவுகளை எதனடிப்படையில் எடுக்கிறார்கள், மருத்துவமனைகளில் மனித உறவுகள் எப்படியிருக்கின்றன என்றெல்லாம் பல கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

ஆரோக்கியம் குறித்த ஆர்வம் மிகுந்துவரும் இந்நேரத்தில் மருத்துவ முறைகளின் தத்துவக் கட்டமைப்பைப் பற்றியும் அவற்றின் செயல்பாட்டை அவை எப்படி வழிநடத்துகின்றன என்பது பற்றியும் தெரிந்துகொள்ளுதல் அவசியம். சமூகவியல் கண்ணோட்டத்தில், மருத்துவம் சார்ந்த அறிவியலைப் — குறிப்பாகப் பாரம்பரிய மருத்துவ முறைகளை — பற்றிக் கடந்த 20 வருடங்களாகத் தமிழ்நாட்டில் நான் செய்துவரும் ஆராய்ச்சி, சித்த மருத்துவர்களுடனான பேட்டிகள் ஆகியவற்றின் அடிப்படையில் இக்கட்டுரையை அமைத்திருக்கிறேன்.




மருத்துவத் துறையின் அடிப்படை நிலையில் நோயை அனுபவிப்பவன் ஒருவன், அதைக் குணப்படுத்தும் அறிவு படைத்தவனோ இன்னொருவன், அதாவது மருத்துவன். நோயுற்றவனுக்கு நோயின் அனுபவமிருக்கும், மருத்துவனுக்கோ நோயின் அனுபவமிராது. ஆனால் அதைப் பற்றிய அறிவு இருக்கும். நோயாளிக்குத் தன் உடலிலுள்ள நோய் பற்றிய அறிவு இருக்கவோ மருத்துவனால் நோயின் தன்மையை முழுவதுமாக உணரவோ முடியுமா? இவ்வாறு நோயின் அனுபவமும் அதைப் பற்றிய அறிவும் பிரிந்திருத்தல் மருத்துவத்தில் இயல்பு நிலை. இதை வெவ்வேறு மருத்துவ முறைகள் எப்படி அணுகுகின்றன?

இதை எதிர்கொள்வதிலுள்ள சிக்கல்கள் எவை? இவை மருத்துவனுக்கும் நோயாளிக்குமுள்ள உறவை எப்படிப் பாதிக்கின்றன? இத்தகைய கேள்விகள் மருத்துவ முறைகளை ஒப்பிட்டுப் பார்க்க வழிவகுக்கின்றன. சாதாரணமாக மானுடவியலில் அறிவியலையும் மந்திர மாயத்தையும் எதிர்நிலைகளாகக் காட்டி முன்னதை நவீன மேலைக் கலாச்சாரத்துடனும் பின்னதை மீதமுள்ள எல்லாக் கலாச்சாரங்களுடனும் தொடர்புபடுத்திப் பார்ப்பது வழக்கமாகயிருந்தது. ஆனால் இது போன்ற பாகுபாடுகள் உடற்கூறு பற்றி ஒற்றை நிலைப்பாடு தான் இருக்க முடியும் என்ற மூடநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது என இப்போது விளங்க ஆரம்பித்துவிட்டது. உறுப்புகளால் ஆன உடம்பு, உலகை நமக்குக் காட்டும் ஐம்பொறிகள், இவற்றைச் சேர்க்கும் மனம் இவை யாவும் ஒருங்கிணைந்த உயிர் பற்றி அறிவியல் பூர்வமான கோட்பாடுகள் பல இருக்க முடியும் என்ற புரிதலை விரிவாக்க நாம் புதிய அணுகுமுறைகளையும் பாகுபாடுகளையும் சமைக்க வேண்டியுள்ளது. மேலே சொன்ன கேள்விகளைப் புரிந்துகொள்ள நிபுணரைப் பிரதானமாகக் கொண்டவை, நோயாளியைப் பிரதானமாகக்கொண்டவை என மருத்துவ முறைகளை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பது என் கருத்து.




## வி. சுஜாதா

அலோபதி போன்ற மருத்துவ முறையில் நிபுணர் படித்தறிந்த அறிகுறிகளின் வாயிலாகவே நோய் அறியப்படுகிறது. நோயாளியின் வாதையுள் தொழில்நுட்பக்கருவிகளால் நிர்ணயிக்கக்கூடிய அறிகுறிகள் மட்டுமே நோயின் தன்மையைக் கண்டறிய எடுத்துக்கொள்ளப்படும். நோயாளியால் உணரப்படும் நோயின் குணம் நோய் முதல் நாடலில் முக்கியத்துவம் பெறாது. உதாரணத்திற்கு, ஒரு நபர் தனக்குள் எந்த



மாற்றத்தை உணராவிட்டாலும் இரத்தக்கொதிப்பு இருப்பதாகக் கருவி சொன்னால் அவர் மாத்திரை சாப்பிட்டாக வேண்டும். மாறாக, உடலில் வலி மிக அதிகமாகவும் தொடர்ச்சியாகவுமிருப்பினும் கருவிகள் கணக்கெடுக்க முடியாது போனால் அதை நோயாளியின் கற்பனை அல்லது மனநோய் என்று நிபுணர் கருதுவார்.

ஆக அலோபதி முறையில் நோய் பற்றிய நோயாளியின் அனுபவத்திற்கும் மருத்துவரின் அறிவுக்கும் இடைவெளி ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆங்கிலத்தில் நோயாளிக்கு ஏற்படுவதை சிம்ப்டம் (ண்தூட்ணீமீணிட்) என்றும் மருத்துவர் எடுக்கும் குறிப்பை சைன்ஸ் (ண்டிஞ்ணண்) என்றும் சொல்வார்கள். ஆரம்ப கால அலோபதியில் நோயாளியிடமிருந்து எடுக்கப்படும் மருத்துவக் குறிப்புகள் நோயாளியின் வருணனையை ஒட்டி இருந்தன (ண்தூட்ணீமீணிட்ண்), தொழில்நுட்பக் கருவிகள் பெருகப் பெருக அவற்றால் அளக்கக்கூடிய குறிகளே நோயின் அறிகுறிகள் என்றாகிவிட்டன. நோயுற்ற உறுப்பையும்




அதன் செயல்களையும் துல்லியமாக அளப்பதுதான் நோய் முதல் நாடல் என்று இப்போது ஏற்கப்பட்டுள்ளது. இம்முறையில் நோயாளியின் நோய் பற்றிய அனுபவமும் வருணனையும் முக்கியமல்ல, அல்லது இரண்டாம் பட்சம்.

உயிரற்ற சடலத்தினுள் காணும் உறுப்புகளின் கட்டமைப்பு பற்றிய அறிவைக் கொண்டு உயிருள்ள நோயாளிகளுக்கு மருத்துவம் செய்தல் அலோபதி முறையின் சித்தாந்தம். உயிரற்ற உடல் அறிவுக்கு வழி வகுத்தாலும், உயிருள்ள நோயாளியையும் சுய உணர்வற்ற சடலத்தைப் போன்ற பொருளாகக் கருத வேண்டிய நிர்ப்பந்தம் இம்முறையில் உள்ளது எனத் தத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர்.

இன்று காமாலை, பக்கவாதம் ஆகியன



நோய்களாக அறியப்படுவதில்லை. உள் உறுப்புகளின் கட்டமைப்பின் அளவுகளாகவே அறியப்படுகின்றன. உள் உறுப்புகளின் ரசாயனக் கூறுகள் வெவ்வேறு மனிதர்களில் வெவ்வேறான நோய்க் குணங்களைக் காட்டும். ஆனால் அந்த மனித வேறுபாடு அலோபதி நிபுணர்களுக்குத் தற்செயலானது. கருவி காட்டும் குறியே முதன்மையானது. இன்னும் சொல்லப் போனால் நோயாளி உணரும் நோய்க் குணத்திலிருந்து வேறுபட்டிருப்பதே அலோபதி மருத்துவத்தின் சிறப்பம்சம்.

மனிதனுடைய அனுபவத்தையும் கணிப்பையும் கருவிகள் அளவீடுகளாக்கி விடுவதால் அசல் நோயாளியே தேவையில்லை. பரிசோதனை முடிவுகள் கொண்ட நோயாளியின் ஆவணம் போதுமானது. அதாவது கருவிகள் ஒரு நிழல் நோயாளியை கேஸ் தாள்களில் உருவாக்குகின்றன. பரிசோதனைக் கூடம் முதல் மருத்துவர் அறை, மருத்துவக் கருத்தரங்குகள்வரையில் இந்த நிழல் நோயாளிதான் அறியப்படுகிறார். கருவிகள் உருவாக்கும் அளவீடுகளின் அடிப்படையில்தான் பல வேதியியல் மருந்துகளின் பலன்கள் பரிசோதிக்கப்படுகின்றன. இப்படிப் பரிசோதிக்கப்பட்ட பின் தரப்படும் மருந்து ஒத்துவராமல் பின்விளைவுகளை ஏற்படுத்துவதாக அசல் நோயாளிகள் சிலர் சொன்னால், அதை நிபுணர்கள் முக்கியமாகக் கருதமாட்டார்கள். பரிசோதனைக்கூடத்தில் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் ரசாயன மருந்துப் பொருட்கள் நிரூபணமாகின்றன. இவ்வாறு நிரூபிக்கப்பட்ட சிகிச்சை முறைகள் நிஜ உலகில் பலருக்கு ஒத்துக் கொள்ளாமல் போகலாம். மற்ற சில மருத்துவ முறைகளைப் போல் அலோபதிக்குத் தனி மனிதனின் ஒருங்கிணைந்த தேக/மன வாகு பற்றிய கருத்தாக்கம் இல்லை; அது உறுப்புகளின் கூட்டுச் சேர்க்கையாக உடம்பு முழுவதையும் பார்க்கிறது. ஒன்றேபோல் காணப்படும் உள் உறுப்புகளின் அடிப்படையில் அது பரிசோதனைக்கூடத்தின் முடிவுகளை உலகிலுள்ள அனைவருக்கும் உகந்ததாக அறிவித்துவிடுகிறது.




சோதனைக்கூடத்தில் கண்ட சில மருந்துகள் அசல் வாழ்க்கையிலும் சிறப்பாக வேலை செய்கின்றன. ஆனால் பரிசோதிக் கப்பட்ட சிகிச்சை முறைகள் பல அசல் நோயாளிகளுக்குத் தீங்கு விளைவிக்கின்றன. இத்தீய விளைவுகளை அலோபதி மருத்துவம் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை ஏதோ தனிப்பட்ட பிரச்சினையாகத் தள்ளிவிடும்.

அதாவது, மருந்து, சிகிச்சை, மருத்துவரால் அசல் நோயாளிக்கு விளையும் சேதம் பற்றிப் பெரும்பாலும் மருத்துவத் துறையினர் பேசுவதில்லை. நவீனச் சிகிச்சையில் உலகில் மிகவும் முன்னேறிய அமெரிக்காவில் சமூகப் பிரக்ஞையுள்ள மருத்துவர்கள் இது பற்றிய தமது ஆராய்ச்சிகளை, மருத்துவச் சிகிச்சையால் மரணம் என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளார்கள். அமெரிக்க மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளுள் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளின் தீய விளைவுகளால் பாதிக்கப்பட்டவர்கள் ஆண்டுக்கு 22 லட்சம் பேர். தேவையற்ற அறுவைச் சிகிச்சைகளுக்கு ஆளானவர்கள் ஆண்டுக்கு 75 லட்சம் பேர். மிக வேடிக்கையான தகவல் என்னவென்றால், மருத்துவச் சிகிச்சையால் இறந்தவர்களின் எண்ணிக்கை புற்று நோய், இருதய நோய் ஆகியவற்றால் இறந்தவர்களின் எண்ணிக்கையைவிட அதிகம். அதிர்ச்சியாக இருக்கிறதா ?

மருத்துவ நிபுணரையும் நிர்வாக அமைப்பையும் கேள்விகேட்கப் போதுமான தகவல்களும் பலமும் இல்லாத, நோயாளிகள் நிரம்பி வழியும் ஏழ்மை மிகுந்த நமது மருத்துவமனைகளில் இதுபோல் கணக்கெடுப்பில்லை; இருந்தால் அது இதைவிட அதிர்ச்சியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

(தொடரும்)

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

10 ANNIVERSARY

10th Happy Anniversary

10 Years

மனமார்ந்த நன்றி!!!


Thank you!!!

# தேனாறு

## அமுதும் நஞ்சும்

இளைஞர்களுடனான ஒரு கலந்துரையாடலின்போது மின்னலாய் ஒரு கேள்வி வந்துவிழுந்தது.

கண்களுக்கு மூடி இமைகள்; வாய்க்கு மூடி இதழ்கள்; மூக்குக்கும் செவிகளுக்கும் ஏன் மூடி இல்லை? இருந்திருந்தால்... என்று கற்பனை செய்துகொண்ட ஒருவர் சொன்னார்: எவ்வளவு திட்டினாலும் கவலைப்படாமல் காதை மூடிக் கொண்டு விடலாம். அதுமாதிரி துர்நாற்றம் வந்தாலும்... சொல்லி முடிப்பதற்குள் இன்னொருவர் குறுக்கிட்டார்: அவசரப்பட்டு மூடி, பின்னர் திறக்கமுடியாமல் மாட்டிக்கொண்டால்...?




மூச்சுத் திணறி... முன்னவர் சொல்லுகிறபோதே மூச்சுத் திணறல் ஏற்பட்ட நடுக்கம் எங்களுக்கு.




ஆட்டுக்கும் வாலை அளந்துதான் வைத்திருக்கிறான் ஆண்டவன் என்று பாட்டி சொல்லுவார். அதுபோலத்தான் இந்த மூடிகளும்போல... என்றார் ஒருவர்.

இல்லாதவற்றைப் பேசுவதைவிட, இருப்பதன் முக்கியத்துவத்தை முதலில் பேசுவோம் என்று வரையறுத்துக் கொடுத்தார் மற்றொருவர். பேச்சு கண்களைச் சூழ்ந்துகொண்டது.

நம்மைப் பொருத்த அளவில் நாம் கண்களாக மட்டும் அவற்றைக் கருதவில்லை; அன்பின் பெருக்கத்தில் அருமைக்குரியவர்களைக் கண்ணென்றுதான் குறிப்பிடுகிறோம். அம்மாவும் அப்பாவும் பாசத்தின் மிகுதியில் கண்ணே என்றுதான் கொஞ்சுகிறார்கள்.

காதல் மிகுதியில் இரு பாலரும் அழைத்துக் கொள்ளும் சொல்லும் அதுதான்; கண்ணன் என்றே கடவுளைக் குறிக்கிற வழக்கமும் உண்டு.

ஐம்பொறிகளில் கண்ணுக்கு அவ்வளவு முக்கியத்துவம். ஏனைய பொறிகளைச் செயல்படுத்துவதில் இது தலையாயது என்பதால்தான், இதற்குத் தலையில் தலைமையிடம் போலும்!

ஆபத்து நேருங்கால் உடன் பாதுகாத்துக்கொள்ள, இமைகள் தாமே வந்து இணைந்து காப்பது எத்தனை அழகு? என்று அனுபவித்துச் சொன்னார் ஒருவர்.

# பாயட்டும்

## கிருங்கை சேதுபதி

காணத்தகாதவற்றைக் கண்டாலும் உட்புகவிடாமல் தடுத்துக் கொள்ளவும் இமைகள் உதவும். ஆனால், அதற்கு இதயம் துணை நிற்க வேண்டும் என்றார் இன்னொருவர் தத்துவார்த்தமாக.

இதற்கிடையில், கண்கள் என்று சொல்வதா? கண்ணென்று சொல்வதா? என்றும் ஒரு கேள்வி எழுந்தது. கண்கள் என்பதுதான் சரி. ஆனால், கண்கள் இரண்டு என்றாலும் காட்சி ஒன்றாகத் தோன்றுவதாலே, கண்ணென்று சொன்னாலும் தப்பில்லை என்ற பதிலும் வந்தது.




எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு

என்று திருவள்ளுவர் கண்ணென்றுதானே காட்டியிருக்கிறார் என்ற சான்றையும் இணைத்துத் தந்தார்.

இனி என் முறை. சொல்லத் தொடங்கினேன்:

கண் என்றதும் காண்பவர்க்கு இருக்கிற கண் என்றுதான் பொதுவாகக் கருதுகிறோம். ஆனால், ஏற்கெனவே கண்ட ஒருவரின் கண்களில் இருந்து பெற்ற அனுபவத்தை மனக்கண் கொண்டு காணவும் அவ்வாறே கண்டு கற்றுப் பயணித்து உணரவும் இந்த எண்ணும் எழுத்தும் துணை நிற்பதனால் அதனைத் தந்தவரின் கண்ணையும் இணைத்துக் கருதலாம் என்று தோன்றுகிறது.




அதிலும் வாழும் உயிர்க்கு என்ற முடிப்பு இருக்கிறதே, அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. வாழ்ந்த அனுபவத்தின் பதிவாய் வரும் எழுத்தும் எண்ணும் வாழும் உயிருக்கு எந்த வாதையும் வராமல் காப்பதால், கண் ஆகியிருக்கிறது அல்லவா?

எண்ணும் எழுத்தும் கண்ணென்று கருதிப் பார்ப்பது மனிதர்க்கே பொருந்தும் என்பதற்கு இந்தப் பழமொழியும் திருக்குறளும் தக்க சான்றுகள். ஆனால், நடைமுறையில் இவற்றை அறிந்தவர்களே, நிலை தடுமாறி, கண்ணையும் கருத்தையும் தன்போக்கில் மாற்றிச் செல்லவிட்டு

அல்லல்படுவதை நினைக்கிறபோதுதான் வாய்க்கு மூடி வைத்த வகையையும் உணர முடிகிறது.

வாய்தான் அனைத்திற்குமான வாயில்; உண்பதற்கு மட்டுமின்றி, உலகத்தோடு ஒட்ட ஒழுகுதற்கும் உரையாடுவதற்கும் அதுதான் பெருந்துணை! இந்த இடத்தில் செவிக்கும் வாய்க்கும் இடையில் உணவை வைத்து ஓர் உண்மையை உணர்த்துகிறது திருக்குறள்.




செவிக்கு உணவு இல்லாதபோது சிறிது

வயிற்றுக்கும் ஈயப்படும் என்கிற குறளில் வயிறுதான் சொல்லப்படுகிறதேயன்றி, வாய் சொல்லப்படவில்லை. நாக்கு இருப்பதாகவே தெரியவில்லை. காரணம் சுவைத்துச் சொல்லவேண்டிய நாவின் பணியைச் செவிகள் தமதாக ஏற்றுக் கொண்டுவிட்டன. அதனால்தான்,




'செவியின் சுவை உணரா மாக்கள்

அவியினும் வாழினும் என்' என்றும் கேட்கிறது குறட்பா.

செவியின் சுவை உணராதவர்களை மக்கள் என்றே ஒப்புக் கொள்ள இசையவில்லை திருவள்ளுவர். அவர்கள் கால்முளைத்த உயிர்கள் ஆகிய மாக்கள் என்று (கால்நடைகள்) விலங்குகளின் பட்டியலில் சேர்க்கிறார்.

காரணம், ஓசைகளையும் ஒலிகளையும் கேட்டுக்கொள்கிற காதுகள் பிற உயிர்களுக்கு இருந்தாலும், உயிர்ப்பு நல்குகிற சுவையோடு கூடிய உணர்வு தருகிற வாய்ச்சொல் அமுது உண்கிற பேறு, மனிதவுயிர்களுக்கு மட்டுமே வாய்க்கும்.

ஆனால், வாழ்பவர்களுக்கோ இவை வழங்கும் சுவைகள் பல. வாய் நுகரும் சுவைகள் ஆறு. அவை, கைப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பாகிய இனிப்பு என்பதாக அமையும். ஆனால், செவி நுகரும் சுவைகள் இரண்டு. ஒன்று சொற்சுவை, மற்றொன்று பொருட்சுவை.

அவ்வளவுதான் என்று நினைத்துவிட முடியாதபடிக்கு, பொருட்சுவையை ஒன்பதாகக் கொண்டு காட்டுவார் பரிமேலழகர். அவை காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம் என ஒன்பதாக விரிகிறது. இந்தச் சுவை, சமைத்துத் தருகிற உணவால் அமைவதன்று. தானே சமைந்த சுவை. அதனால்தான், செவிநுகர் கனிகள் என்று கம்பன் சொல்லிக்காட்டுகிறான். இதற்கும் வேர் திருக்குறள்தான்.

'இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று' என்கிறது.

பழத்திற்கும் அடுத்த நிலை கனிதல். காய், பழுத்துப் பின்னர்க் கனியும். அந்தக் கனிவில் பெருகுவது கனிவு. அதன் வழிப் பிறப்பது கருணை. அது அருள்நிலை. அதனால் வாயினின்று வெளிப்படும் வாக்கு அருள்வாக்கு எனப் பெயர் கொள்கிறது. அதற்குத் துணையாகும் கருவி, நாக்கு. அமுது பரிமாறும் நிலையில் உயர்ந்துள்ள நாக்கு நஞ்சுபரிமாறல் தகாது என்று அருளாளர்கள் பலர் எச்சரிக்கிறார்கள். நாவினால் விளையும் தீமைகள் தீயினும் அஞ்சத்தக்க தீமைகளாகப் பெருகுகின்றன. இதனை, நாவினால் சுட்ட வடு என்று அடையாளம் காட்டுகிறது தமிழ். எதுவாக இருந்தாலும் அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிவிடாதே! என்று எச்சரிக்கை வாசகம்

வந்தது.

கண்டதையும் பார்க்கும் கண்ணும், கண்டதையும் பேசும் வாயும் தந்தவற்றையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்ளல் தகாது என்பதால்தான், இந்த மூன்று பொறிகளையும் ஒருங்கிணைத்து பின்வருமாறு முன்மொழிந்தார் திருவள்ளுவர்:




எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப் பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு’ என்று! அதனால்தான்,

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்றும் சொன்னார்.

கண்டு, கேட்டு, உண்டு. உயிர்த்து, உற்று அறியும் ஐம்பொறி நுகர்ச்சிகளுக்கும் அப்பால் பெற வேண்டியது, செம்பொருள் காணும் அறிவு! அதற்குப் பிறப்பு என்னும் பேதைமை நீங்க வேண்டும்! எத்தாயர் வயிற்றில் பிறந்தாலும் ஏற்றத்தாழ்வு கருதாது, ஒத்த தன்மையோடு காணத்தெரிய வேண்டும்; ஆண் பெண், மேற்குடி கீழ்க்குடி என்று பிறப்பால் பேதைமை காண்பதை நீக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்!

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்

செம்பொருள் காண்பது அறிவு என்கிறார் திருவள்ளுவர்!

இந்த அறிவு அற்றங்காக்கும் கருவி!

மூடி இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கப் பழகிக்கொண்டால், எழுமையும் ஏமாப்புடைத்து அல்லவா?

அடக்குவதுகூட, ஆபத்தாய் வெடிக்கும்; அதனால்தான், பக்குவப்படுத்தல் எனும் பொருளில், அவித்தல் என்கிறார் திருவள்ளுவர்.

பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க

நெறிநின்றார் நீடு வாழ்வார்! என வாழ்த்துகிறார் என்றேன் நான்.

இக்குறளில் இடம்பெறும் வாயில், பொய் என்ற இரு சொற்களைக் கொண்டு, யா காவாராயினும் நா காக்க எனக் கொள்ளலாமா? என, இந்த உரையாடலை முடித்துவைக்க முயன்றார், தொடங்கியவர்!

மெய்ப்பொருள் காண்பது அறிவு என்றேன் நான்! செம்பொருளா? மெய்ப்பொருளா? எனத் தொடங்கினார் மற்றொருவர்!




அதைப் பின்னர் பேசலாம்! என்று சொல்லாமலேயே எழுந்தோம்!

யா காவாராயினும்...! மௌனமாய் நினைத்ததை ஒருவர் நா காக்க என்று மொழிபெயர்த்தார்.

மேல் விளக்கம் தந்து நான் முடிக்க வேண்டியதாயிற்று.


மெய், வாய், கண், மூக்கு, செவி என இதுவரை சொல்லப்பட்டவை அனைத்தும் புறத்துறுப்புகள். இவற்றில் ஏதேனும் பழுதுநேர்ந்தாலும் பயன்படுத்துவதில் குறை நிகழ்ந்தாலும் சரிக்கட்டிக்கொள்ள இன்னொரு உறுப்பைத் திருவள்ளுவர் காட்டியிருக்கிறார் என்று நிறுத்தினேன்.

என்ன என்பதுபோல் அவர்களின் புருவங்கள் உயர்ந்தன. அது அன்பு என்று முடித்தேன். இதற்கு புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை அகத்துறுப்பு அன்பி லவர்க்கு? என்ற திருக்குறளே சான்று.

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

அடியெடுத்து
வைத்த
ஒவ்வொரு
ஆண்டிலும்...




















தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு


March 2016
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு


March 2017
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
நூற்றாண்டு
நாயகன்


March 2018
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
வித்தக வள்ளல்

# தமிழ்

## நற்றமிழரின் நாடித்துடிப்பு

### January




### February




### March

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

### April

| S | M | T | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

### May

| S | M | T | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### June

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

### July

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### August

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### September

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

### October

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

### November

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### December

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




editor@ithamil.com


10
NNIVERSARY
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
Happy
Anniversary
th
10
Years
மனமார்ந்த நன்றி!!!
Thank you!!!